KALKI 19.7.87 ரூ. 1.50

கல்கி



"தாயை இழந்தோம்; அரசின் தயவையும் இழந்தோம்!"

ஜவ்வாது மலைக்கு ஒரு விசிட்!

40 வயதுக்குப் பிறகே வாழ்க்கையை நீங்கள் முழுமையாக அனுபவிக்கத் தொடங்குகிறீர்கள். அந்த இனிய வாழ்க்கை, நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இருதய நோய் மற்றும் இதர நோய்களால் பாதிக்கப்படலாமா?

குடும்ப மேம்பாட்டுக்காக நீங்கள் முழு ஆற்றலையும் கடின உழைப்பையும் உரமாக்குகிறீர்கள். உங்கள் இலட்சியம் நிறைவேறும்போது நீங்கள் ஏறத்தாழ நாற்பது வயதை எட்டிப் பிடித்து விடுகிறீர்கள். சரி, உழைத்து உருவாக்கிய வாழ்க்கையை நீங்கள் முழுமையாக அனுபவிக்க வேண்டாமா?

நிச்சயமாக அனுபவிக்க வேண்டும். ஆனால், துரதிஷ்டவசமாக அந்த வயதில் தான் நீங்கள், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இருதய நோய் மற்றும் பல நோய் நொடிகளுக்கு ஆளாகி, வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்க முடியாமல் போய்விடுகிறது.

இந்த நோய்களுக்கு ஆளானால் என்ன செய்கிறீர்கள்? ஆங்கில மருத்துவரைக் கலந்து ஆலோசித்து தொடர்ந்து அல்லோபதி மருந்துகளை உட்கொண்டு, நிவாரணமும் பெறுகின்றீர்கள். ஆனாலும், தொடர்ந்து ஆங்கில மருந்துகளை உட்கொள்ளும்போது கூடவே சில பின் விளைவுகளும் ஏற்பட்டு உங்கள் உடல் சோர்ந்து போகலாம்.

இந்த பின் விளைவுகளில் இருந்து உங்களை விடுவிப்பதோடு, நோய் எதிர்ப்பு சக்தியாகவும் செயல்பட்டு உடம்பை வாழ்நாள் முழுதும் திடகாத்திரமாக வைத்துக் கொள்ளக்கூடிய ஊட்டச்சத்து மிக்க 'டானிக்' இப்போது உங்களுக்கு தேவை. அதுவே கிரௌன் காயகல்பம்.

கிரௌன் காயகல்பம் ஒரு டாக்டரின் நீண்டகால ஆராய்ச்சியின் விளைவால் உருவாக்கப்பட்டது.

கூடாது! நிச்சயமாகக் கூடாது! என்கிறது கிரௌன் காயகல்பம்



கிரௌன் காயகல்பத்தை தேர்ந்து எடுங்கள். காலமெல்லாம் ஆரோக்கியத்துடன் செயல்படுங்கள்:

இயற்கை தரும் மூலிகைகளிலிருந்து கற்ப மூலிகைகளைத் தேர்ந்தெடுத்து அதனுடன் தங்கம், வெள்ளி, இரும்பு முதலிய நவலோக பஸ்பங்களை தேவையான அளவில் கலந்து பிரத்யேக முறையில் வீரியப்படுத்தப்பட்டு கிரௌன் காயகல்பம் உருவாக்கப்படுவதால், இதர தயாரிப்புகளைக் காட்டிலும் அதிக திறனுடன் கிரௌன் காயகல்பம் செயல்படுகிறது. மேலும், நோய் எதிர்ப்பு சக்தியாக செயல்படும் பல அரிய மூலிகைகள் கிரௌன் காயகல்பத்தில் சேர்க்கப்படுவதால், சிறுவயதிலிருந்தே தினசரி 'டானிக்' ஆக கிரௌன் காயகல்பத்தை உட்கொண்டு வருவது நல்லது. சுருங்கக் கூறின், குடும்பத்தில் ஆண், பெண், குழந்தைகள்...எல்லா வயதினருக்கும் ஏற்றதொரு சிறந்த ஊட்டச் சத்துமிக்க 'டானிக்' கிரௌன் காயகல்பம்.

செயற்கை ஹார்மோன்கள், போதைப் பொருட்கள் மற்றும் மிருகக் கொழுப்புகள் சிறிதளவும் சேர்க்கப்படாமல் சுத்தமான முறையில் தயாரிக்கப்படும் ஒரே மூலிகை 'டானிக்' கிரௌன் காயகல்பம். பத்தியம் எதுவும் இல்லை!

கிரௌன் காயகல்பம்

தயாரிப்பாளர்கள்:

கிரௌன் ஹெர்பல் ப்ராடக்ட்ஸ்

55, ஹாரிஸ் சாலை, சென்னை-2.

Ph: 561974/562256

எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும்.

அந்தப் பையனுக்குப் பதினெட்டு வயதுக்குள்தான் இருக்கும். ஆனால் கண்களில் நாற்பது வயதைத் தாண்டிய அனுபவச் சலிப்புத் தெரிந்தது. விவரிக்க இயலாத சோகமும் நிச்சயமின்மையும் தெரிந்தன. இந்த முகபாவம் கிட்டத்தட்ட அந்தப் பெரிய கூடத்தில் குழுமியிருந்த எல்லா இலங்கைத் தமிழர்களின் முகத்திலும் இருந்தது.

முந்தைய இரவு தலைமன்னாரிலிருந்து புறப்பட்டு ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பல்களின் பார்வையிலிருந்து தப்பிப் பதுங்கிப் பதுங்கி வந்த இரண்டு படகுகளில் ராமேஸ்வரம் வந்து சேர்ந்திருந்த அகதிகள் அவர்கள்.

அவர்களது வருகையைப் பதிவு செய்வதிலும், தடுப்பு ஊசி கொடுப்பதிலும், அவர்களது சாப்பாட்டுக்கு வசதி செய்வதிலும் பிறகு மண்டபம் முகாமுக்கு அனுப்ப ஏற்பாடு செய்வதிலும் 'ஸ்ரீலங்கா அகதிகள் வரவேற்பு மைய'த்தில் நமது அதிகாரிகள் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள்.

இதற்கு நடுவில் புகுந்து அகதிகளின் வாய் மூலமாக நான் கேட்ட சோகக் கதைகள் அநேகம்.

''என் பெயர் ஏகாம்பரம் ரவி'' என்கிறான் அந்தப் பையன்.

மன்னாரைச் சேர்ந்தவன். தொழில் கடத் தொழில் (மீனவம்). அவனையும் ஒரு முஸ்லிம் பொடியனையும் (சிறுவன்) விடுதலைப் புலிகளின் ஆட்கள் என்று சிங்கள ராணுவக்காரர்கள் பிடித்துப் போனார்களாம். உத்தரத்தில் தலைகீழாகக் கட்டி அடித்தார்களாம். இடது மணிக்கட்டிலிருந்து முழங்கை வரை இருந்த ரணத்தைக் காண்பித்தான். ''வலி பொறுக்காமல், இயக்கத்தைச் சேர்ந்தவன் என்று சொன்னேன்!'' என்றான்.

அவன் சொல்வது உண்மைதானா என்று பரிசோதிக்க, துப்பாக்கியைப் பிரயோகித்துக் காண்பிக்கச் சொன்னார்களாம். இவனுக்கு உபயோகிக்கத் தெரியாமையால் விட்டு விட்டார்களாம். அந்த முஸ்லிம் பொடியன் என்ன ஆனான் என்று தெரியாதாம்.

தும்பளை கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ண வேணியின் முகத்தில் மிகுந்த வேதனையும் புதுச் சூழலினால் குழப்பமும் தெரிந்தன. தன் பிள்ளை, பெண்ணுடன் தப்பி வந்திருந்தார்.

அவருக்கு நான்கு மக்கள். ''யாழ்ப்பாணத்திலே இப்ப யாரும் இருக்கவே இயலாது. ஆனாலும் குடும்பம் மொத்தமும் வழுக்கிடவும் (தப்பிவர) இயலாது. போட்டுக்குத் தலைக்கு ரூ. 1,300 தரணும். சொத்தும் போய், வீடும் போய் இருக்கிற நிலைமையிலே அத்தனை பணத்துக்கு எங்கே போக?'' என்றார்.

பரமேசுவரி ஜாஃப்னாவில் ஒரு பள்ளி ஆசிரியை. ''யாழ்ப்பாணத்தில் இப்பொழுது பள்ளிகளே நடப்பதில்லை'' என்றார். காரணமில்லாமலேயே படிக்கிற பிள்ளைகளை ராணுவம் பிடித்துக் கொண்டு போகும். ''நீ கொட்டியாவா?'' (விடுதலைப்புலியா?)



* இராமேஸ்வரம் வரும் அகதிகள்.....

அடைக்கலம் தேடிவரும் அகதிகள்

வாஸந்தி



* இராமேஸ்வரம் வந்த அகதிகளுக்கு மருத்துவப் பரிசோதனை



* காங்கேசன் துறையில் அழிக்கப்பட்ட தமிழர் வீடுகள்...

என்று கேட்டுக் கட்டி வைத்து உதைக்கும். ராணுவம் செய்யும் அக்கிரமத்துக்கு அளவேயில்லை. சாப்பாடு போடாமல் வெறும் கடத்தண்ணியைக் (உப்புத் தண்ணீர்) குடிக்கக் கொடுப்பாங்க...

"மெத்தக் கரைச்சல் (பிரச்னை) அம்மா. இதோடு தமிழகத்துக்கு இப்படிப் பொது மக்கள் பெருவாரியா 'வழுக்கிட'றதை இயக்கங்கள் தடுக்கிறாங்க, தங்க பலம் குறைஞ்சிடும்னு..." என்றும் குறைபட்டுக் கொண்டார்.

இவர்கள் இயக்கங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்?

பெண்கள் தயக்கத்துடன் நின்றார்கள். "என்னத்தைச் சொல்றதும்மா? ஒண்ணும் புரியல்லே. எங்களுக்கு எப்படி விடிவு காலம் வரும் என்டு தெரியலே. எங்களுக்கு நிம்மதி வேணும், எந்த வகையிலாவது.

"தனித்தமிழ் ஈழம் கிடைத்தால்தான் நிம்மதி" என்றான் ஒரு சிறுவன் இடையில் புகுந்து. "அதுவும் இயக்கங்களுடைய போராட்டத்தினால்தான் இயலும். இனிச் சிங்களத்தானுடன் சேர்ந்து இருப்பது என்பது இயலவே இயலாது." என்றான்.

அவனுக்குப் பதினெட்டு வயதுக்குள்தான் இருக்கும். பார்வையில் தீட்சண்யமும் பேச்சில் தீவிரமும் தெரிந்தன. ப்ளஸ் டூவுக்கு ஒப்பான A. L. (Advanced Level) வரை படித்திருப்பதாகச் சொன்னான். ஒவ்வொரு நிமிஷமும் வேறு சிந்தனையே இல்லாதவன்போல், அந்தச் சிறுவன் — ஜஸ்டின், இடுஇடுவென்று பேசினான்...

"சரித்திர காலமாய்ச் சிங்களவர்களுக்குத் தமிழனைக் கண்டால் பிடிக்காது. சிறு வயதிலிருந்தே சிங்களச் சிறுவர்களின் மனத்தில் இந்த வெறுப்பை வளர்க்கிறார்கள். பாடப் புத்தகங்களில் தமிழனை இளப்பமாகச் சித்திரிக்கிறார்கள். கதைகளில் வரும் போக்கிரிகள், ஏமாற்றுக்காரர்கள், திருடர்கள் எல்லாம் தமிழர்கள். அதனால் பொது மக்களுக்கும் எங்கள்மேல் கருணை இல்லை. பள்ளிகளில் தமிழனுக்கு இடம் கிடையாது. வேலை வாய்ப்புக் கிடையாது. எங்களுக்கு விளையாட்டுக் கிடையாது. கலாசார நிகழ்ச்சிகளை நாங்கள் கண்டதில்லை. இளமைப் பருவத்தின் சந்தோஷங்களை நாங்கள் அனுபவித்ததேயில்லை..."

"இதற்கெல்லாம் என்ன தீர்வு என்று நினைக்கிறீர்கள்?"

"தனித்தமிழ் ஈழம் கிடைக்கிற வரை போராட்டம்தான்... கடைசி வரை! படித்தவர்கள் எல்லாம் இயக்கங்களிலே இருக்கிறார்கள்..."


"ஏகப்பட்ட இயக்கங்கள் இருக்கின்றனவே? எதை என்று தேர்ந்தெடுப்பார்கள்?"

ஜஸ்டின் முகத்தில் சின்னத் தயக்கம் தெரிந்த போது, அருகிலிருந்த இன்னோர் இளைஞன், "தமிழரைக் காட்டிக் கொடுக்கிற தமிழர்களே இருக்கிறார்கள்" என்று முணுமுணுத்தான்.

"விடுதலைப்புலிகளுக்குத்தான் நிறைய ஆதரவாளர்கள்" என்றான் ஜஸ்டின்.

"அந்த ஆதரவெல்லாம் செயற்கையானது. இயற்கையானதில்லை" என்றான் இன்னோர் இளைஞன், ஆவேசத்துடன்! வயது இருபத்து மூன்றாம்! ஆனால் வார்த்தைகளில் முதிர்ச்சியும் வெறுப்பும் சலிப்பும்

* இந்தியக் கப்பல்கள் எடுத்துச் சென்ற உணவுப் பொருள்கள் காங்கேசன் துறையில் இறக்கப்படும் காட்சி



வயதை மீறியவையாக இருந்தன.

"இயக்கங்கள் ஆரம்பித்த காலத்தில் நல்ல கொள்கைகள் இருந்தன. பதவி மோகம் வந்து தலைமைப் பீடத்துக்கு ஒவ்வொருத்தனும் அலைய ஆரம்பித்ததும் பிளவு ஏற்பட்டுப் போச்சு. சரியா? ராணுவத்திலேயிருந்து தப்பினாலும் தமிழர்கள் இயக்கங்களிலேயிருந்து தப்ப இயலாது. எந்த ஆட்சி வந்தாலும் இனி அதோகதிதான், சரியா? வாழ்க்கையிலே தமிழன் என்று பிறந்தாலே கஷ்டம். தனி ஈழம் கிடைப்பதும் கஷ்டம். வெறும் யாழ்ப்பாணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? அங்கு விவசாயம் குறைவு. வேறு எந்தத் தொழில் முன்னேற்றமும் இல்லை. யாழ்ப்பாணத்துக்காகச் சண்டை போடுவதில் ஏதும் அர்த்தமில்லை. ஈழத்தமிழனுக்கு வாழ்க்கை என்பதிலேயே இனி அர்த்தமில்லை. என் வாழ்க்கை 81 ஆம் ஆண்டே முடிந்து போய்விட்டது.



• என். ஜே. போஸ்



• சிங்கள இராணுவத்தினரின் ரோந்து.....

என் தம்பியை என் கண் எதிரிலேயே ராணுவம் துண்டாக்கிற்று. என்னால் என் குடும்பத்தைக் காப்பாற்ற முடியவில்லை."

— அந்த இளைஞனின் கண்ணீர் நிறைந்த கண்களும் கம்மிய குரலும் இன்னும் என் நினைவை விட்டு அகலவில்லை.



அடுத்தடுத்து அநேகம் பேர் சிங்கள ராணுவம் கேள்வி முறையில்லாமல் செய்யும் கொடுமைகளைச் சொன்னார்கள். வந்திருந்த கூட்டத்தில் தொண்ணூறு சதவீத இளைஞர்கள் யுவதிகள். அதிகப் பண வசதி இல்லாத பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளாவது எங்கேயாவது உயிர் வாழட்டும் என்று பணம் திரட்டிப் படகைப் பிடித்து அனுப்பியிருக்க வேண்டும்.

ராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் என். ஜே. போஸ் என்னைச் சந்திக்க வந்தார்.

"இந்த இலங்கைப் பிரச்னையால் இங்கிருக்கும் மீனவர்களுக்கு எத்தனை பிரச்னைகள், வந்து பாருங்கள்," என்று மாலையில் அழைத்துச் சென்றார்.

மீனவர் படகுகள் வந்து சேரும் கரைப் பகுதி 'ஜே ஜே' என்று இருந்தது. மீனவரின் பெரிய படகுகள் மீன்கள் ததும்ப வந்து நின்றிருந்தன. வருஷம் முழுதும் இங்கு மீன்கள் கிடைக்குமாம். ஆனால் கிடைக்கும் மீன்களில் இறால் மீன்தான் உயர்த்தியானது. லாபகரமானது. அது அதிகமாகக் கிடைப்பது கச்சத்தீவைச் சுற்றி. 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி இந்தியா கச்சத்தீவை இலங்கை அரசிடம் கொடுத்தது. அதிலிருந்துதான் இப்பொழுது பிரச்னை.

ஒப்பந்தத்தின்படி இந்திய மீனவர்களுக்குக் கச்சத்தீவை ஒட்டிய கடற்பகுதியில் மீன் பிடிக்க உரிமை உண்டு. இலங்கைத் தமிழர் பிரச்னை ஆரம்பிப்பதற்கு முன் இலங்கைக் கடற்படைக்கும் நமது மீனவர்களுக்கும் இடையே சுமுகமான உறவிருந்தது. மிகச் சிநேகமாகச் சிங்களவர்கள் இருப்பார்களாம்.

ஆனால் பிரச்னை ஆரம்பித்து, விடுதலைப் புலிகளின் பலம் அதிகரித்ததும் அப்பாவி மீனவர்களைச் சிங்களக் கடற்படை தாக்க ஆரம்பித்து விட்டது. விடுதலைப் புலிகளுக்கு உதவும் உளவாளிகள் என்றும் ஆயுதம் கொடுக்கும் ஆபத்தானவர்கள் என்றும் குண்டு சுடுவதும் மிதவையை அறுப்பதும் வழக்கமாகப் போய்விட்டது. மீனவர்கள் இப்பொழுது மீன் பிடிக்கச் சென்றார்களென்றால் திரும்பி வருவார்கள் என்ற நிச்சயமின்மை. மிக ஆபத்தான தொழிலாகப் போய்விட்டாலும், வேறு தொழிற் பயிற்சி இல்லாததால் இவர்களால் இந்தத் தொழிலை விட முடியவில்லை. இதில் நல்ல சம்பாத்தியமும் கூட. ஒரு நாளைக்கு அறுபது அல்லது எழுபது ரூபாய் சம்பாதிக்கலாம். அத்துடன் இலவசச் சாப்பாடு, மீன்கள், சங்குகள், உபரி லாபங்கள்.

கடந்த ஏழு வருஷங்களாகச் சிங்களக் கடற்படையின் தொந்தரவினால் ராமேஸ்வரம் மீனவர்களுக்கு ஆறு கோடியே இருபத்

இடத்தைக் காலி செய்த இலங்கைத் துணைத் தூதர்!

மத்திய அரசுக்கு நன்றி!
தெரிவிப்பது யார்?
வீரமணியும் நெடுமாறனும்!
வியப்பாக இல்லை?

எதற்குத் தெரியுமா? சென்னையிலுள்ள இலங்கை அரசின் துணைத் தூதர் ஜெயக்கொடியை இலங்கைக்குத் திரும்ப அழைத்துக் கொள்ளும்படி இந்திய அரசு, இலங்கை அரசை நிர்பந்தித்ததற்குத்தான், அந்த நன்றி!

ஜெயக்கொடி இப்படித் தோல்விக் கொடியான தன் பின்னணி என்ன?

1983—ல் இலங்கையில் பெரிய கலவரம் நிகழ்ந்து முடிந்த பிறகு, நான்கு மாதம் கழித்துச் சென்னைக்கு அனுப்பப்பட்டார் ஜெயக்கொடி. ஏற்கெனவே ஒரு துணைத் தூதர் இருக்கும்போது, இன்னொரு துணைத் தூதரா? என்று வியந்தது தில்லி வெளி விவகார இலாகா. மூன்று முக்கிய உள்நோக்கங்களோடு வந்தார் ஜெயக்கொடி.

— இந்தியப் பத்திரிகையாளர்களை வளைத்துப் போட்டு ஸ்ரீலங்கா அரசுக்கு ஆதரவான செய்திகளைப் போடச் செய்வது;

— இங்கு தனி ஈழத்தை ஆதரிக்கும் கட்சிகளின் தலைவர்களை நோட்டம் பார்ப்பது;

— தமிழ்நாட்டிலுள்ள விடுதலைப் புலிகளைக் கண்காணித்து அவர்களிடம் பிளவை ஏற்படுத்துவது.

தில்லியில் உள்ள தூதர் பதவியைவிட அதிக அதிகாரங்களை இந்தத் துணைத் தூதருக்கு வழங்கினார் ஜெயவர்த்தன.

பத்திரிகையாளர்களை வளைத்துப் போடுவதற்கு முயற்சி செய்து அதில் ஓரளவு வெற்றி கண்டார் ஜெயக்கொடி. குறிப்பாக வட மாநிலங்களில் வெளியாகும் சில தினசரி, வார, மாதமிருமுறை ஏடுகளின் நிருபர்களிடம் விடுதலைப் புலிகளைப் பற்றியும், அவர்களது நடவடிக்கைகளைப் பற்றியும் பேசி, அவர்கள் மனத்தை மாற்றுவார் ஜெயக்கொடி. விடுதலைப் புலிகளின் முகாம்கள் எங்கிருக்கின்றன என்பதை அறிந்து வெளியிடத் தூண்டினார். கடைசியாக, ஜெயக்கொடி செய்த சாதனை, தமிழக அரசு இலங்கைத் தமிழர்களுக்குக் கொடுத்த நான்கு கோடி ரூபாய், போராளிகள் ஆயுதம் வாங்குவதற்குத்தான் பயன்படப் போகிறது என்பதைச் சில பத்திரிகைகளில் வெளியிடுமாறு செய்தது. ஓர் ஆங்கில நாளிதழ் நான்கு கோடி ரூபாயில் மூன்று கோடி விடுதலைப் புலிகளுக்கு (LTTE) மட்டுமே என்று செய்தி வெளியிட்டது. இது போன்ற செய்திகள் தமிழக அரசையும் மத்திய அரசையும் தர்மசங்கடத்தில் ஆழ்த்தின. தவிர, இதன் மூலம் ஏற்கெனவே பிளவு பட்டிருந்த போராளி இயக்கங்கள் மேலும் பிளவுபட்டன.

தமிழ்நாட்டில் தனித் தமிழ் ஈழம் கேட்டுப் போராடும் தமிழகத் தலைவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கச் சில தமிழர்களையே ஏற்பாடு செய்திருந்தார் ஜெயக்கொடி. இதற்கெல்லாம் மாதத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் வரை செலவு செய்தார். இப்படி பணத்தைத் தண்ணீராகச் செலவழித்ததை இலங்கை வெளி விவகார அமைச்சர் கண்டித்தார். 'நீ யார் கேட்பதற்கு?' என்று அவரை முறைத்தார் ஜெயக்கொடி. 'நான் ஜெயவர்த்தனவுடன்தான் பேசுவேன்' என்றுகூடக் கோபத்துடன் கூறினாராம்!

ஜெயக்கொடியின் இந்த நடவடிக்கைகளை மத்திய அரசின் உளவுத் துறையும் கண்காணித்துக் கொண்டுதான் வந்தது. அவ்வப்போது இவரது நடவடிக்கைகள் வெளி விவகாரத் துறைக்கும் சொல்லப்பட்டது. கடைசியாக ஜூன் கடைசி வாரத்தில் 'தயவு செய்து ஜெயக்கொடியைத் திரும்ப அழைத்துக் கொள்கிறீர்களா?' என்று இலங்கையிடம் இந்தியா கேட்க, வேறு வழியின்றித் திருப்பி அழைத்துக் கொள்ளப்பட்டார், ஜெயக்கொடி!

— கௌசல்யா

தைந்து லட்சம்ரூபாய் அளவுக்குப் பொருள் நஷ்டமாம். தாக்கப்பட்டு இறந்து போனது நாற்பது பேர்.

''இங்கு முப்பத்தையாயிரம் குடும்பங்கள் மீனவத் தொழிலை நம்பியிருப்பவை. 'எங்களுக்குப் பாதுகாப்புத் தேவை' என்று நாங்களும் எவ்வளவோ போராடிப் பார்த்து விட்டோம். இதுவரை அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை. கச்சத்தீவுக்கருகில் எங்கள் பாதுகாப்புக்காக நமது கடற்படைக் கப்பல் ஒன்றை நிறுத்தலாம். நங்கூரம் பாய்ச்ச முடியவில்லை, நழுவுகிறது என்று சாக்குப்போக்குச் சொல்கிறார்கள். மத்திய அரசில் செல்வாக்கில் உள்ள தமிழ்த் தலைவர்களிடம் முறையிட்டோம். தில்லிக்கு வாருங்கள் என்கிறார்கள். நாங்கள் எங்கே தில்லிக்குப் போவது?'' என்றார் போஸ்.

''நமது அரசியல்வாதிகள் அடிக்கடி செய்யும் ஸ்டண்டினால் வேறு எங்களுக்கு அதிகக் கஷ்டம். இலங்கைத் தமிழர் இயக்கத்துக்கு நாலு கோடி கொடுப்போம் என்பதை ஏன் பறைசாற்ற வேண்டும்? உடனே எங்களுக்குத்தான் அடி. 'நீ நெடுமாறன் ஆளா, கொட்டியாவா?' என்று சிங்களக் கடற்படைக்காரர்கள் எங்கள் படகுகளிலேயே நுழைந்து அடிக்கிறார்கள். அச்சுறுத்தல் நோட்டீஸ் அனுப்புகிறார்கள்.

''நாங்கள் எங்கள் எதிர்ப்பைக் காண்பிக்கச் சென்ற மாதம் முதல் தேதியிலிருந்து ஏழாம் தேதி வரை மீன் பிடித்தலை நிறுத்தி, சத்தியாக்கிரகம் செய்தோம். எங்கள் வயிறுதான் காய்ந்தது. அரசு ஒன்றும் செய்யவில்லை. இலங்கைப் பிரச்னை தீர்ந்தால் எங்கள் பிரச்னையும் தீரும் என்கிறது அரசு. இலங்கைப் பிரச்னை தீருவது எப்போது?'' என்றார் போஸ்.

படங்கள்:
பி. ஐ. பி., தமிழக அரசு செய்தித் துறை.

"தாயை இழந்தோம் அரசின் தயவையும் இழந்தோம்!



* இறந்து போன தாயார் சகுந்தலா

பிளஸ் டூ மாணவன் பிரபாகரன், பால் பாட்மிண்டன் விளையாட்டில் அபாரத் திறமைசாலி. நான்காவது படிக்கும் போதே விளையாட ஆரம்பித்து விட்டான். பள்ளிக்கூடத்தில் நன்றாய் விளையாடி, மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டான். அகில இந்திய அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளுமளவுக்குத் திறமையை வளர்த்துக் கொண்டான். அக்டோபர் 84 இல் தேசிய ஜூனியர் சாம்பியன் போட்டிக்குத் தமிழ்நாட்டின் சார்பில் கலந்து கொண்ட அணியில் இடம் பெற்றான். அச்சமயம் இந்தியாவின் பல மாநில அணிகளிலும் விளையாடிய விளையாட்டு வீரர்களில் ஐவரை மட்டும் தேர்ந்தெடுத்து, 'இந்தியாவின் நட்சத்திரம்' (ஸ்டார் ஆஃப் இந்தியா) என்கிற பட்டமும், பரிசும் அளித்தார் மத்திய அமைச்சர் பூட்டாசிங். அதில் பிரபாகரனும் ஒருவன். இந்த இளம் நட்சத்திரம் மேலும் பிரகாசிக்கப் போகிறது என்ற நம்பிக்கையுடன் இருந்தது பிரபாகரனின் குடும்பம்.

பத்தாம் வகுப்பு முடித்தான் பிரபாகரன். சென்னை நகரிலுள்ள பிரபலமான பள்ளிகளில் சில, "உங்கள் மகனை எங்கள் பள்ளியில் சேர்த்துக் கொள்ளுகிறோம். இங்கே படித்தால், உங்கள் மகன் பால் பாட்மிண்டனில் இன்னும் திறமை பெற்றுப் பேரும் புகழும் அடைவான்" என்று குறிப்பிட்டுப் பிரபாகரனின் அப்பாவுக்குக் கடிதங்கள் எழுதின.

சென்னையில் படித்தால், தன் விளையாட்டுத் திறமையை அதிகரித்துக் கொள்ள நிறைய வாய்ப்புக்கள் உண்டு என்பதைப் பிரபாகரனும் உணர்ந்துதான் இருந்தான்.

* சகோதரிகளுடனும் தந்தையுடனும் பிரபாகரன்



அவன் குடும்பத்தினருக்கும் அவனைச் சென்னையில் படிக்க வைக்க ஆசைதான். ஆனாலும் முடியவில்லை. காரணம்? அது ஒரு சோகக் கதை...

பிரபாகரனின் அப்பா பக்தவத்சலம், திண்டிவனத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அம்மா சகுந்தலா பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியை. அரக்கோணம், ஆதி திராவிடர் நலப்பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் வேலை. அப்பா பக்தவத்சலத்துக்கு இடையில் உடல் சுகவீனம் ஏற்பட்டு, நிலைமை மோசமாகிவிடவே உத்தியோகத்தை விட்டுவிட வேண்டியதாயிற்று. கணவர் வேலைக்குப் போகாவிட்டாலும், மனைவியின் சம்பளம் வந்து கொண்டிருந்ததால் குடும்பம் கஷ்டப்படாமல் ஓடிக் கொண்டிருந்தது.

இந்தச் சமயத்தில்தான், விதி, 'காச நோய்' உருவில் சகுந்தலாவைத் தாக்கியது. அந்த நோயுடன் நடத்திய போராட்டத்தின் முடிவில், சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்றிக் கொண்டிருந்த ஒரே உயிரும் போய் விடவே, குடும்பம் திணறிப் போய்விட்டது. ஓரளவு வசதியுடன் வாழ்ந்து கொண்டிருந்த குடும்பத்தால், இந்தத் தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. மேற்கொண்டு என்ன செய்வது என்று புரியாத சூழ்நிலை.

அரசு ஊழியர்கள் பணிக்காலத்தில் செத்துப் போனால் உடனடியாய் அரசு பத்தாயிரம் ரூபாய் தரும் என்று ஓர் அரசு ஆணை இருக்கிறதல்லவா? அதற்காக விண்ணப்பித்தார், பக்தவத்சலம். இவரது மனுக்கள் இணைற்றில் போடப்பட்ட கற்களாய்க் கிடந்தன. ஆதி திராவிடர் நலத்துறை, கல்வித் துறை, கலெக்டர் ஆபீஸ், தலைமைச் செயலகம் என்று பல அரசு அலுவலகங்களின் படிகளில் ஏறி இறங்கிச் செருப்புத் தேய்ந்ததுதான் மிச்சம். பத்தாயிரம் ரூபாய் வந்த பாடில்லை. ஒரு வழியாக அரசாங்கம் மனமிரங்கிப் பத்தாயிரம் ரூபாய் தந்தபோது, பிரபாகரனின் அம்மா இறந்து முதலாமாண்டு நினைவு நாள் கடந்து விட்டிருந்தது! இந்நிலையில் பிரபாகரனால் எப்படி நிம்மதியாக விளையாட்டில் பயிற்சி பெற முடியும்?

பிரபாகரனுக்கு இரண்டு சகோதரிகள். சகுந்தலா உத்தியோகத்தில் இருக்கும் போது இறந்து விட்டதால் அனுதாப அடிப்படையில் அவருடைய மூத்த மகள் பத்மாவதிக்கு வேலை தரப்பட வேண்டும் என்று விண்ணப்பித்தார் பக்தவத்சலம். எத்தனையோ தடவை நேரில் போய் விசாரித்தாயிற்று; நினைவூட்டுக் கடிதங்கள் எழுதியாயிற்று. பலன் என்னவோ பெரிய பூஜ்யம்தான். இப்போது பத்மாவதி, ஒரு நர்சரிப் பள்ளிக்கூடத்தில் சொற்பச் சம்பளத்துக்கு வேலை பார்த்து, ஏதோ தன்னால் இயன்ற அளவில் குடும்ப பாரத்தைச் சுமக்கிறார். அவருடைய தங்கை கோதை பிளஸ் டூ படித்துக் கொண்டிருக்கிறார்.

சோகம் இதோடு இல்லை. பிரபாகரனின் அம்மா இறந்து சுமார் மூன்று ஆண்டுகளாகப் போகின்றன. பென்ஷன் தொகை மாதா மாதம் வந்தாலும் அவருடைய குடும்ப பிராவிடெண்ட் பண்ட் மற்றும் கிராஜுவட்டி ஆகியவை இன்னும் அவரது குடும்பத்துக்குத் தரப்படவில்லை. இதுபற்றி உள்ளூர் எம். எல். ஏ. முதல் மாநில முதலமைச்சர் வரை அத்தனை பேருக்கும் மனுப் போட்டார் பக்தவத்சலம். ஒரு வழியாய், முதல்வர் அலுவலகத்திலிருந்து கடந்த 3.3.87 அன்று ஒரு கடிதம் வந்தது. அதில், இவரது புகார் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலருக்கு அனுப்பப்பட்டிருப்பதாயும், மேற்கொண்டு அங்கே போய் விசாரிக்கும்படியும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி பக்தவத்சலம் மாவட்ட ஆதி திராவிடர் நல அதிகாரியின் ஆபீஸுக்குப் போய் விஷயத்தை விசாரித்த போது, ஏ. ஜி. அலுவலகத்திலிருந்து, கடந்த 5.12.85 அன்றே இறந்து போன சகுந்தலாவின் பிராவிடெண்ட் பண்ட், கிராஜுவட்டி போன்றவற்றுக்கான வாரிசுதாரர்களை உறுதிப்படுத்துவதற்காக, உடனடியாகச் சம்பந்தப்பட்ட குடும்பத்துடன் தொடர்பு கொண்டு, அதற்குரிய 'ஹேச்' பாரத்தைப் பூர்த்தி செய்து அனுப்பச் சொல்லிக் கடிதம் வந்துள்ளதும், ஆனால் அந்தக் கடிதத்தின் மீது மாவட்ட ஆதி திராவிடர் நலத்துறை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் தூக்கிக் கிடப்பில் போட்டிருந்ததும் தெரிய வந்திருக்கிறது. இவர் முதல்வர் அலுவலகத்திலிருந்து வந்திருந்த கடிதத்தைக் கொண்டு போய்க் காட்டிய பிறகுதான் அவசரம் அவசரமாகப் பாரத்தைப் பூர்த்தி செய்து அனுப்பியிருக்கிறார்கள்.


அரசு ஊழியர் ஒருவர் இறந்து மூன்று வருடங்களாகியும் இன்னும் அவரது குடும்பத்துக்குச் சேர வேண்டிய பிராவிடெண்ட் பண்டும், கிராஜுவட்டியும் தரப்படவில்லை என்பது எத்தனை பெரிய அநீதி! பணிக்காலத்தில் இறந்த ஒருவரது மகளுக்குக் கல்வித் தகுதி இருந்தும் இன்னமும் அரசு வேலை தராமல் சும்மா இருப்பதேன்? எல்லாவற்றுக்கும் காரணம், ஆமை வேகத்தில் கூட நகர மறுக்கும் நமது அரசாங்கத்தின் செயல்பாடுதான். அரசின் இந்த மெத்தனத்தால் தான் — குறைந்தபட்சம் ஒரு சராசரி மனிதனிடம் இருக்கும் மனிதாபிமானம் கூட அரசு இயந்திரத்திடம் — அரசு அதிகாரிகளிடம் இல்லாத காரணத்தால்தான், அந்தக் குடும்பம் வறுமையில் வாட வேண்டிய நிலை. அதனால், அந்தக் குடும்பத்திலிருந்து, எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமாக விளையாட்டுத் துறையில் ஒளிர வேண்டிய ஒரு சிறுவனின் ஆர்வமும் முயற்சிகளும் நைந்து போகும் கொடுமை.

— எஸ். சந்திரமௌலி


அட்டையில் சகோதரிகளுடன் பிரபாகரன். அட்டை வண்ணப்படமும் வடாற்காடு தொடர்பான மற்ற படங்களும்: கே. வி. ஆனந்த்



* சேமியம்மான்



ஜவ்வாது மலைக்கு ஒரு விசிட்!



* மேலூர்: ஆரம்பப் பள்ளி

புதூர் நாட்டைச் சேர்ந்த அண்ணாமலையுடன், நாங்கள் மேலூரை நோக்கி நடந்து கொண்டிருந்தோம். நாங்கள் நடந்தது சுமார் மூவாயிரத்து ஐந்நூறு அடி உயரத்தைக் கொண்ட ஜவ்வாது மலையின் உச்சியில். ரோஷம் காட்டாத பெங்களூர் வெயில். சில்லென்று வீசும் காற்று. வழியெங்கும் காய்த்துக் குலுங்கும் பலா மரங்களின் அணிவகுப்பு. தரமான சந்தன மரங்களும் இங்குதான் அதிகம்.

"இந்த மலைமேல் கிட்டத்தட்ட அறுபது ஊருங்களுக்கு மேல் இருக்குங்க, அவ்வளவு ஊரிலும் ஒண்ணு ரண்டு பேருதான் படிச்சிட்டுக் கீழே வேலைக்குப் போயிருக்காங்க. மத்தவங்களுக்கெல்லாம் மலைதாங்க கதி....''

''என்ன தொழில் பண்ணுவீங்க?''

''இதோ பார்க்கறீங்களே, பலா.... இது தாங்க முக்கிய பயிர். அப்புறம் தினை, சாமை, கேழ்வரகு, கொய்யா, வாழை, தென்னை, கடுக்காய்னு பலதும் விளையுதுங்க. ஜவுருங்க — அதாங்க தானா ஊற்று வர்ற இடம் — உள்ள இடத்தில நெல்லும் போடுவோம்....''

''இதையெல்லாம், எங்கே கொண்டு போய் விக்கறீங்க?''

''கீழ.... சந்தைங்க இருக்கே. அங்கதான் போய் விப்போம். மலைமேல் வர ரோடு வசதி இருந்தாலும் பஸ் வசதி இல்லை. தனியார் பஸ்கள்தான் அவ்வப்போது வரும். வராமலும் போகும். அதனால் நடையைத்தான் நம்ப வேண்டும். அப்புறம் இங்கே விளையற பொருள்களை வாங்கறதுக்கும், எங்களுக்குத் தேவையான பொருள்களை விக்கிறதுக்கும்னே ஒரு சொசைட்டி (மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) வெச்சிருக்காங்க. அதிலிருந்து எங்களுக்கு லோனெல்லாம் குடுக்கணும். ஆனா குடுக்கறதில்லே. இது மட்டும்தான்னு நெனைக்கிறீங்களா? இங்கிருக்கிற மலைவாசிங்களான எங்கள்லே பல பேரு பாமாயில், சர்க்கரையெல்லாம் வாங்கலைன்னாலும் ரேஷன் கார்டுல நாங்கள் வாங்கினதாகக் குறிச்சிட்டு, அதையெல்லாம் சொசைட்டில உள்ளவங்களே எடுத்து வெளி மார்க்கெட்ல வித்திடறாங்களாம்...

அதே மாதிரி ஆஸ்பத்திரி ஒண்ணு இருக்குன்னுதான் பேரு. டாக்டர், நர்ஸுங்கன்னு எல்லாரும் தங்கறதுக்கு குவார்ட்டர்ஸும் இருக்கு. அப்படியிருந்தும் யாராவது தங்கியிருக்காங்களா? நீங்களேதான் பார்த்தீங்களே... டாக்டரை விடுங்க, நர்ஸுங்களாவது இருந்தாங்களா? இருந்திருந்தா அநியாயமா இந்த லட்சுமிப் பொண்ணு நெத்தைக்



* மேலூர்: இந்தக் குட்டைதான் குடிநீர்



* புதூர் நாடு: நெடுங்காலமாகப் பூட்டிக் கிடக்கும் டாக்டர் குடியிருப்பு



* இறந்து போன லட்சுமியின் கணவர் துக்காணும் ஐந்து குழந்தைகளும்



* அண்ணாமலை

குச் செத்திருக்குமா ....?''

''அதெப்படிங்க, முப்பது வயசுப் பொண்ணு, சாதாரணக் காய்ச்சல்ல திடீர்னு சாக முடியும்?''

''அது வெறும் காய்ச்சல் இல்லீங்க... நாலஞ்சு நாளைக்கு முன்னாடி, அது கீழ பரமனந்தல் சந்தைக்குப் போனப்ப, வயித்தி லிருந்த நாலு மாசமோ என்னமோ, சிசு வைக் கலைச்சிருக்குங்க. இப்பத்தான் சிசு வைக் கலைக்கிறது தப்பில்லேன்னு சர்க்கார் லியே சொல்லிட்டாங்களே. அறியாப் பொண்ணு, பாவம், வழக்கமா செஞ்சுக் கிற நாட்டுமுறைலதான் செஞ்சிருக்கு. மேல வந்ததும் காய்ச்சல் வந்திருக்கு. டாக்டரைத் தேடியிருக்காங்க. கிடைக்கலே. போயிடுச்சு. டாக்டர் இருந்திருந்தாப் பொழச்சிருக்கு மில்லேயா....?'' — ரொம்பவும் உணர்ச்சி வசப்பட்டுப் பேசிக் கொண்டே வந்தார் அண்ணாமலை.

அதற்குள் மேலூரை நெருங்கி விட் டோம். மூன்று கி.மீ. தூரம் நடந்ததால் தாக மாக இருக்கவே, எதிரில் தலையில் குடத்துடன் வந்த பெண்ணிடம் குடிக்கத் தண்ணீர் கேட்டோம். அவர், அருகிலிருந்த சிறு குட்டை போன்றதொரு நீர் நிலையைக் காட்டி, அதில் அள்ளிக் குடிக்கச் சொன்னார்.

பக்கத்தில் போய்ப் பார்த்தால், தண்ணீர் பச்சைப் பசேல் என்று பார்க்கவே ஒரு மாதிரியாக இருந்தது. அது ஊற்றுத்தான் என்றாலும் திறந்தவெளியாக இருப்பதால் சுகாதாரமின்றிக் கிடந்தது. ஆனாலும் அது தான் அந்த மக்களின் குடிநீர் என்றபோது உண்மையிலேயே மனம் வேதனை அடையத் தான் செய்தது. அந்த வேதனையுடனேயே



• கோவிந்தன்

மேலூருக்குள் நுழைந்தோம்.

அதிகபட்சமாக முப்பது வீடுகள் இருக்கும். அப்படியொரு நிசப்தம். அந்த நிசப்தத்தைக் கலைத்தது நாய்கள்தான். எங்களைக் கண்டதும் அங்கேயும் இங்கேயுமாகத் திரிந்தவர்கள் அனைவரும் ஊர்க்-கோயிலின் முன்பு கூடினார்கள். நம்முடன் வந்த அண்ணாமலை நம்மை அவர்களிடம் அறிமுகப்படுத்தியதும், முதல் நாள் இரவு இறந்து போன லட்சுமியின் கணவர் துக்காணை அழைத்துவந்தார்கள். கூடவே ஐந்து குழந்தைகளும் வந்தன.

"நேத்தைக்குச் சாயங்காலம் நான்தாங்க புதூர் நாட்டுக்குப் போயி டாக்டர் இருக்காரான்னு பார்த்திட்டு வந்தேன். இல்லீங்க. சும்மாதான் திரும்பி வந்தேன்...." என்றார் கோவிந்தன் என்பவர்.

"டாக்டருங்களோ, நர்ஸுங்களோ இருக்கறதே இல்லீங்க. அதனாலே பிரைவேட்டா இருக்கிற டாக்டருகிட்டதான் போக வேண்டியிருக்கு. அதுக்குப் பணம் வேணுங்களே...." என்றார் சேமியம்மாள் என்ற பெண்.

துக்காணும் குழந்தைகளும் வெறித்த பார்வையுடன்தான் இருந்தார்களே தவிர, எதுவும்பேசவில்லை. வீட்டுக்குள் மனைவியின் பிணத்தை வைத்துக் கொண்டு ஒரு கணவன் எப்படிப் பேச முடியும்?

திரும்பியபோது, அந்த ஊரின் ஆரம்பப் பள்ளியைப் பார்த்தோம். மாட்டுக் கொட்டகையைவிட மோசமான நிலையில் இருந்தது அது. உள்ளே பார்த்தபோது, ஆசிரியர் அமர்வதற்கான நாற்காலி இரண்டு துண்டுகளாக உடைந்து ஒன்றைக் கூரையிடுக்கில் தொங்கவிட்டிருந்தார்கள். ஆசிரியரும் பள்ளிக்கு ஒழுங்காக வருவதில்லையாம். உண்மைதான். நாங்கள் சென்ற அன்றும் ஆசிரியர் வரவில்லை! வேதனை நெஞ்சில் கனக்க, மறுபடியும் புதூர் நாட்டுக்கே திரும்பி வந்தோம்.

புதூர் நாட்டில், வனத்துறையினரால் நடத்



அவன்: "என் கூட அனாவசியமா சண்டைக்கு வந்தால் போலீஸ்காரரைக் கூப்பிடுவேன்!"

இவன்: "நல்லவேளை, தப்பிச்சேன்! எங்கே இந்தப் பேட்டை ரவுடியைக் கூப்பிடப் போறியோன்னு பயந்துட்டேன்!"

— மீனர் கனுக

"எதுக்கெடுத்தாலும் ரஜினி ஸ்டைல்னு சொல்லிக்கிட்டுத் திரியுறானே உங்க பையன், படிப்பிலே எப்படி...?"

"கஜினி ஸ்டைல்!"

— வெ. ராதாகிருஷ்ணன்



"சம்பந்தி என்னை ஏமாத்திட்டார்."

"எப்படி?"

"பொண்ணு காதிலே ஏதாவது போட்டு அனுப்பறேன்னு சொல்லிட்டு, 'ஹியரிங் எய்டு' போட்டு அனுப்பிட்டார்!"

— ஆர். வசந்தகுமார்



தப்படும் உயர்நிலைப் பள்ளிக்குச் சென்றோம். இப்பள்ளியின் பெரும்பாலான ஆசிரியர்கள் தினமும் கீழிருந்துதான் வந்து போக வேண்டும். அனைவரும் அங்கேயே தங்க, குவார்ட்டர்ஸ் வசதி போதுமானதாக இல்லை.

''மழை நாட்களில் பஸ் வராது. அதனால் நாங்களும் வர முடியாது. வனத்துறையினர் அதுமாதிரி சமயங்களில் ஜீப்பில் வந்து பார்த்துவிட்டு நாங்கள் வரவில்லையென்று குற்றம் சுமத்துகிறார்கள்? இது என்ன நியாயம் சார்?'' என்று குறைபட்டுக் கொண்டார்கள் சில ஆசிரியர்கள்.

''இந்தப் பள்ளி சுத்த மோசம். நீங்கள் இந்த ஏரியாவுக்கு வந்திருப்பது தெரிந்ததும் ஏதோ எல்லாம் ஒழுங்காக இருப்பதுபோல் நடந்து கொள்கிறார்கள். மற்ற நாட்களில், ஆசிரியர்களெல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டு சீட்டாடிக் கொண்டுதான் இருப்பார்கள்....!'' என்றார் அண்ணாமலை.

இந்த இரண்டில் எது உண்மை என்று நாங்கள் குழம்பிக் கொண்டிருந்த நேரத்தில் ஒருவர் வந்து, ''சார், மலைக்கு வரும் அரசாங்க ஆபீஸர்களில் சிலர், இங்கே தங்கியிருக்கும் நாட்களில், மலைவாசிப் பெண்களை ஆசைகாட்டியோ, அல்லது மிரட்டியோ பணிய வைத்துக் கற்பழித்து விடுகிறார்கள் சார். இது சத்தியம் சார்....'' என்றார். அதிர்ச்சியோடு திரும்பினோம்.

அது மட்டுமாவது உண்மையாக இருக்கக் கூடாது என்பதே நமது பிரார்த்தனை.

— ப்ரியன்

வளர்ச்சிக்குச் சில யோசனைகள்...



பாரதீய ஜனதா கட்சியின் வடாற்காடு மாவட்டச் செயலாளரான வெள்ளக்குட்டை சிவப்பிரகாசம், சொல்கிறார்...


* கர்நாடகாவில் உற்பத்தி ஆகும் பாலாறு, ஆந்திர மாநிலத்தின் வழியாகத் தமிழகத்தை அடைந்து கடலில் கலக்கிறது. வாணியம்பாடியிலிருந்து பதினைந்து கி. மீ. தூரத்தில் உள்ள திம்மாம்பேட்டை என்ற இடத்தில் பாலாற்றின் குறுக்கே ஓர் அணை கட்ட வேண்டும். இந்த அணை பாலாற்றில் ஆந்திரா — தமிழ்நாடு எல்லையில் அமையும். ஆந்திர அரசு இருநூறு ஏக்கர் கொடுத்தால் போதும். வருடத்தில் பத்து நாட்கள் ஓடி வீணாகும் பாலாற்றுத் தண்ணீரை இந்த அணையின் மூலம் பயன்படுத்திக் கொள்ளலாம். இதனால் சுமார் ஐம்பதாயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும்.


* வெள்ளக்குட்டை காட்டாற்றுத் தண்ணீர், இரண்டு குளங்களுக்குச் சென்று நிறைய வேண்டும். ஆனால் இப்போது கால்வாய்களிலுள்ள ஆக்கிரமிப்பால் தண்ணீர் செல்வதில்லை. இந்தக் காட்டாற்றின் தண்ணீரைச் சேமிக்க வெள்ளக்கல் என்ற இடத்தில் ஓர் அணை கட்ட வேண்டும். மந்திரி யூசுப் இரண்டரை வருடங்களுக்கு முன்பே ஓ.கே. சொல்லி விட்டார். உயர்மட்ட விவசாயக் குழு தலைவர் முனு ஆதியும், 'இது நல்ல திட்டம்' என்று கூறியுள்ளார். அரசு உடனே இந்த அணை கட்டும் வேலையை ஆரம்பிக்க வேண்டும். இதனால் சுமார் பத்தாயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுவதோடு, ஆம்பூருக்கும் அருமையான குடிநீர் கிடைக்கும்.

* ஆம்பூர் அருகில் பச்சக்குப்பம் என்ற இடத்தில் ரயில்வே லெவல் கிராஸிங் ஒன்று இருக்கிறது. மணிக்கணக்கில் மூடி விடுகிறார்கள். இது தேசிய நெடுஞ்சாலையில் இருக்கிறது. அந்த இடத்தில் உடனடியாக ஒரு மேம்பாலம் தேவை.

* இப்போது பெண்கள் கல்லூரிப் படிப்புப் படிப்பதற்காக வேலூர் அல்லது வாலாஜாபேட்டைக்குப் போக வேண்டியுள்ளது. திருப்பத்தூர், ஆம்பூர், வாணியம்பாடி ஆகிய ஊர்களில் பெண்கள் கல்லூரியே கிடையாது. இந்த மூன்று இடங்களில் ஏதாவது ஓர் இடத்தில் பெண்கள் கல்லூரி அமைக்க வேண்டும்.


இலங்கைப் பின்னணியில்...
வாஸந்தி
எழுதும்
பரபரப்பான தொடர் கதை
நிற்க நிழல் வேண்டும்
கல்கி
ஆகஸ்டு 2
ஆண்டு மலரில்
ஆரம்பம்
அதிக பக்கங்கள்
அதே விலை.







வறட்சியால் தஞ்சை, திருச்சி, தென்னார்காடு மாவட்டங்களில் இருபது லட்சம் விவசாயிகள் வேலையின்றி தவிப்பு — செய்தி



கல்கி

1987 ஜூலை 19
மலர் 45 இதழ் 51
பிரபவ ஆடி 3



கையைப் பிசைகிறார் ரிபைரோ!

ஒரு பக்கம் மாநிலத் தேர்தல்களில் படுதோல்விகள்; இன்னொரு பக்கம் பயங்கரமான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள்; மூன்றாவது பக்கம் கட்சிக்குள் பிளவுகள்; நாலாவது திசையில் கூர்க்காலாந்து போன்ற கிளர்ச்சிகள். இப்படி இவற்றுக்கிடையே சிக்கிக் கொண்டிருக்கும் ராஜீவுக்குத் தாம் பதவியில் தொடர்ந்து நீடிக்க முடியுமா என்றே சந்தேகங்கள் உருவாகியிருக்க வேண்டும். அதனால் சட்ட ஒழுங்குப் பிரச்னை பற்றிக் கவனிக்கவே அவருக்கு மனமுமில்லை, நேரமுமில்லை என்ற முடிவுக்குத்தான் நாம் வர வேண்டியிருக்கிறது. அல்லது ஒருவேளை ஜனாதிபதி ஆட்சி கொண்டு வந்து, ரிபைரோவிடம் அதிக அதிகாரங்களைத் தந்து விட்டால் போதும், எல்லாம் சரியாகிவிடும் என்று எண்ணினாரா?

முதல் நாள் பஸ்ஸை மடக்கி, அப்பாவி மக்கள் நாற்பது பேரைப் படுகொலை செய்தார்கள் பயங்கரவாதிகள். அடுத்த நாள், வேறு பஸ்களை வழிமறித்து, மேலும் முப்பத்தாறு பேரைக் கொன்று குவித்தார்கள். துப்பறியும் இலாகா வெட்கித் தலை குனிகிறது; ரிபைரோ கையைப் பிசைகிறார்.

எல்லோருமே படுகொலைகளைக் கண்டிக்கிறார்கள்; நாமும் கண்டிக்கிறோம். எல்லோருமே பயங்கரவாதிகளை ஒழிக்க வேண்டும் என்கிறார்கள். நாமும் சொல்கிறோம். ஆனால், பயங்கரவாதத்தை ஒழித்துச் சட்ட ஒழுங்கை நிலைநாட்டுவது என்பது போலீஸுக்கு அதிக அதிகாரங்களைத் தருவது மட்டுமல்ல; ராணுவத்தைத் தயார் நிலையில் வைத்திருந்து ஏவி விடுவது மட்டுமல்ல; பயங்கரவாதத்தின் மீது போர் தொடுத்து, அதனை நசுக்குவது என்பது இந்த நடவடிக்கைகளால் மட்டுமே சாத்தியமாகிவிடாது. அடக்குமுறை பயங்கரவாதத்துக்கு ஊட்டமளிக்கும்! இதைத்தான் வியட்நாம் நமக்கு உணர்த்தியது; அயர்லாந்து சுட்டிக்காட்டியது. ஈழமும் பஞ்சாபும் இன்றைக்கும் நமக்குப் புரிய வைக்கின்றன. நாம் கற்றுக் கொள்ள மறுக்கிறோம்.

சுதந்திர ஆர்வம் கொண்ட மக்களைப் பலவந்தத்தால் கட்டிப் போட்டு ஆள முடியாது. அன்பினால்தான் அவர்களை வெற்றி கொள்ள முடியும். அவர்களுடைய உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்தால்தான் அவர்களைக் கவர முடியும்.

பயங்கரவாதம் என்பது நேருக்கு நேர் நின்று சண்டை போடும் வீரப் போர் அல்ல. அது மறைந்திருந்து தாக்கும் நீசத்தனம்; முதுகில் குத்தும் துரோகம்; கொன்று விட்டுத் தப்பி ஓடும் கோழைத்தனம்; நிராயுதபாணிகளைத் தாக்கும் அற்பத்தனம்; பிரச்னைக்குச் சம்பந்தமில்லாதவர்களையும் பலிவாங்கும் ரத்த வெறி! இவர்களைச் சுட்டுத் தள்ளி ஒழிப்பது என்பது சாத்தியமல்ல. கொல்லப்படும் ஒவ்வொரு பயங்கரவாதியின் ரத்தத்திலிருந்தும் பத்து, ஐம்பது, நூறு என்று ஆவேசத்தோடு புதிய பயங்கரவாதிகள் எழுந்து வருவார்கள்! அப்படி ஓர் லட்சிய வெறி அவர்களுக்குப் பயிற்சியின் போது ஊட்டப்படுகிறது. அந்த லட்சியத்தை அடைய அவர்கள் எதற்கும் துணிவார்கள்.

எனவே, பஞ்சாபில் அடக்குமுறையைக் கையாள்வது தாற்காலிகமாக அவசியமானாலும்கூட அது வெற்றி பெறாது. அன்புதான் நிரந்தர வெற்றியை அளிக்கும். பஞ்சாப், அங்கு வாழும் மக்களுடையது என்பது உணரப்பட வேண்டும். டில்லி தனது அதிகார ஆதிக்கத்தைச் செலுத்தாமல் பஞ்சாப் மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். தேர்தல் நடந்து மக்களாட்சி மலர வேண்டும். அங்குள்ள மக்கள் பயங்கரவாதிகள் அல்ல; பிரிவினைவாதிகளும் அல்ல. அவர்கள் ஆதரவுடன் பதவிக்கு வரும் மிதவாதிகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் தரப்பட வேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்கள் வரை ஜனநாயகம் நிலவ வேண்டும். இதற்கு முன்பாக சண்டிகர் பிரச்னை, நதிநீர்ப் பங்கீடு பிரச்னை போன்ற பல பிரச்னைகளைத் தீர்த்து வைக்க அண்டை மாநிலங்களின் பங்கேற்புடன் மாநாடுகள் நடத்தி நல்ல முடிவு காண வேண்டும். இதையெல்லாம் செய்தால் தீவிரவாதிகள் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்கு வேலையில்லாமல் போகும்.

இத்தகைய அரசியல் தீர்வு காண்பது ஒன்றே வழி. பயங்கரவாதிகளை முதலில் ஒழித்துவிட்டுப் பிறகு இவற்றைக் கவனிக்கிறேன் என்பது அலை ஓய்ந்தபின் சமுத்திர ஸ்நானம் செய்கிற கதைதான்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



வண்ணக் கனவுகள்

"நீங்க என்னைக் காதலிக்கறதை, சொல்லாம இருந்ததுக்குக் காரணம் தயக்கம். நான் கண்ணப்பனைக் காதலிக்கறதை அவர்கிட்டச் சொல்லாம இருந்ததுக்குக் காரணம் பயம். கண்ணப்பன் என்னைக் காதலிக்கறதை அவர் என்கிட்டச் சொல்லாம இருந்ததுக்குக் காரணம் தாழ்வு மனப்பான்மை" — ஜெயஸ்ரீ சொல்லும் இந்த டயலாக்கிலேயே குறள் போல் கதையைச் சொல்லிவிடலாம்.


ஆமாம், அவ்வப்போது தண்ணீரை மோதும் ஓர் ஒற்றைத் துடுப்பைக் காட்டுகிறார்களே, படகை நகர்த்தவா, படத்தை நகர்த்தவா?

மொட்டை மாடியில் காயப் போட்டது போல் படு சீரியஸாய்ப் படம் போய்க் கொண்டிருக்கும் வேளைகளில் பெண்கள் புரோக்கராக வரும் சார்லி தலைகாட்டும் காட்சிகளில் மட்டும், மெட்ரோ லாரியிலிருந்து தெளித்த நீர் போலக் கொஞ்சம் புன்னகைபுரிய முடிகிறது. அப்கோர்ஸ் சில பல காட்சிகள் முகத்தைச் சுளிக்கிற மாதிரியும் அமைந்திருக்கின்றன.

ஆரம்பத்தில் ஜெயிலில் இருந்து ரிலீஸாகும் கார்த்திக், தனக்குத் துரோகம் செய்த நண்பனை என்னவோ பழிவாங்கப் போகிறார் என்று நினைத்தால், ஒரு 'புஸ்.' இரண்டு நண்பர்கள் ஒரே பெண்ணை விரும்பும் நிலைமையில் சற்று காரமான திருப்பங்களை எதிர்பார்த்தால், இன்னொரு புஸ்! இப்படி வெடிக்கப் போகிறது என்று நினைக்கும் நிறைய பலூன்களில் 'புசுக்' என்று காற்றை அவிழ்த்து விட்டு விட்டார்கள்!

கார்த்திக் ஒரு முரடு. பலாப்பழ முகடு. உள்ளே தங்கம். அவருடைய சதா சிவப்போடிய கண்களும் சரி, அலட்சியமான வசன உச்சரிப்பும் சரி, கார்த்திக் இந்தப் படத்தைப் பொறுத்த வரையில் நட்சத்திரச் சிமிட்டல்களுக்கு நடுவில் ஒரு நிலா என்பதை உறுதிப்படுத்துகின்றன. முரளி..ம்ம்ம்... அவரும் நன்றாய் நடித்திருக்கிறார். சுறுசுறுப்பாய்ச் சண்டை போடுகிறார். சண்டைக் காட்சிகள் சுறுசுறு. கார்த்திக்கிற்காக ஒருமுறை, முரளிக்காக ஒருமுறை, அப்புறம் இரண்டு பேரும் சேர்ந்து சில முறை என்று தராசில் நிறுத்து நிறுத்துச் செருகியிருக்கிறார்கள். ஆனால் காதல் காட்சிகள்? ஹூம், இளவட்டங்களைப் பற்றி டைரக்டர் எங்கே கவலைப்பட்டார்?

எப்போதாவது காலில் இடறும் முள் போல, பத்துப் பதினைந்து சீனுக்கு ஒரு முறை நறுக் வசனம். மற்றபடி இயல்பான, சமயத்தில் உப் — சப் இல்லாத மொழுக் மொழுக் வசனங்கள். பேனா: வைரமுத்து.



பாடல்களே இல்லாத படங்கள் இப்போது தமிழில் ஒரு ஃபாஷன் போலும்.

அருமையான லொகேஷன்கள். மிதமான அசைவுகளோடு கண்ணை உறுத்தாமல் சூழலை மனத்தில் பதிய வைக்கும் காமிராவிற்கு ஜே!

படத்திற்குப் பிரயோஜனமில்லாமல் வந்து போகும் கேரக்டர்கள் ஏராளம்.

ஆமாம், ஜெயஸ்ரீயின் அக்கா புருஷனுக்குப் படையோடு வந்து ஜெயஸ்ரீயைக் கடத்திப் போக ஞானம் க்ளைமாக்ஸில்தான் வந்ததா? என்ன வில்லனய்யா நீர்? ஹூம்!

கண்ணில் தென்படுகிற சந்தில் எல்லாம் நுழைந்து, கால் வலிக்கச் சுற்றோ சுற்று என்று சுற்றிக் கடைசியில் எதைத் தேடிக் கிளம்பினோம் என்பதே மறந்து விட்டது போல் ஒரு களைப்பு — வெளியே வரும் போது!

— ஜெயமன்மதன்

NAVAJEEVAN BLIND RELIEF CENTRE (REGD)

(Eye Donation Information Centre)

1-57, North Mada St., P.O. Tirumala Hills, Via Tirupati 517 504

ஸ்ரீ காஞ்சி சங்கராச்சார்யார் ஸ்வாமிகளின் அனுக்ரஹத்துடனும் கருணை உள்ளம் படைத்த வாசகர்களின் விசேஷ உதவியுடனும் ஸ்ரீ வெங்கடாசலபதி திருக் கோயில் கொண்டிருக்கும் இந்தத் திருப்பதி — திருமலை புண்ய க்ஷேத்திரத்திலிருந்து கண்களை இழந்தவர்களுக்கு இந்த நவஜீவன் சேவா கேந்திரம் பலவிதங்களிலும் உதவி வருவது வாசகர்கள் அறிந்ததே.

பணிவுடன் கூடிய ஒரு வேண்டுகோள்

விழிகளை இழந்தவர்களுக்குத் தற்போது இந்த சேவா கேந்திரம் அளித்து வரும் சில தொண்டுகளை எதிர்காலத்தில் மேலும் விசேஷமாக விஸ்தரிக்கும் பொருட்டு அன்பார்ந்த வாசகர்களின் உதவியைப் பெரிதும் வேண்டுகிறோம். கலியுக கண்கண்ட தெய்வமான, வேண்டுவோருக்கு வேண்டியதை அளிக்கும் ஸ்ரீ ஏழுமலையான் திருக் கோயில் கொண்டிருக்கும் இந்த புண்ய க்ஷேத்திரத்தில் எந்த ஒரு தொண்டுசெய்தாலும் அதற்கு ஆயிரம் மடங்கு அதிகம் புண்ய பலன்கள் கிடைப்பதாகப் புராணங்கள் கூறு கின்றன. விழிகளை இழந்து வாழ வழி தெரியாமல் பரிதவித்து வரும் பல லட்சம் மக்களில் ஒரு சிலருக்காவது நித்யம் அன்னதானம் வழங்கி சங்கீதமும் கைத்தொழிலும் கற்றுக் கொடுத்துப் புனர்வாழ்வு அளிக்க முயற்சித்து வருகிறோம். மேலும் விழியற்றவர் களுடன் ஏனைய உடல் ஊனமுற்றோர்களுக்கும் ஆதரவற்ற ஏழைப் பெண்களுக்கும் உதவிகள் அளிக்கவும் திட்டமிட்டு வருகிறோம்.

உங்களுக்காக சில தொண்டுகள்:

மேற்குறிப்பிட்ட புனிதத் தொண்டின் பொருட்டு ரூ. 501/— (ரூபாய் ஐநூற்று ஒன்று) அல்லது அதற்கு மேலும் அனுப்பும் கருணை உள்ளம் படைத்த வாசகர்களின் சார் பாகச் சில தொண்டுகளை உங்களுக்காகச் செயல்படுத்துகிறோம். 1. நீங்கள் குறிப்பிட்டு எழுதும் ஒரு நன்னாளில் (உங்களது திருமண நாள் அல்லது குழந்தைகளின் பிறந்த நாள் அல்லது வேறு முக்கிய விசேஷ நாள்) உங்கள் சார்பாக உங்கள் பெயர், கோத்திரம், நட்சத்திரத்தில் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாளுக்கு விசேஷக் கட்டணம் செலுத்திப் பூஜா அர்ச்சனை செய்விக்க ஏற்பாடு செய்கிறோம். 2. விசேஷப் பிரார்த்தனை யுடன் ஸ்ரீவாரி மஹா பிரசாதம் ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பி வைக்கிறோம். 3. முன்ன தாகத் தேதி குறிப்பிட்டு ஊர்ஜிதம் செய்து கொண்டு திருமலைக்கு யாத்திரையாக வரும் அன்பர்களுக்கு இலவசமாக இடவசதி அளிப்பதுடன் தேவையான உதவிகளும் அளிக்கப்படும். (அடுத்த ஒரு வருஷம் வரை மட்டும்) 4. நீங்கள் குறிப்பிட்டு எழுதும் ஒரு நன்னாளில் விழியற்றவர்களுக்கு உங்கள் சார்பாக அன்னதானம் வழங்கப்படும்.

மேலும் ரூ. 51/— அனுப்பும் அன்பர்களின் சார்பாகவும் நீங்கள் குறிப்பிட்டு அனுப்பும் தினத்தன்று உங்கள் சார்பாக விசேஷப் பிரார்த்தனை செய்வித்து நீங்கள் அனுப்பும் தொகையிலிருந்து ஒரு பாகம் ஸ்ரீ வாரி ஹுண்டியில் ஸமர்ப்பித்து மஹா பிரசாதமும் தபாலில் அனுப்புவதுடன் விழியற்றவர்களுக்கு இனிப்புகளும் வழங்க ஏற்பாடு செய்கிறோம்.

ரூ. 500/— அல்லது அதற்குமேல் டொனேஷன் வழங்கும் அன்பர்களுக்கு வருமான வரிச் சலுகை (Income Tax Exemption, under 80G) அளிக்கப்படும். டொனேஷன்களை ''நவஜீவன் ப்ளைண்ட் ரிலீப் சென்டர், திருமலை' என்கிற பெயருக்கு க்ராஸ்ட் செக்/ட்ராப்ட் மூலமாக அனுப்ப வேண்டுகிறோம்.

K. ஸ்ரீநிவாஸன்

செகரடரி

நிழல் யுத்தம்

45

யானை துரத்திற்று. முரளி தலைதெறிக்க ஓடினான். ஜனங்கள் அதிகமாய்ப் புழங்கும் பெரிய மெயின் ரோடில் யானை ஓடி வந்தது. யார் வேகமாக ஓடுகிறார்களோ அவர்களையே யானை துரத்தும் என்று யாரோ சொன்னார்கள். மெல்ல நடந்து வேறு பக்கம் திரும்பிப் போனாலும் யானை இவனையே பின் தொடர்ந்தது. மறுபடியும் முரளி ஓடினான். சின்ன செங்கல் கட்டடத்தில் புகுந்து கொண்டான். முதுகு வளைத்துப் போக வேண்டிய நுழைவாயில். ஒரே ஓர் அறை கொண்ட கட்டடம். கட்டடம் கூட இல்லை, கோவில். மார்பு வரை தரையில் பதித்த அம்மன் சிலை இருக்கும் கோயில். சிலைக்குப் பின்னே கூனிக் குறுகி ஒளிந்து கொள்ள, இவனை யானை தேடித் தவித்தது. பிறை ஓட்டை வழியே யானை துதிக்கை விட்டு இவனைத் தேடிற்று. முரளி விருட்டென்று வெளியே ஓடினான். துதிக்கையை யானை விடுவித்துக் கொள்ள நேரம் ஆகும் என்று கணக்குப் போட்டான். யானை முழு வேகத்துடன் ஓடி வந்தது. சிறிய சந்துகளில் தப்பி ஓடி ஒரு கல்யாணச் சத்திரத்துக்குள் புகுந்து பாத்திர பண்டங்கள் தாண்டிப் படியேறி வராந்தாக்களில் ஓடிப் பின் சுவர் எகிறிக் குதித்து வேறு தெருவில் நடந்த போது யானையின் கோபப் பிளிறல் கேட்டது. யாரையோ போட்டுக் காலால் மிதித்துத் துவம்சம் செய்வதை ஒரு வீட்டு சந்து வழியே பார்க்க முடிந்தது. சோர்வோடு நடக்கும் போது யானை உயரப் பறந்து வானத்திலிருந்து இவன் அருகே குதித்தது. இவனை ஆரத் தழுவிற்று.

''பயப்படாதே!'' என்று யாரோ சொன்னார்கள். ''அது பெண் யானை. உன்னைக் கொஞ்சுகிறது. உன் மீது காதல் கொண்டிருக்கிறது. அதைத் தட்டிக் கொடுத்துச் சமனப்படுத்து'' என்றார்கள். யானை துதிக்கை வளைத்து இவனை இறுக்கிக் கொண்டது. நெற்றியில் நெற்றி வைத்துத் தேய்த்தது. அசைந்து அசைந்து காமத்தோடு தவித்தது. கலவரத்தோடு முரளியும் யானையை அணைத்துக் கொண்டான். துதிக்கை இறுக்கத்தில் வலிக்கும் கையை விடுவிக்க முயன்றான். முடியவில்லை. அவஸ்தையோடு திரும்பக் கனவு கலைந்து விட்டது.

கட்டிலில் தொங்க விடப்பட்டிருந்த பூச்சரம் சுழன்று விழுந்து கையில், கழுத்தில் சுற்றிக் கொண்டிருந்தது. லலிதா இல்லை. நறுமணம் மட்டும் சுற்றிக் கொண்டிருந்தது. கசங்கிய படுக்கை கண்களில் பட்டது. இதற்குமேல் உருண்டால் விழுந்துவிடுவேன் என்று லலிதா அண்டைக் கொடுத்த தலையணை இரவுக் கதை சொல்லிற்று. பெண் சுகம், புதுப் படுக்கை, புதுத் தலையணை மாதிரி சுகம். புதுத் துணி மாதிரி நெடி கலந்த மணம். நெற்றிக்குள் காமம் தங்குகிற போது என்ன செய்கிறோம் என்பதே தெரியவில்லை. எது செய்தாலும் சுகமாக இருக்கிறது. காமம் வடிந்தவுடன் களைப்பு வந்து விடுகிறது. களைப்பு மயக்கம் ஆழ்ந்த உறக்கத்திற்குக் கொண்டு போகிறது. உறக்கம் முடிந்து எழுந்ததும் மீண்டும் நெற்றிக்குள் காமம் வந்து விடுகிறது. தொடேன், தழுவேன், இறுக்கி அணைத்துக் கொள்ளேன் என்கிற உந்துதல் வருகிறது.

நினைவே அழிந்து போகும் போதையில் கனவு எப்படி ஞாபகம் இருக்கும்? முரளிக்கு

பாலகுமாரன்



அந்தக் கனவு மறந்து போயிற்று.

இடுப்பு வேட்டியை இறுக்கி உடுத்தி, சட்டையை மாட்டிக் கொண்டு தலையைப் படிய வாரி கண் ஓரம் கட்டியிருந்த பிசுபிசுப்பை எடுத்து, வாய் கொப்பளித்து, மாடியை விட்டுக் கீழே இறங்கினேன்.

அம்மா ஹாலில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். சங்கரன் எதிரே நாற்காலியில் காப்பி குடித்துக் கொண்டிருந்தார்.

''வாம்மா...''

''ம்ம்... இவாளை நம்ம வீட்டுக்குச் சாப்பிடக் கூப்பிடணுமே... அதுக்கு வந்தேன்...''

''என்னிக்கும்மா...?''

''மறுநாளே மாப்பிள்ளை வீட்டுச் சாப்பாடு வழக்கம். எத்தனை பேர் வருவான்னு தெரியணும். அதுக்கு வந்தேன்.''

''நான், எம் பொண்ணு, போரூதா... உங்க புள்ளை...''

''இல்லே, வேறே உறவுக்காராளும் வரலாம்.''

''எதுக்குச் சிரமம் உங்க தள்ளாத வயசில்...?''

''சிரமம் என்ன? எல்லாச் சிரமமும் சந்தோஷத்துக்குன்னு சிரமமேயில்லே. உங்க சிநேகிதா யாராவது வரதாயிருந்தாலும் வரலாம்.''

''பகல் சாப்பாடா?''

''ஆமாம். இப்பவே சொன்னால்தான் நான் போய் மெள்ள ஏத்தி இறக்கச் செளகர்யமாய் இருக்கும்.''

''ஒரு செகண்ட். நேத்திக்கு ஜி. எம். சாப்பிடலே. நாழியாயிடுத்துன்னு போயிட்டார். இன்னிக்குச் சாப்பிடக் கூப்பிடலாமா?''

''வரச் சொல்லுங்கோ'' என்று அம்மா உடனே எதிரொலித்தாள்.

''எதுக்கு சார்?'' என்று முரளி மறுதலித்தான்.

''ஒரு காண்டாக்ட் பெரியவாளோட இருக்கிறது நல்லது முரளி.''

''என் வீடு கொஞ்சம் சந்து வீடு சார்.''

''அந்த மனுஷன் ரொம்ப சிம்பிள் மேன். ரெண்டு ரெண்டு வார்த்தையாகப் பேசறதை வச்சுக் கணக்குப் போடாதே. அந்த மனுஷன் பொறந்து வளர்ந்ததெல்லாம் சந்து வீடு கூரை வீடுதான். இப்பத்தான் கார், பங்களா, ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் பார்ட்டி. உள்ளே இன்னும் செமை மிடில் கிளாஸ்தான். என்னை மாதிரி.''

''நீங்க மிடில் கிளாஸா?''

''ஆமாம், மிடில் கிளாஸ்தான். மாயவரம்தான். எத்தனை கிளை பரவி எவ்வளவு உசரம் வந்தாலும் வேர் வெங்காய அடையும், குழம்புச் சாதமும்தான்.''

''ஜி. எம். மிடில் கிளாஸுங்கறது புரியலே.''




மாதம் ஒரு மாவட்டம்

செங்கல்பட்டு மாவட்ட மக்களுக்கு,

நினைவுபடுத்துகிறோம்!

கல்கி ஏற்றிருக்கும் சமுதாயப் பணியில் பதினேழாவது மாவட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது உங்கள் செங்கல்பட்டு மாவட்டம்தான். எனவே, உங்கள் மாவட்டம் பற்றிய பிரச்னைகளும், குறைகளும், அநீதிகளும், அக்கிரமங்களும் தவிர, சாதனைகளும் வளர்ச்சிக்கான ஆலோசனைகளும் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 20.7.87 என்பதை மீண்டும் நினைவுபடுத்துகிறோம்.



உடனடியாக எழுதி அனுப்புங்கள்!

— ஆசிரியர்

''நான் பயந்தேன். சமீபத்துல பேசின போது புரிஞ்சுது. அவருக்கும் இரண்டு பெண்கள் கல்யாணத்துக்கு நிக்கறது. என் பெண் கல்யாணம் பேசின போது–இந்தப் பையன் எனக்கு மாப்பிள்ளை, வேலை வேணும்னு கெஞ்சினபோது ஒரே வார்த்தை சொன்னார். புரியறது, செய்யறேன்னு. செய்துட்டார். இப்ப கூப்பிடறது கல்யாணச் சாப்பாட்டுக்கு மட்டுமில்லை. ஒரு சின்ன தேங்க்ஸ் கிவிங் மாதிரி கூட. கூப்பிடட்டுமா?''

''ஹோட்டல்ல வச்சுடலாமா சார்?''

''ஹோட்டல்...? நாங்க இங்காத ஹோட்டலா? எதுக்குத் தயங்கறே?''

''சிறுசு சார் வீடு. உட்கார்ந்தால் சாப்பிட முடியாது. சாப்பிட்ட பிறகு உட்கார முடியாது. இரண்டு ரூம், சமையலறை.''

''அதுக்குப் பார்க்காதே முரளி. பக்கத்து வீடு ஒழிச்சுத் தரேன்னிருக்கா.''

''வேண்டாம்மா. ஜி. எம். யாருன்னு தெரியாத பேசறே. கடவுள் மாதிரி. கூப்பிட்டுட்டுச் சரியா உபசரிக்கலேன்னா நன்னா இருக்காது.''

லலிதா டவலும், டூத் பிரஷ்ஷுமாய்ப் பின் பக்கத்திலிருந்து வெளியே வந்தாள். புன்னகை செய்தாள். புது டவலைத் தோளில் போட்டாள். பிரஷ்ஷைக் கையில் கொடுத்தாள். யாருக்கும் தெரியாமல் கண் சிமிட்டினாள்.

''மாடியிலேயே பல் தேய்ச்சுக்கலையா? எல்லாம் வச்சிருந்ததே...'' சங்கரன் கேட்டார்.

''இல்லை'' என்று முரளி பதில் சொன்னான்.

''வெந்நீர் ரெடி'' என்று லலிதா நடந்து கொண்டே குரல் கொடுத்தாள்.

''அம்மா வந்திருக்கா பார்த்தியா?''

''பார்த்தேன். காபி வேண்டாம்னுட்டா.''

முரளி பல் தேய்க்கப் போனான். ஜி.எம். வந்தால் திண்ணையில்தான் உட்கார வேண்டும். பத்து மணிக்குத் திண்ணையில் சுள்ளென்று வெயிலடிக்கும். திண்ணைக்கும் சுவருக்கும் இடைப்பட்ட ரேழியில் இரண்டு பேர் நடந்து போகலாம். போனவுடன் ஹால் பின்னால் சின்ன சமையலறை. ஹால் மாதிரியே இன்னொர் அறை. அதைத் தொடர்ந்து பாத்ரூம். வழக்கமான நாட்களில் அம்மா சின்ன சமையலறையில் சமைத்துவிட்டுச் சோற்றுப் பாத்திரங்களை ஹாலுக்குக் கொண்டு வந்து விடுவாள். அம்மாவும் பிள்ளையும் உட்கார்ந்து டீ.வி. பார்த்துக் கொண்டே சாப்பிடுவார்கள். கல்யாணமானால் மனைவியோடும் அப்படி உட்கார்ந்து டீ.வி. பார்த்தபடியே சாப்பிடும் கனவுகள் வந்ததுண்டு. ஆனால் ஜி.எம்.–ஐ எப்படி வரவேற்பது.... புரியவில்லை. இது வேண்டாத பிரச்னை.

''வரேன்னுட்டார்ப்பா....'' துவாலையால் துடைத்தபடி, உள்ளே நுழைந்ததும் சங்கரன் மகிழ்ச்சி பொங்கக் கூறினார்.

''கும்பலோட கும்பலா சாப்பிடறதை விடக் குடும்பத்தோட சாப்பிடறது சந்தோஷம்னார்.''

''அப்போ நான் கிளம்பறேன். பத்துப் பேர்னு கணக்குப் பண்ணிக்கலாம்னு தோணறது'' அம்மா கையூன்றி எழுந்தாள்.

''அதிகம். பேர் பாதிதான் தேறும்.''

''எனக்குப் பக்கத்து வீட்டு மனுஷா வருவா.''

''ஆஹா வரட்டும்.''

''பதினொரு மணிக்கு இலை போட்டுரலாமா?''

''சிம்பிளாச் செய்தாப் போதும்.''

''எப்படிச் செய்யறது? வாண வேடிக்கையா கல்யாணம் பண்ணினேளே?''

''எனக்கு ஒரே பெண்.''

''எனக்கும்தான். ஒரு பிள்ளை.... யாருக்கு இப்படிச் சமைக்கப் போறேன்?''

''வயசாயிடுத்தே. தள்ளலையே. இதையும் ஞாபகத்துல வச்சுக்கணும்.''

''நேத்து சாயந்தரம் கிறுகிறுன்னு வந்ததைச் சொல்றேனா? ஒரு மலைப்புதான். எட்டு வயசுல இவன் தகப்பனார் செத்துப் போனார். வளர்த்து ஆளாக்கிப் படிக்க வைச்ச வேலையும் கிடைச்சு, கல்யாணமும் பண்ணிட்டோம்ங்கற மலைப்புத்தான்.''

''பகவான் இருக்கார். நாம் என்ன செய்யறது?''

ரெங்காச்சாரி சாரீஸ்

(மிக மிக உயர்ந்த பட்டும் நூலும் கலந்து தயாரிக்கப்பட்டது)
8, ஏலா சுந்தப்பன் தெரு, (வால்டாக்ஸ் ரோடு, ப்ளுஸ்டார்
இண்டர்நேஷனல் ஹோட்டல் அருகில்

சென்னை—600 003 போன்: 33779


(கிளை: 57, ஆர்.கே. மடம் ரோடு, மந்தைவெளி
மந்தைவெளி போஸ்ட் ஆபீஸ் அருகாமை)
சென்னை—28, போன்: 77178

ரெங்கர்ச்சாரி சாரீஸ் கிடைக்கும் இடங்கள்:

எம்.என். நாகேந்திரம் சன்ஸ், மலைவாசல் (உட்புறம்) திருச்சி—620 002, போன்: 24053; திரு டி.எஸ். வெங்கடாசலம், நெ. 6, தளவாய் தெரு, வடிவீஸ்வரம், நாகர்கோவில்—2; திருமதி எஸ். செல்லமணி, நெ. 46, கிழக்கு 2 வது தெரு, மன்னார்குடி, தஞ்சாவூர் மாவட்டம்; திருமதி சாரதா கணேஷன் நெ. 408, கீழ 4 ம் வீதி, புதுக்கோட்டை—1; டி.எல். சுப்பிரமணியன், நெ. 47, சுந்தரேஸ்வர சுவாமி கோவில் வீதி, கொசப்பேட்டை, வேலூர் (வ.ஆ.); திருமதி ஆர். சாந்தா, நெ. 6, காசி விஸ்வநாதர் கோவில் தெரு, மஹாமஹா குளம், கும்பகோணம், தஞ்சை மாவட்டம், போன்: 1108; வி.கே. கார்த்திக் நெ. 5., ஏ.இ.இ. ரோடு, பாலரெங்கபுரம், மதுரை—9; ஜெயா ஷாப்பிங் சென்டர், 2—2—647—28/22 சென்ட்ரல் எக்ஸைசஸ் காலனி, சிண்டிகேட் வங்கி எதில், நியு நல்லகுண்டா, ஹைதராபாத்—13; K.S. ராஜம், 12, பழைய முன்சிப் கோர்ட் தெரு, நாமக்கல்—637 001.

குறிப்பு: சென்னை நகரில் எந்த கடைகளுக்கும் எங்கள் புடைவை சப்ளை கிடையாது. மற்ற இடங்களில் வாங்குவது எங்களுடைய தயாரிப்பு அல்ல.

— மினர்வா



நியூபன்: இந்தியாவிலேயே அதிக அளவில்.
குவார்ட்ஸ் கடிகாரம் தயாரிப்பாளர்.

Shetts 318

''அவரேதான் இன்னிச் . சாப்பாட்டுக்கும் துணை.''

''பத்தே முக்காலுக்கு வந்துடறோம்.''

''இரும்மா. நானும் வரேனே...'' முரளி பரபரத்தான்.

''எதுக்குடா. நீ மட்டும் வர்றது.. அவளையும் கூட்டிண்டு அவாளோடயே வா''

''சாப்பிட மட்டுமா?''

''வா பார்த்துப்போம்'' படியிறங்கினாள். அம்மாவுக்குள் ஏதோ தீர்மானம் நிகழ்ந்து விட்ட மாதிரி தோன்றிற்று. சட்டென்று புறக்கணித்துப் பிரிகிறான் என்பது புரிந்தது. வேற்றாக . வேறு வீட்டு மனிதனாய். அன்னியர் வீட்டுப் பிள்ளையாய் நடத்தத் துவங்கி விட்டாள் என்பது புரிந்தது.

''ஜி. எம். நேரே இங்கே வரார் முரளி. கூடவே கூட்டிண்டு போயிடுவோமே...'' சங்கரன் பதிலே,காதில் வாங்காது உள்ளே போனான்.

''லலிதா.....''

''லலிதா குளிக்கப் போயிருக்கா. வர நாழியாகும்.'' யாரோ முதியவள் சொன்னாள்.

என்ன செய்வது? இப்போது யாரை அனுப்புவது அம்மாவின் துணைக்கு.

''இன்னும் காப்பியே சாப்பிடலே போல இருக்கே. யாரங்கே பின்னாடி... ஆறிடுத்தே. வேறே காப்பி கலந்து குடுங்கோ மாப்பிள்ளைக்கு'' சங்கரன் காப்பியை எடுத்துக் கொண்டு பின்பக்கம் போனார்.

''சார்.... ஒரு நடை நானும் அம்மாவோட போயிட்டு வந்துடட்டுமா... ஒன்டியா சிரமப் படுவா....''

''இங்கே டிபன் ரெடி. குளிச்சுச் சாப்பிட்டுட்டுப் போறது. கூடமாட ஒத்தாசைக்கு என் சகோதரியை நேத்து ராத்திரியே அனுப்பிட்டேன்.''

''போறும்.''

''ஆம்பிளைகள் போய் என்ன பண்ணப் போறோம்னுதான் பொம்மனாட்டியை அனுப்பினேன். பேப்பர் படிக்கிறேளா?''

முரளி மௌனமாய் பேப்பரை வாங்கிக் கொண்டான்.

''முரளி, ஜி. எம். சாதாரணமானவர் இல்லே. ரொம்ப டேப் மேன். அவர் வர்றது பெரிய விஷயம். ஒரு பர்ஸனல் ஸெண்டிமெண்ட். லைக்கிங் இருக்குன்னு அர்த்தம். இதை கேஷ் பண்ணிக்கோ. இது முக்கியம். தபதபன்னு அக்கௌண்ட்ஸ் எக்ஸிக்யூடிவ்வா வந்துடலாம்.''

''வீடு சின்னதாச்சேன்னு பார்த்தேன்.''

''அதெல்லாம்கூட இப்பப் ப்ளஸ் பாயிண்ட். நீ யாரு.... எப்படிப் படிச்சே... எங்கே தங்கறே.... என்ன மாதிரி – எல்லாம் தெரிஞ்சுக்கறதுக்கு அவருக்கு ஒரு சந்தர்ப்பம். ஜி. எம். மாதிரி கீழே இருந்து படிப்படியா மேலே வர்றவாளுக்கு அப்படி வர்றவாளை ரொம்பப் பிடிக்கும். பணக்காரா ஸ்நேகம் அதிகம் ஒட்டாது.''

முரளி யோசித்தான்.

வாய் விட்டுச் சிரித்தான்.


(தொடரும்)



• பூபதி



• கால்வாய் இல்லாத ஏரி



• மர்மமான செடிகள்

கட்டடம் காணாத அஸ்திவாரமும் கால்வாய் இல்லாத ஏரியும்

நமது அரசாங்கம் எதைச் செய்தாலும் அரைகுறையாகத்தான் செய்யும் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம், வடாற்காடு மாவட்டத்திலுள்ள தாழையூத்து என்னும் கிராமத்திலிருக்கும் ஏரி. அந்த ஏரி காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. வேலை துவங்கியபோது நடந்த பொதுத் தேர்தலில் தி.மு.க. ஆட்சிக்கு வரவே, ஏரி வேலை அப்படியே நின்று போய்விட்டது. பிறகு, எமர்ஜென்சி காலத்தில் தி.மு.க. ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டபோது, மீண்டும் ஏரி வேலை துவங்கப்பட்டது. வேலை முடியும்தருவாயில்மறுபடியும்நடந்தபொதுத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததால் மறுபடியும் அந்த ஏரி வேலைகள் நிறுத்தப்பட்டுவிட்டன!

அதன் பிறகு, அந்த ஊர் மக்கள் அரசுக்கு ஏராளமான மனுக்கள் அனுப்பியும் பயனில்லை. "வரும் அதிகாரிகளெல்லாம் ஏரியை வந்து பார்வையிட்டுவிட்டு, வேலை முடிந்துவிட்டதாக மேலிடத்திற்கு ரிப்போர்ட் எழுதி விடுகிறார்கள். உண்மையில் ஏரி வேலை என்பது ஏரிக்குக் கரை அமைப்பது மட்டும்தானா? ஏரியில் வந்து தேங்கும் தண்ணீர் பாசனத்திற்குச் செல்லக் கால்வாய் வெட்ட வேண்டாமா? இதுவரை வெட்டப்படவில்லை! எல்லா அதிகாரிகளும் இந்தக் கால்வாய் விஷயத்தைக் கண்டு கொள்ளாமலேயே ஏரி வேலை முடிந்துவிட்டதாகத்தான் ரிப்போர்ட் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்....

"இதோடு, இன்னொரு விஷயம்.... சார்! எங்கள் ஊரிலுள்ள ஆரம்பப் பள்ளிக்குக் கட்டடம் கட்டுவதற்காகச் சுமார் இரண்டாண்டுகளுக்கு முன்பே அஸ்திவாரம் தோண்டினார்கள். அதோடு சரி, வேலை ஏதும் துவங்கப்படவில்லை. இன்னமும் அது அஸ்திவாரத்தோடுதான் கிடக்கிறது வந்து பாருங்களேன்....." என்று அழைத்துச் சென்று காட்டினார் உள்ளூர்க்காரரான சி.எஸ். பூபதி.

இடையியாக அவரிடம் விடை பெற்றுக் கொண்டு திரும்பும்போது, அவருடைய நிலத்தில் கொஞ்சமாகப் பயிரிடப்பட்டுள்ள ஒரு வகைச் செடியைச் சுட்டிக்காட்டி, "சார், இந்தச் செடிகளை நாங்கள் 'கோழிக் கிழங்கு' என்று அழைக்கிறோம். இதற்கான விதைகளை ஆந்திராவிலிருந்து ஒரு வியாபாரி கொண்டு வந்து கொடுத்துப் பயிரிடச் சொன்னார். பயிரிட்டோம். நன்றாக வளர்ந்தன. எந்தவிதமான நோய் நொடிகளும் அதைத் தாக்கவில்லை. மீண்டும் ஆறு மாதம் கழித்து வந்த அவர், அதை அறுவடை செய்யச் சொல்லி, அதிலிருந்த கிழங்கையெல்லாம் கிலோ பதினைந்து ரூபாய் வீதம் விலை கொடுத்து வாங்கிச் சென்றார். எங்களுக்கு ஆறு மாத காலத்தில் ஏக்கருக்குச் சுமார் பதினைந்தாயிரம் ரூபாய் வருமானம்! எங்களுக்கே அதிசயமாகிவிட்டது.

"அதனால் அந்தச் செடி பற்றியும் அந்தக் கிழங்கின் உபயோகம் பற்றியும் தீர விசாரித்தபோது, அந்தக் கிழங்குகள் ரத்த அழுத்தம் தொடர்பான நோய்களுக்கு மருந்துகள் தயாரிக்க உபயோகப்படுவதாக அறிந்தோம். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு எழுதிக் கேட்டபோதும் அதையேதான் உறுதி செய்தார்கள். இந்நிலையில் அந்தப் பயிரை ஏன் விவசாயப் பல்கலைக்கழகம் விளம்பரப்படுத்தவில்லை? அந்தக் கிழங்கின் உபயோகத்தைத் தெரிந்து கொள்ள நாங்கள் ஆர்வம் காட்டிய பிறகு ஏன் அந்த ஆந்திர வியாபாரி இந்தப்பக்கமேவரவில்லை? இதெல்லாம் எங்களுக்கு மர்மமாகவே இருக்கின்றன!" என்றார் பூபதி.

கால்வாய் இல்லாத ஏரி வெட்டிய அரசு, பள்ளிக் கட்டடத்துக்கு அஸ்திவாரத்தோடு திருப்தி அடைந்துவிட்ட அரசு, இந்தக் கிழங்கு - மர்மத்தை விடுவிப்பதிலாவது அழுக்கன் கிழங்காக அமர்ந்திருக்காமல் அக்கறை காட்டுமா?

— பிரின்ஸ்

குறைகள்– குறைகளைத் தீர்க்க வேண்டியவர்களுக்கும் குறைகள்!



இதுவரை நாம்சென்றுவந்தமாவட்டங்களிலேயே, ஒரே ஊரிலிருந்து ஏராளமான புகார்க் கடிதங்கள் வந்திருந்தன என்னும் அதிசயம் நடந்தது. வடாற்காடு மாவட்டம்— திருப்பத்தூருக்கு அருகிலிருக்கும் குருசிலாப்பட்டு என்னும் கிராமத்தில்தான்.

புகார்க் கடிதம் ஒன்று: நீர் வளம் மிக்க எங்கள் ஊர் ஆற்றுப்படுகையில், ஊரின் குடிநீர்த் தேவைக்காக ஒரு கிணறு தோண்டப்பட்டது. அதிலிருந்து குடிநீர் எடுத்து வருவதற்கான குழாய்களும் பஞ்சாயத்துத் தேர்தலுக்கு முன்பே புதைக்கப்பட்டுவிட்டன. பம்ப் செட்டுகளும் தயாராய் இருக்கின்றன. கிணற்றிலும் ஊற்றுக்குப் பஞ்சமில்லை. அப்படியிருந்தும் குடிநீர் வழங்கப்படவில்லை. காரணம், இதே ஆற்றுப்படுகையிலிருந்து, பஞ்சாயத்துத் தலைவரான ரங்கநாத கவுண்டரின் அண்ணன் நிலத்திற்குப் பாசன நீர் கொண்டு செல்லப்படுவதால், எங்கே ஊருக்குக் குடிநீர் வழங்க, ஆரம்பித்தால், அந்த நிலத்திற்குத் தண்ணீர் எடுத்துச் செல்லுமிடம் வறண்டு போகுமோ என்ற அச்சம் தான். அதனால்தான் பஞ்சாயத்துத் தலைவர் தாமதம் செய்கிறார்.

புகார்க் கடிதம் இரண்டு: எங்கள் குருசிலாப்பட்டு பஞ்சாயத்துக்கு உட்பட்ட பனந்தோப்பு, அண்ணா நகர், பெரியார் நகர் ஆகிய இடங்களில் சுமார் இருபது முப்பது ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வரும் ஹரிஜனங்களான எங்களுக்கு, இதுவரை தெரு மின்விளக்குகள்கூடப் போட்டுத் தரப்படவில்லை. பட்டாவும் வழங்கப்படவில்லை. இது குறித்து பஞ்சாயத்தில் ஒரு தீர்மானம் கூடப் போடப்படவில்லை. ஆனால், இவ்வூரிலுள்ள பெரிய பணக்காரர்களில் ஒருவரான பாலசுப்ரமணியம் என்பவர் ஆக்ரமித்துள்ள ஆற்றுப் புறம்போக்குக்குப் பட்டா வழங்கப்பட வேண்டுமென பஞ்சாயத்தில் உடனடியாகத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள்!

புகார்க் கடிதம் மூன்று: என் பெயர் குப்பத்தாள் என்கிற கண்ணம்மாள். நான் ஒரு விதவை. பி. லிட் படித்த என் மகள் இராஜேஸ்வரிக்கு வேலை வாங்கித் தருவதாக, இவ்வூரின் அ.தி.மு.க. பிரமுகரான துரைசாமி என்பவர் சொன்னார். அவர் தமக்கு எம்.ஜி. ஆரையே தெரியும் என்றார்.



ஆக்ரமிக்கப்பட்ட வீட்டின் முன்பு ஜீலேகா





* அ.தி.மு.க. பிரமுகர் துரைசாமி * ஷெர்புன் பீவி

அதனால் நானும் நம்பி, வேலை வாங்கித் தருவதற்காக எனது ஏழுரை சவரன் நெக்லஸை மூவாயிரம் ரூபாய்க்கு அடகு வைத்துத் துரைசாமியிடம் கொடுத்தேன். இது நடந்தது 82—ஆம் வருடம். ஆனாலும் 85—ஆம் ஆண்டு வரை அவர் என் மகளுக்கு வேலை வாங்கித் தரவில்லை. அதனால் பணத்தைத் திரும்பக் கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் பணமே வாங்கவில்லை என்று சொல்லி விட்டார். ஏழை விதவையான நான் இது குறித்துப் பஞ்சாயத்துத் தலைவரிடம் முறையிட்டும் பயனில்லாது போகவே, உள்ளூர் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தேன். ஆனால் போலீஸாரோ எனது புகாரையே வாங்க மறுத்துவிட்டார்கள். துரைசாமி ஆளுங் கட்சிப் பிரமுகர் என்பதால் என்னால் நியாயம் கேட்கக் கூட முடியவில்லை. நீங்கள் தான் ஏதாவது செய்ய வேண்டும்.

புகார்க் கடிதம் நான்கு: விதவையான என் பெயர் ஷெர்புன் பீவி. எனது ஒரே மகன் பக்கத்தூரில் கூலி வேலை செய்கிறான். எனது கணவர் இறந்த சமயம் நான் எனது தாய் வீட்டில் இருந்ததால், குருசிலாப்பட்டியிலிருந்த என் வீட்டை எனது கணவரின் சகோதரியிடம் ஒப்படைத்திருந்தேன். பிறகு நான் குருசிலாப்பட்டியிலேயே வசிக்க விரும்பி, அவர்களைக் காலி செய்து தரச் சொன்னேன். மறுத்தார்கள். அதனால் நியாயஸ்தர்களிடம் முறையிட்டேன். அவர்கள், முந்நூறு ரூபாய் கொடுக்கச் சொன்னார்கள். நானும் என் மகனும் மசூதிகளில் பிச்சை யெடுத்துச் சேர்த்த பணத்தில் முந்நூறை என் கணவரது சகோதரியிடம் கொடுத்தேன். நியாயஸ்தர்களுக்கு இருநூறு கொடுத்தேன். வீடும் மீட்கப்பட்டது. ஆனால் மறுபடியும் எனது கணவரின் சகோதரியே என் வீட்டின் பூட்டை உடைத்து ஆக்ரமித்துக் கொண்டார். அவருக்குச் சொந்தமாக வேறு ஒரு வீடு இருந்தும் இப்படிச் செய்கிறார். இதற்கு உள்ளூர் அ.தி.மு.க. பிரமுகரான துரைசாமியின் தூண்டுதல்தான் காரணம் என்றும் சொல்கிறார்கள். எப்படியாவது இந்த ஏழையின் வீட்டை மீட்டுத் தர வேண்டுகிறேன்.

புகார்க் கடிதம் ஐந்து: கடந்த 82—ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சின்னராஜ் என்கிற நானும் எனது அண்ணன் இராஜாவும், இவ்வூர்ச் செல்வந்தர்களில் ஒருவரான முகமது பஷீர் என்பவரிடம் கூலிகளாக வேலை பார்த்தோம். எங்கள் மீதும் எங்கள் நண்பர்கள் மீதும் நகை திருடியதாகப் போலீஸில் புகார் கொடுத்தார் பஷீர். எங்களைப் போலீஸார் பிடித்துச் சென்றனர். என் கண் முன்னாலேயே என் அண்ணனைப் போலீஸார் சித்திரவதை செய்தனர். அதில் அவன் இறந்து போனான். பிறகு உடலை எரித்து விட்டு, அவன் தப்பி ஓடிவிட்டதாகக் கூறினர் போலீஸார். என் அண்ணன் கொலை செய்யப்பட்டதைப் புலனாய்வு செய்த புலனாய்வுப் போலீஸார், அப்போதைய சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மீதும், மற்றும் இருபத்தெட்டுப் பேர் மீதும் வழக்குத் தொடர்ந்தனர். வேலூர் கோர்ட்டில் இந்த வழக்கு நடந்து, சில மாதங்களுக்கு முன்பு வழக்கே தள்ளுபடியாகி அனைவரும் விடுதலையாகி விட்டனர். காரணம், இவ்வழக்கு சரிவர நடத்தப்படாததுதான் என்பது என் சந்தேகம். எனவே, இவ்வழக்கை மறுபடியும் மேல் கோர்ட்டில் அப்பீல் செய்ய உதவ வேண்டுகிறேன்.

புகார்க் கடிதம் ஆறு: இவ்வூரிலுள்ள ஆளுங் கட்சிப் பிரமுகர்களின் அக்கிரமங்களை எடுத்துச் சொல்ல முடிவதில்லை. காரணம், அப்படிச் சொல்கிறவர்கள் மீது பொய் வழக்குப் போடுகிறார்கள். ஆளுங் கட்சிக்காரர்களைப் பகைத்துக் கொள்ள முடியாத போலீஸாரும், நியாயங்களைச் சொல்லும் நபர்களை நக்ஸலைட் என்று கேஸ் போட்டு விடுவதாக மிரட்டுகிறார்கள். குருசிலாப்பட்டு போலீஸ் ஸ்டேஷன் என்பது கடந்த 80—ஆம் ஆண்டு நக்ஸலைட்டுகளை ஒடுக்குவதற்காகவே ஏற்பட்டது என்பதால், வேண்டாதவர்களை 'நக்ஸலைட்' என்று முத்திரை குத்திவிடுவது சுலபம். எனவே நியாயத்தைக் கேட்கவே பயந்து கொண்டிருக்கிறோம். நீங்கள்தான் வந்து விசாரிக்க வேண்டும்!

— இப்படி ஏராளமான புகார்க் கடிதங்கள் வரவே அந்தக் 'குருசிலாப்பட்டுக்கு நேரில் சென்றோம்.

முதலில் பஞ்சாயத்துத் தலைவரைச் சந்திக்கலாமென்று போனபோது, தற்செயலாக குருசிலாப்பட்டுப் பஞ்சாயத்தின் ஒன்றியச் சேர்மன் பி.ஜி. மணியைச் சந்திக்க நேர்ந்தது. அவரிடம், ஆற்றுப் படுகையிலுள்ள கிணற்றிலிருந்து இன்னும் ஊருக்குள் குடிநீர் சப்ளை செய்யப்படாததற்கான காரணத்தைக் கேட்டபோது, ''என்னால் ஒரு பிரச்னையும் இல்லைங்க சார். ஒன்றியத்திலிருந்து நான் எப்போதோ மோட்டாரெல்லாம் கொடுத்துவிட்டேன். தாமதமெல்லாம் பஞ்சாயத்தில்தான். எனவே நீங்கள் பஞ்சாயத்துத் தலைவரிடம்தான் கேட்க வேண்டும்!'' என்றார்.

பஞ்சாயத்துத் தலைவர் ரங்கநாதக் கவுண்டரைச் சந்தித்துக் கேட்டபோது, ''என் அண்ணன் நிலத்திற்குத் தண்ணீர் எடுத்துச் செல்வதால்தான் தாமதம் என்பதெல்லாம்



ரங்கநாத கவுண்டர்



எஸ்.ஐ. பெரியசாமி

எனக்கு வேண்டாதவர்கள் சொன்ன பொய். மோட்டார் ரூம் கட்டப்பட வேண்டும். அது கட்டி முடிக்கப்பட்டதும் ஊருக்குள் குடிநீர் கனெக்‌ஷன் கொடுக்கப்பட்டுவிடும். மற்றபடி ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைப் பட்டாக் கொடுக்கத் தீர்மானம் போட, அவர்கள் என்னை வந்து அணுகினால்தானே முடியும்? அவர்கள் என்னிடம் வரவில்லை. அதனால்தான் தீர்மானம் போடவில்லை. இதுதான் உண்மை. ஹரிஜன வீதிகளுக்கான விளக்குகள் போடும் ஆயத்த வேலைகள் துவங்கிவிட்டன. விரைவில் முடிந்துவிடும்'' என்றார்.

அ.இ.அ.தி.மு.க. பிரமுகரான துரைசாமியைச் சந்தித்தபோது, ''நான் குப்பத்தாளின் மகளுக்கு வேலை வாங்கித் தருவதாகச் சொன்னது உண்மைதான். அதற்காக நான்கைந்து முறை சென்னைக்குச் சென்று வந்ததும் அதற்கான செலவுகளுக்காக ரூபாய் ஆயிரம் வரை வாங்கியதும் உண்மையே. ஆனால் மூவாயிரம் ரூபாய் வாங்கினேன் என்பது சுத்தப் பொய். நான் பொதுச் சேவையில் ஈடுபட்டிருப்பதால் காரியம் முடிந்த சந்தோஷத்தில் அவர்களாகப் பிரியப்பட்டுக் கொடுக்கும் சன்மானத்தை வாங்கித்தான் ஜீவனம் செய்கிறேனே தவிர, யாரையும் நிர்ப்பந்தப்படுத்தி வாங்குவதில்லை. குப்பத்தாள் மகளுக்கும் நான் சத்துணவு அமைப்பாளர் வேலை வாங்கிக் கொடுத்தேன். அதை அவர்கள்தான் வேண்டாமென்று மறுத்துவிட்டார்கள். நான் என்ன செய்ய முடியும்? இதோடு, நான் ஷெர்புன் பீவிக்கு எதிராக, அவருடைய கணவனின் சகோதரியைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கிறேன் என்பதும் என்னைப் பிடிக்காதவர்கள் கிளப்பிவிடும் புரளியே' தவிர, உண்மையல்ல!'' என்று மறுத்தார்.

இதன்பிறகு, நாங்கள் ஷெர்புன் பீவியின் கணவருடைய சகோதரியான ஜிலேகாவைச் சந்தித்தோம். அவர், ''நான் அப்படித்தான் செய்வேன். என்னை யார் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்'' என்றார்.

''இது என்ன நியாயம்? உங்கள் சொந்த வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு, இப்படி அடுத்தவர் வீட்டை ஆக்ரமிக்கல மா? களை முன்பு பஞ்சாயத்துச் செ ராமசாமி நாட்டாண்மையும், ஜமாத் நாட்டாண்மையான இப்ராஹிமும்கூட நீங்கள் செய்வதுதான் தவறு என்கிறார்களே?'' என்று நாம் சுட்டிக்காட்டியபோது, அவர் மிகவும் உணர்ச்சிவசப்பட்டார். பஞ்சாயத்து செய்து வைத்த அவர்களையெல்லாம் சூடான — மிகச் சூடான — விரசமான வார்த்தைகளால் விளாச ஆரம்பிக்கவே, இனி நமக்கும் அதே தொனியில்தான் பதில் கிடைக்கும் என்று திரும்பிவிட்டோம்.

கடைசியாகப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனோம். சட்டம்—ஒழுங்கு சப்—இன்ஸ்பெக்டர் பெரியசாமியைச் சந்தித்தோம். ''சார், நான் இந்த ஸ்டேஷனுக்கு மாற்றலாகி வந்து நான்கைந்து மாதங்கள்தான் ஆகின்றன. அதனால் முன்பு, நடந்ததெல்லாம் எனக்குத் தெரியாது. ஹரிஜன இளைஞரின் மரணம் தொடர்பாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு இன்னமும் சந்தேகம் தீரவில்லையானால், நிச்சயமாக அரசே அந்த வழக்கை மேல் கோர்ட்டில் அப்பீல் செய்யும். கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை.

''மற்றபடி நான் வந்த பிறகு, எந்தப் புகாரையும் நாங்கள் பதிவு செய்ய மறுத்ததே இல்லை. இதோ, இப்போதே நீங்கள் குறிப்பிடுகிற நபர்களை அழைத்துவரச் சொல்கிறேன். உங்கள் முன்னால் அவர்கள் அப்படிச் சொல்லட்டும். அடுத்த நிமிஷமே நான் எனது பதவியை ராஜிநாமாச் செய்கிறேன்....'' என்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசிய அவர், உடனடியாக அனைவரையும் அழைத்து வரச் செய்தார். வந்த அவர்கள், ''நாங்கள் இவரிடம், புகார் கொடுக்கவில்லை. முன்பிருந்தவரிடம்தான் கொடுத்தோம்!'' என்றார்கள்.

''உண்மையில் ஷெர்புன் பீவியின் நிலை பரிதாபத்திற்குரியதுதான். ஆனால் அது சிவில் மேட்டர். நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. பஞ்சாயத்துப் பேசி, ஷெர்புன் பீவியிடம் வீட்டை ஒப்படைத்த பிறகு, மறுபடியும் அந்த ஜிலேகா பூட்டை உடைத்ததென்பது கிரிமினல்தான் என்றாலும் எங்களிடம் புகார் வரவில்லையே, நாங்கள் என்ன செய்வது?'' என்றார் சப்—இன்ஸ்பெக்டர்.

இறுதியில் நாம் சப்—இன்ஸ்பெக்டரிடம் விடை பெற்றுக் கொண்டு திரும்பும் நேரத்தில் போலீஸார் அனைவரும் நம்மிடம் ஒட்டு மொத்தமாக, ''சார் இந்த ஸ்டேஷன் ஆரம்பிக்கப்பட்டு ஏழு வருஷங்களுக்கு மேலாகியும் போலீஸார் தங்குவதற்கென்று குவார்ட்டர்ஸ் ஏதும் கட்டித்தரப்படவில்லை. அதனால் நாங்கள் குடும்பத்தை வைத்துக் கொண்டு அல்லாட வேண்டியிருக்கிறது சார்....!'' என்றார்கள்.

ஆக, குருசிலாப்பட்டு மக்களின் தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகள் ஏராளமாகத்தான் இருக்கின்றன என்பது மட்டுமல்ல; பிரச்னைகளைக் கவனித்துத் தீர்க்க வேண்டிய ...ங்களுக்கே பிரச்னைகள் இருக்கின்றன!

— இளங்கோவன்


பொன்னியின் செல்வன்
இரண்டாம் பாகம் • சுழற் காற்று

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

மணியம்

பூர்வ கதை

இன்றைக்கு 970* ஆண்டுகளுக்கு முன்பு சோழ சாம்ராஜ்யம் குமரி முனையிலிருந்து வடபெண்ணைவரையில் பரவியிருந்தது. இரண்டாவது பராந்தகர் என்றும் பழையாறைச் சுந்தர சோழர் என்றும் பெயர் பெற்ற சக்கரவர்த்தி அந்தப் பெரிய ராஜ்யத்தை ஆண்டு வந்தார். முத்தரைய வம்சத்தை முறியடித்து அவர்களிடமிருந்து விஜயாலய சோழன் கைப்பற்றிய தஞ்சாவூர் நகரம் சுந்தர சோழரின் காலத்தில் சோழ நாட்டுக்குத் தலை நகரமாயிற்று. அதற்கு முன்பு நூறு ஆண்டு காலமாகக் குடந்தைக்கு அருகிலிருந்த பழையாறை, சோழர்களின் தலைநகரமாயிருந்தது.

சுந்தர சோழர் திருக்கோவலூர் மலையமானின் மகள் வானவன்மாதேவியை மணந்திருந்தார். அவர்களுக்கு இரண்டு புதல்வர்களும் ஒரு புதல்வியும் இருந்தனர். மூத்தவன் ஆதித்த கரிகாலன்; அடுத்தவள் குந்தவை; கடைக்குட்டிப் புதல்வன் பின்னால் சரித்திரத்தில் இராஜராஜ சோழன் என்று புகழ் பெற்ற அருள்மொழி வர்மன்.


சுந்தர சோழர் சிலகாலமாக நோய்வாய்ப்பட்டுத் தஞ்சாவூர் அரண்மனையில் படுத்த படுக்கையாயிருந்தார். பாரிச வாயுவினால் இரண்டு கால்களும் வலியிழந்துவிட்டபடியால் நடமாடவும் பிரயாணம் செய்யவும் முடியாத நிலையில் இருந்தார்.

அண்ணன் தம்பிகளான பெரிய பழுவேட்டரையரும், சின்னப் பழுவேட்டரையர் காலாந்தக கண்டரும் சோழ சாம்ராஜ்யத்தில் அப்போது பேரதிகாரம் படைத்திருந்தார்கள். சாம்ராஜ்யத்தின் பொக்கிஷமும் தானிய பண்டாரமும் வரி விதிக்கும் அதிகாரமும் பெரிய பழுவேட்டரையரிடம் இருந்தன. சின்னப் பழுவேட்டரையர் தஞ்சைக் கோட்டையின் காவற்படைக்கு அதிபதியாக விளங்கினார்.


இளம் வயதிலேயே போர்க்களம் சென்று வீராதி வீரன் என்று பெயர் வாங்கிய ஆதித்த கரிகாலன் இளவரசுப் பட்டம் சூட்டப் பெற்றுக் காஞ்சியில் வட திசைச் சைனியத்தின் அதிபதியாகத் தங்கியிருந்தான்.

தென்திசைப் படையின் மாதண்ட நாயகனாகிய அருள்மொழி வர்மன் இலங்கைத் தீவுக்குப் பெரும் படையுடன் சென்று போர் புரிந்து கொண்டிருந்தான்.


* 1950 இல் எழுதியது.




செம்பியன் மாதேவி



சுந்தரசோழர்



வானவன் மாதேவி



அருள்மொழி வர்மன்

அவர்களுடைய சகோதரி குந்தவைப் பிராட்டியும் மற்றும் பல சோழ குலத்து அந்தப்புர மாதரும் பழையாறை நகரில் இருந்தார்கள.

இத்தகைய சமயத்தில் நாடு நகரமெங்கும் ஓர் அதிசயமான வதந்தி பரவியது. சுந்தர சோழருக்கும் அவருடைய குமாரர்களுக்கும் எதிராக ஒரு பெரிய சதி நடக்கிறது என்பதுதான் அவ்வதந்தி. பழுவேட்டரையர்களும் மற்றும் சம்புவரையர் முதலிய சோழ நாட்டுப் பிரமுகர்கள் பலரும் அச்சதியில் கலந்து கொண்டிருந்தனர்.

சுந்தர சோழரின் பெரிய தந்தையும் சிவஞானச் செல்வருமான கண்டராதித்தரின் குமாரன் மதுராந்தகன் சில காலத்துக்கு முன்பு வரையில் சிவபக்தியில் திளைத்த வைராக்ய சீலனாக விளங்கினான். சின்னப் பழுவேட்டரையரின் மகளை மணந்து கொண்டதிலிருந்து அவனுடைய மனம் மாறி உலக வாழ்க்கையில் ஈடுபட்டது. சுந்தர சோழச்சக்கரவர்த்திக்குப் பிறகு மதுராந்தகனைச் சிம்மாசனம் ஏற்றுவது என்று, சதி செய்தவர்கள் தீர்மானித்திருந்தார்கள்.

வானத்தில் சில காலமாகத் தூமகேது என்னும் வால் நட்சத்திரம் காணப்பட்டு வந்தது. இதை ஓர் உற்பாதமாக மக்கள் கருதினார்கள். இராஜ வம்சத்தில் ஏதோ விபரீதம் நிகழப் போகிறது என்று நாடு நகரமெல்லாம் ஜனங்கள் மிகுந்த கவலையுடன் பேசிக் கொண்டார்கள்.

காஞ்சியில் இருந்த இளவரசன் ஆதித்த கரிகாலன் காதுக்கு இச்செய்திகள் எட்டின. தன் தந்தையைப் பற்றி அவன் மிக்க கவலை கொண்டான். பழுவேட்டரையர்களின் ஆதிக்கத்திலிருந்து சுந்தர சோழரை மீட்டுக் காஞ்சிக்குக் கொண்டுவர விரும்பினான்.

காஞ்சியில் ஆதித்த கரிகாலன் புதிதாகப் பொன் மாளிகை கட்டியிருந்தான். சுந்தர சோழர் காஞ்சிக்கு வந்து சில காலம் அப்பொன் மாளிகையில் தங்கியிருக்க வேண்டும் என்று பிரார்த்தித்து ஓலை ஒன்று எழுதினான். அதை வல்லவரையன் வந்தியத்தேவன் என்னும் தன் அந்தரங்க நம்பிக்கைக்குரிய வீரனிடம் கொடுத்து அனுப்பினான்.

ஆதித்தன் தன் இளம் வயதில் நந்தினி என்னும் அர்ச்சகர் வீட்டுப் பெண்ணைக் காதலித்தான். அது தகாத காதல் என்று செம்பியன் மாதேவி அவனுக்குப் போதனை செய்தாள். பிரசித்தி பெற்ற சிவஞான கண்டராதித்தரின் பட்ட மகிஷி செம்பியன் மாதேவி. சோழ வம்சத்தைச் சேர்ந்த அனைவரும் அந்த மூதாட்டியிடம் பக்தி கொண்டு நடந்தனர். ஆதித்த கரிகாலனும் தன் பெரிய பாட்டியின் கட்டளைக்குக் கீழ்ப் படிந்தான். ஆனால் நந்தினியை அவனால் அடியோடு மறக்க முடியவில்லை.

பெரிய பழுவேட்டரையர் அறுபது பிராயத்துக்கு மேலே நந்தினியை மணந்து கொண்டார். நந்தினி பழுவூர் அரண்மனையில் சர்வாதிகாரியானாள். தன்னை நெருங்கிய யாரையும் தன் இஷ்டப்படி செய்விக்கும் மாய மோகன சக்தியை நந்தினி பெற்றிருந்தாள். ஒருமுறை அவள் ஆதித்த கரிகாலனிடம் தன் சக்தியைச் செலுத்தினாள். சுந்தர சோழரைச் சிறையில் அடைத்துவிட்டு, கிழவர் பழுவேட்டரையரைக் கொன்று விட்டு, தன்னை மணந்து தஞ்சை சிம்மாசனத்தில் ஏற்றுவிக்கும்படி ஆதித்தனைக் கேட்டாள். அந்தப் பயங்கரச் செயலுக்குக் கரிகாலன் உட்பட மறுத்துவிட்டான். ஆயினும் இப்போது தஞ்சாவூருக்குப் போவது என்றாலே கரிகாலனுக்கு அச்சமாயிருந்தது. ஆகையினாலேயே வந்தியத்தேவனை அனுப்பினான்.

வந்தியத்தேவன் வழியில் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் தங்கியிருந்தபோது சோழ நாட்டுப் பிரமுகர்களின் சதியாலோசனையைப் பற்றித் தெரிந்து கொண்டான். பிறகு, தஞ்சாவூர் போய்ச் சேர்ந்தான். அங்கே நந்தினியைச் சந்தித்துப் பனை இலச்சினையுள்ள முத்திரை மோதிரத்தை வாங்கிக் கொண்டான். அதன் உதவியால் சுந்தர சோழரைப் பேட்டி கண்டான். அவரைச் சூழ்ந்திருந்த அபாயங்களைப் பற்றி எச்சரிக்கை செய்ய எண்ணிய சமயத்தில் சின்னப் பழுவேட்டரையர் வந்து குறுக்கிட்டார்.

வந்தியத்தேவன் தற்செயலாகத் தஞ்சாவூர்ப் பொக்கிஷம் வைத்திருந்த நிலவறையைப் பார்க்க நேர்ந்தது. இதை அறிந்த பழுவேட்டரையர்கள் அவன் தப்பிச் செல்லாமல் கைப்பற்ற முயன்றார்கள். அவர்களுடைய வீரர்களுக்கு அவன் 'டிமிக்கி' கொடுத்து விட்டுப் பழையாறையை அடைந்தான். குந்தவை தேவியைப் பார்த்து ஓலை


சின்னப் பழுவேட்டரையர்


பெரிய பழுவேட்டரையர்


ஆழ்வார்க்கடியான்


நந்தினி



வந்தியத்தேவன்



குந்தவைப் பிராட்டி

யைக் கொடுத்தான்.

ஏற்கெனவே குந்தவையைப் பற்றிக் கேள்விப்பட்டு வந்தியத்தேவன் தன் உள்ளத்தை அவளுக்குப் பறி கொடுத்திருந்தான். குடந்தையிலும் அரிசிலாற்றங்கரையிலும் அவளைச் சந்தித்தும் இருந்தான். இலங்கைக்குப் போகவேண்டும் என்ற ஆசையும் அவன் மனத்தில் குடிகொண்டிருந்தது. எனவே குந்தவை சொன்னபடி அவன் ஈழத்துக்கு உடனே செல்ல ஆயத்தமானான். "பொன்னியின் செல்வ! இராஜ்யத்துக்குப் பேரபாயம் வந்திருக்கிறது. உடனே புறப்பட்டு வா!" என்று குந்தவை ஓலை எழுதிக் கொடுத்தாள். அதை எடுத்துக் கொண்டு வந்தியத்தேவன் புறப்பட்டான்.

ஆதித்தகரிகாலனுடைய உள்ளம் மிகக் குழம்பியிருந்தது. வந்தியத்தேவனைப் பற்றித் தகவல் ஒன்றும் தெரியாதபடியால் அவனுடைய கவலை அதிகமாயிற்று. தம்பிக்கு இளவரசுப் பட்டம் கட்டிவிட்டுத் தான் வெளி நாடுகள் பலவற்றுக்கும் சென்று தமிழர் வீரத்தையும் சோழர் புகழையும் நிலைநாட்ட விரும்பினான். ஆகையால் தன் சகோதரன் அருள்மொழி வர்மனைத் தருவித்துக் காஞ்சியில் இளவரசுப் பட்டம் சூட்டிவிட்டுத் தான் ஈழத்துக்கும், சாவகம், புட்பகம், கடாரத்துக்கும் போக விரும்பினான். அவனுடைய மற்றோர் அந்தரங்க நண்பனான பல்லவ குல பார்த்திபேந்திரனை அழைத்துத் தன் மனக் கவலைகளை வெளியிட்டான். இலங்கைக்குச் சென்று அருள்மொழி வர்மனை உடனே காஞ்சிக்கு அழைத்து வரும்படி பணித்தான். பார்த்திபனும் அதற்குச் சம்மதித்தான்.

வந்தியத்தேவன் தன் பிரயாணத்தில் ஆழ்வார்க்கடியான் என்னும் வீர வைஷ்ணவனைச் சந்தித்தான். ஆழ்வார்க்கடியான் நாடெங்கும் சஞ்சரித்துத் துப்பறிந்து வந்தான். ஆனால் யாருடைய சார்பில் அவன் வேலை செய்கிறான் என்று தெரியவில்லை. ஆகையால் அவன் பேரில் வந்தியத்தேவனுக்கு ஐயம் உண்டாகியிருந்தது.

இனி, இவ்விதழில் ஆரம்பமாகும் "பொன்னியின் செல்வன்" இரண்டாம் பாகத்தைப் பழைய நேயர்களோடு புதிய வாசகர்களும் சேர்ந்து படிக்கத் தொடங்கலாம்.

முதல் அத்தியாயம்

பூங்குழலி

அந்தி நேரம் அமைதி பெற்று விளங்கியது. கோடிக்கரையின் ஓரத்தில் கடல் அலை அடங்கி ஓய்ந்திருந்தது. கட்டு மரங்களும் படகுகளும் கரையை நெருங்கிக் கொண்டிருந்தன. கடலில் இரை தேடச் சென்ற பறவைகள் திரும்பி வந்து கொண்டிருந்தன. கரையில் சிறிது தூரம் வெண் மணல் பரந்திருந்தது. அதற்கு அப்பால் வெகு தூரத்துக்கு வெகு தூரம் காடு படர்ந்திருந்தது. காட்டு மரங்களின் கிளை ஆடவில்லை; இலைகள் அசையவில்லை. நாலாபக்கமும் நிசப்தம் நிலவியது. செங்கதிர்த் தேவன் கடலும் வானும் கலக்கும் இடத்தை நோக்கி விரைந்து இறங்கிக் கொண்டிருந்தான். மேகத் திரள்கள் சில சூரியனுடைய செங்கதிர்களை மறைக்கப் பார்த்துத் தாங்களும் ஒளி பெற்றுத் திகழ்ந்தன.

கரை ஓரத்தில் கடலில் ஒரு சிறிய படகு மிதந்தது. கடலின் மெல்லிய அலைப் பூங் கரங்கள் அந்தப் படகைக் குழந்தையின் மணித் தொட்டிலை ஆட்டுவது போல மெள்ள மெள்ள அசைத்தன. அந்தப் படகில் ஓர் இளம் பெண் இருந்தாள். அவளைப் பார்த்ததும் சேந்தன் அமுதன் தன் மாமன் மகளைக் குறித்து வர்ணனை செய்தது நமக்கு நினைவு வருகிறது. ஆம்; இவள் பூங்குழலியாகத்தான் இருக்க வேண்டும். பெயருக்குத் தகுந்தாற் போல் இவள் கூந்தலில் ஒரு தாழம்பூவின் இதழ் அழகு பெற்றுத் திகழ்ந்தது. நீண்ட கரிய கூந்தல் சுருண்டு சுருண்டு

விழுந்து அவளுடைய கடைந்தெடுத்த தோள்களை அலங்கரித்தன. கடல் அலைகள் கரையில் ஒதுக்கும் சங்குகள், சிப்பிகள் முதலியவற்றை ஆரமாக்கி அவள் அணிந்து கொண்டிருந்தாள். ஆனால் இவையெல்லாம் அவளுடைய மேனியில் பட்டதனால் தாங்களும் அழகு பெற்றனவேயன்றி, அவளை அலங்கரித்ததாகச் சொல்ல முடியாது. அழகே ஒரு வடிவம் தாங்கி வந்தால், அதற்கு எந்த ஆபரணத்தைக் கொண்டு அழகு செய்ய முடியும்?

பூங்குழலி படகில் ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டு பாடினாள். அவளுடைய கானத்தைக் கேட்பதற்காகவே கடலும் அலை அடங்கி ஓய்ந்திருந்தது போலும்! அதற்காகவே காற்றும் வீசி அடிக்காமல் மெள்ளத் மெள்ளத் தவழ்ந்து வந்தது போலும்! தூரத்தில் தெரிந்த காட்டு மரங்களும் இலை அசையாமல் நின்று அவளுடைய கானத்தைக் கவனமாகக் கேட்டன போலும்! வானமும் பூமியும் அந்த கானத்தைக் கேட்டு மதிமயங்கி அசைவற்று நின்றன போலும்! கதிரவன் கூட அந்த கானத்தை முன்னிட்டே மேலைக் கடலை அடைந்தும் முழுகி மறையாமல் தயங்கி நிற்கிறான் போலும்!


தேனில் குழைந்து வானில் மிதந்து வந்த அப்பாடலை நாமும் சற்றுச் செவி கொடுத்துக் கேட்கலாம்:

"அலை கடலும் ஓய்ந்திருக்க
அகக் கடல்தான் பொங்குவ
தேன்?
நில மகளும் துயிலுகையில்
நெஞ்சகந்தான் பதைப்பதுமேன்?
காட்டினில் வாழ் பறவைகளும்
கூடுகளைத் தேடினவே!
வேட்டுவரும் வில்லியரும்
வீடு நோக்கி ஏகுவரே!
வானகமும் நானிலமும்
மோனமதில் ஆழ்ந்திருக்க
மான்விழியாள் பெண்ணொருத்தி
மனத்தில் புயல் அடிப்பதுமேன்?
வாரிதியும் அடங்கி நிற்கும்
மாருதமும் தவழ்ந்துவரும்
காரிகையாள் உளந்தனிலே
காற்று சுழன் றடிப்பதுமேன்?"

அந்த இளமங்கையின் உள்ளத்தில் அப்படி என்ன சோகம் குடிகொண்டிருக்குமோ, தெரியாது! அவளுடைய தீங்குரலில் அப்படி என்ன இன்ப வேதனை கலந்திருக்குமோ, தெரியாது! அல்லது அப்பாடலின் சொற்களோடு ஒருவேளை கண்ணீரைக் கலந்துதான் பாடலை அமைத்துவிட்டார்களோ, அதுவும் நாம் அறியோம். ஆனால் அந்தப் பாடலை அவள் பாடுவதைக் கேட்கும்போது நமக்கு நெஞ்சம் விம்மி வெடித்துவிடும் போன்ற உணர்ச்சி ஏனோ உண்டாகிறது.

பூங்குழலி கானத்தை நிறுத்தினாள். படகின் துடுப்பை நாலு தடவை வலித்தாள். படகு கரை அருகில் வந்து சேர்ந்தது. பூங்குழலி படகிலிருந்து துள்ளிக் குதித்துக் கரையில் இறங்கினாள். படகைக் கரையில் இழுத்துப் போட்டாள். கரையில் சில கட்டு மரங்கள் குப்பலாகக் கிடந்தன. அவற்றின் மீது படகு சாய்ந்து நிற்கும்படி தூக்கி நிறுத்தினாள். சாய்ந்து நின்ற படகில் தானும் சாய்ந்து கொண்டு ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்தாள்.

அதோ கலங்கரை விளக்கின் உச்சி மண்டபத்தில் தீ மூட்டியாகிவிட்டது. தீ, ஜுவாலை விட்டு எரிகிறது. இனி இரவெல்லாம் அந்த ஜோதி எரிந்து கொண்டிருக்கும். கடலில் செல்லும் மரக்கலங்களுக்கு அது "அருகில் நெருங்க வேண்டாம்!" என்று எச்சரித்துக் கொண்டிருக்கும். கோடிக் கரை ஓரத்தில் கடலில் ஆழமே கிடையாது. கட்டு மரங்களும் சிறிய படகுகளும்தான் அந்தப் பகுதியில் கரை ஓரமாக அணுகி வரலாம். மரக்கலமும் நாவாயும் நெருங்கி வந்தால் தரை தட்டி மணலில் புதைந்துவிடும். வேகமாகத் தரையில் மோதினால் கப்பல் பிளந்து உடைந்தும் போய்விடும். ஆதலின், கோடிக் கரையில் உள்ள கலங்கரை விளக்கம் கப்பல் ஓட்டிகளுக்கு மிகவும் அவசியமான உதவியைச் செய்து வந்தது. மற்றொரு பக்கத்தில் குட்டை மரங்



கள் அடர்ந்த காட்டின் நடுவில் கோபுரம் ஒன்று தலை தூக்கி நின்றது. அதனடியில் கோடிக்கரைக் குழகர் கோவில் கொண்டிருந்தார். சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் இந்தக் கோடிக் கரைக்கு வந்தார். காட்டின் மத்தியில் தன்னந்தனியே கோயில் கொண்டிருந்த குழகரைத் தரிசித்தார். "அந்தோ! இறைவா! இப்படி இந்தக் கடற்கரைக் காட்டின் மத்தியில் துணையின்றித் தனியே இருந்தீரே? இருக்க வேறு இடமாயில்லை? பக்தர்கள் கூட்டங் கூட்டமாக உமது புகழைப் பாடிக் கொண்டிருக்கும் ஸ்தலங்கள் எத்தனையோ இருக்க, இந்தக் கோடிக்கு வந்து பயங்கரக் காட்டிலே தனியே கோயில் கொண்டிருப்பதேன்? இக்கொடியேனுடைய கண்கள் இந்தக் காட்சியையும் காண நேர்ந்ததே!" என்று மன முருகிப் பாடினார்.

"கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரைமேல்
குடிதானயலே இருந்தாற் குற்ற மாமோ?
கொடியேன் கண்கள் கண்டன கோடிக் குழகீர்
அடிகேள் உமக்கார் துணையாக இருந்தீரே?"

"மத்தம் மலிசூழ் மறைக்காடதன் றென்பால்
பத்தர் பலர் பாடவிருந்த பரமா!
கொத்தார் பொழில்சூழ் தருகோடிக் குழகா
எத்தாற் றனியே யிருந்தாய்? எம் பிரானே!"

ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனார் வந்து தரிசித்து விட்டுப் போன இருநூறு ஆண்டுகளுக்குப் பிறகும் கோடிக் கரைக் குழகர் அதே நிலையில்தான் இருந்தார்.* சுற்றிலும் இன்னும் கொஞ்சம் காடுகள் மண்டிப் போயிருந்தன. அக்காடுகளில் மரப் பொந்துகளில் ஆந்தைகளும் கூகைகளும் குழறின. பார்ப்பதற்குப் பயங்கரமான வேடுவர்கள் சிலர்தான் காட்டின் மத்தியில் ஆங்காங்கு குடிசை போட்டுக் கொண்டு வசித்தார்கள்.

ஆம்; ஒரே ஒரு வித்தியாசம் இருந்தது. ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் இங்கு வந்திருந்தபோது கலங்கரை விளக்கம் இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு, முதற் பராந்தகரின் காலத்திலேதான் அது கட்டப்பட்டது. கலங்கரை விளக்கத்தில் பணி செய்வோருக்கென்று சில ஓட்டு வீடுகள் அதைச் சுற்றிக் கட்டப்பட்டன. கோடிக்கரைக் குழகர் கோயிலில் பூஜை செய்யும் பட்டரும் அங்கே வந்து குடியேறினார்.

பூங்குழலி கடற்கரை ஓரத்தில் படகின் மீது சாய்ந்த வண்ணம் நாற்புறமும் பார்த்தாள். கலங்கரை விளக்கத்தைப் பார்த்து அந்தப் பக்கம் போகலாமா என்று யோசித்தாள். பிறகு, குழகர் கோயிலின் கோபுர கலசத்தை நோக்கினாள். அச்சமயம் கோயிலில் சேமங்கலம் அடிக்கும் ஓசை கேட்கவே, பூங்குழலி ஒரு தீர்மானத்துக்கு வந்தாள். அதற்குள் வீட்டுக்குப் போய் என்ன செய்வது? கோயிலுக்குப் போகலாம். பட்டரைத் தேவாரம் பாடச் சொல்லிக் கேட்கலாம். பிறகு பிரசாதமும் வாங்கிக் கொண்டு வரலாம்.

இப்படி முடிவு செய்து கொண்டு பூங்குழலி கோயில் இருந்த திசையை நோக்கி நடந்தாள். ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் துள்ளிக் குதித்துக் கொண்டும் நடந்தாள். வழியில் மான் கூட்டம் ஒன்றைக் கண்டாள். மான்கள் மணல் வெளியைத் தாண்டிக் காட்டை

* ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இன்றைக்கும் கோடிக்கரைக் குழகர் அதே தனிமை நிலையில் தான் இருந்து வருகிறார்!

நோக்கிச் சென்று கொண்டிருந்தன. ஏழெட்டுப் பெரிய மான்களோடு ஒரு சிறிய மான் குட்டியும் பாய்ந்து பாய்ந்து ஓடிக் கொண்டிருந்தது. மான் கூட்டத்தைப் பார்த்ததும் பூங்குழலிக்கு உற்சாகம் உண்டாயிற்று. அவற்றைப் பிடிக்கப் போவது போல் தொடர்ந்து குதித்து ஓடினாள். ஆனால் என்னதான் விரைவாக ஓடினாலும் மான்களோடு போட்டியிட முடியுமா! மான் கூட்டம் பூங்குழலியை முந்திக் கொண்டது.

முன்னால் சென்ற மான்கள் ஓரிடத்தில் நாலு கால்களையும் தூக்கி வானத்தில் பறப்பது போல் நீண்ட தூரம் தாவிக் குதித்தன. அங்கே புதை சேற்றுக் குழி இருக்கிறது என்று பூங்குழலி ஊகித்துக் கொண்டாள். பெரிய மான்கள் எல்லாம் அக் குழியை ஒரே தாண்டலில் தாண்டி அப்பால் பத்திரமாய் இறங்கிவிட்டன. ஆனால் மான் குட்டியினால் முழுதும் தாண்ட முடியவில்லை. அக் கரை ஓரமாக அதன் பின்னங்கால்கள் சேற்றுக் குழியில் அகப்பட்டுக்கொண்டன. முன்னங் கால்களைக் கரையில் ஊன்றி மான் குட்டி ஆன மட்டும் கரை ஏற முயன்றது. ஆனால் அதன் பின்னங் கால்கள் சேற்றில் மேலும் மேலும் புதைந்து கொண்டிருந்தன. தாய் மான் கரையில் நின்று குட்டியின் நிலையைக் கவலையுடன் நோக்கியது. அதனால் தன் குட்டிக்கு உதவி எதுவும் செய்ய முடியவில்லை.

இதையெல்லாம் ஒரு நொடியில் பார்த்து அறிந்து கொண்ட பூங்குழலி அந்தப் புதை சேற்றுக் குழி எங்கே



முடிகிறது என்பதைக் கண்டு தெரிந்து கொண்டாள். புதைகுழி ஓரமாக ஓடிச் சென்று கெட்டியான இடத்தின் வழியாகக் கடந்து எதிர்ப்புறத்தில் மான் குட்டி சேற்றில் அகப்பட்டுக் கொண்டு தவித்த இடத்தை அணுகினுள். தாய் மான் முதலில் அவளைக் கண்டு மிரண்டது. பூங்குழலிக்கு மானின் பாஷை தெரியும் போலும்! மிருதுவான குரலில் அவள் ஏதோ சொல்லவும் தாய் மான் பயம் நீங்கி நின்றது. பூங்குழலி புதை சேற்றுக் குழியின் கரை ஓரத்தில் முன்னங் கால்களை மடித்து உட்கார்ந்து கைகளை நீட்டி மான் குட்டியைப் பற்றிப் பலமாக இழுத்துக் கரையேற்றினுள். சில விஞடி நேரம் அந்த மான் குட்டியின் உடம்பு வெடவெடவென்று நடுங்கிக் கொண்டிருந்தது. தாய் மான் அதனருகில் நின்று முகர்ந்து பார்த்துத் தைரியம் கூறியது போலும்! அவ்வளவுதான்! அடுத்த விஞடி தாயும் குட்டியும் மீண்டும் பாய்ந்தோடின.

"ஓ! கொஞ்சமும் நன்றியில்லாத மிருக ஜன்மங்கள்!" என்று பூங்குழலி தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். "ஆனல் மனிதர்களை விட இந்த [illegible] போய்விடவில்லை!" என்று அவளே தேறுதலும் சொல்லிக் கொண்டாள்.

பிறகு மறுபடியும் குழகர் ஆலயத்தை நோக்கி நடந்தாள்.

மணல் வெளியைத் தாண்டியதும் மரஞ் செடிகள் அடர்ந்த காட்டு வழியில் போக வேண்டியிருந்தது. மேட்டில் ஏறியும் பள்ளத்தில் இறங்கியும் போக வேண்டியிருந்தது. அந்தக் காட்டை இயற்கையின் விசித்திரங்களில் ஒன்று என்றே சொல்ல வேண்டும். அங்கே கற்பாறைகளினுல் அமைந்த மலைகளோ, குன்றுகளோ இல்லை. ஒரே மணல் வெளிதான். ஆங்காங்கு மணல் மேடிட்டு மணல் மேட்டின்மீது செடிகளும் மரங்களும் முளைத்ததினுல் கெட்டிப்பட்டுக் குன்றுகளாகவே மாறிப் போயிருந்தன. குன்றுகளுக்குப் பக்கத்தில் பள்ளங்களும் இருந்தன. அத்தகைய காட்டில் வழி கண்டு பிடித்துப் போவது எளிய காரியமன்று. வெகு தூரம் நடந்துவிட்டது போலத் தோன்றும்; ஆனல் திரும்பத் திரும்பப் புறப்பட்ட இடத்துக்கே





வந்து கொண்டிருப்போம்.

பூங்குழலி அந்தக் காட்டு வழியில் புகுந்து அதி விரைவாக நடந்து ஆலயத்தினருகே வந்துசேர்ந்தாள். கோவிலுக்கு வெளியிலும் உட்பிராகாரத்திலும் கொன்னை, பன்னீர் முதலிய மரங்கள் ஓங்கி வளர்ந்து மலர்ந்து குலுங்கிக் கொண்டிருந்தன.

பூங்குழலி ஆலயத்துக்குள் போனாள். பட்டர் அவளைப் பார்த்து முகமலர்ந்தார். அந்தக் கோயிலுக்குள் சுவாமி தரிசனம் செய்வதற்காக வருவோர் அருமை. ஆதலின் அருமையாக வருகிறவரைப் பார்த்துப் பட்டர் மகிழ்வது இயல்புதானே?

தேங்காய் மூடியும் பிரஸாதமும் கொண்டு வந்து பட்டர் கொடுத்தார். "அம்மா! கொஞ்சம் காத்திருக்கிறாயா! நானும் இதோ சந்நிதியைப் பூட்டிக் கொண்டு வீட்டுக்கு வருகிறேன்!" என்றார். இருட்டிய பிறகு அந்தக் காட்டு வழியில் செல்வது கொஞ்சம் சிரமமான காரியந்தான். ஆனால் வழி காட்டுவதற்குப் பூங்குழலி இருந்தால் கவலையே கிடையாது.

"இருக்கிறேன், ஐயா! எனக்கு அவசரம் ஒன்றுமில்லை. மெதுவாகக் கோயில் கைங்கரியங்களை முடித்துக் கொண்டு புறப்படுங்கள்!" என்று பூங்குழலி கூறிவிட்டுக் கோயில் பிராகாரத்துக்கு வந்தாள். மரக்கிளை ஒன்றைப் பிடித்துக் கொண்டு, பிராகாரத்தின் மதில் சுவரின்மேல் தாவி ஏறினாள். மதில் மூலையில் நந்திபகவானுடைய பெரிய சிலை ஒன்று அமைந்திருந்தது. அந்தச் சிலை மீது சிறிது சாய்ந்த வண்ணம் மதில் மீது காலை நீட்டிப் படுத்தாள். தேங்காய் மூடியைப் பல்லினால் கறண்டிச் சாப்பிடத் தொடங்கினாள்.

நாலாபுறமும் இருள் சூழ்ந்து வரும் விசித்திரத்தைப் பூங்குழலி பார்த்துக் கொண்டேயிருக்கையில், குதிரையின் காலடிச் சத்தத்தைக் கேட்டாள். சத்தம் வந்தவழியே ஆவ

அருள் வாக்கு



நாம் அனுபவிப்பதற்காகப் பிரபஞ்சம் முழுவதையும் ஈசுவரன் நமக்கென விட்டிருக்கிறார். பலவிதமான போக்கிய வஸ்துக்களை வெளியே உண்டாக்கி, அவற்றை அனுபவிக்கிற இந்திரியங்களை நம்மிடம் வைத்திருக்கிறார். எனவே, நாம் அனுபவிப்பதை எல்லாம் அவருக்குச் சமர்ப்பித்து விட்டே உபயோகித்துக் கொள்ள வேண்டும். உண்மையில் அவருக்கே என்று அன்னத்தைக் கொடுத்து விடுகிறோம்? வெறுமே அவரிடம் காட்டுகிறோம்; பிறகு நாம்தான் புசிக்கிறோம்.

'நைவேத்தியம் செய்தால் ஸ்வாமி எங்கே சாப்பிடுகிறார்?' என்று சிலர் கேலியாகக் கேட்கிறார்கள். நிவேதனம் என்றால் ஸ்வாமியைச் சாப்பிடச் செய்வது என்று அர்த்தமே இல்லை. அவருக்குச் சாப்பிட்டு ஒன்றும் ஆகவேண்டாம். நம் நினைவைச் சுத்தமாக்கிக் கொள்ளத்தான் பூஜை முழுவதுமே தவிர அவருக்கு இதனால் ஆவது எதுவுமில்லை. 'நிவேதயாமி' என்றால் 'அறிவிக்கிறேன்' என்றுதான் அர்த்தமே தவிர 'உண்பிக்கிறேன்' என்று அர்த்தமல்ல. 'அப்பனே, இந்த வேளைக்கு உன் கருணையில் நீ இந்த அன்னத்தைக் கொடுத்திருக்கிறாய்' என்று அவனுக்குத் தெரிவித்து விட்டு அவனுடைய நினைவோடு உண்ண வேண்டும். அவன் அருள் இல்லாவிட்டால் இந்த அரிசி எப்படி விளையும்? ஸயன்ஸ் நிபுணர் அரிசி வகைகளை ஆராய்ந்து பெரிய பெரிய புஸ்தகங்கள் எழுதலாம்; ஆனால் அவரால் ஒரு மணி அரிசியைச் செய்ய முடியுமா? செயற்கை அரிசி (Synthetic Rice) என்று ஒன்றைச் செய்ய முடிந்தால் கூட இதற்கு மூலமான கெமிகல்ஸ் ஏற்கெனவே பகவத் ஸ்ருஷ்டியில் இருந்துதானே ஆகவேண்டும்? எனவே மனிதன் செய்ததாகத் தோன்றும் எல்லாமும் கூட முடிவிலே ஈசுவரன் ஸ்ருஷ்டித்ததுதான். பரமேசுவரனால் கொடுக்கப்பட்டதை அவனுக்குக் காட்டாமலே நாம் அனுபவித்தால் திருடர்களாவோம்.

அவனைப் பூஜை என்று வைத்து ஒவ்வொரு குடும்பத்திலும் கூப்பிட்டு, அவனால் கொடுக்கப்பட்டதை உபயோகிக்கிறோம் என்று அவனிடம் அறிவிக்க வேண்டும். இப்படிச் செய்து வந்தால் ஈசுவரனுக்கு நிவேதனமாக அர்ப்பிக்கத் தக்கதைத் தவிர வேறெதையுமே நாம் உபயோகிக்கக் கூடாது என்ற பக்குவம் நாளடைவில் உண்டாகும். நல்லவர்களாவோம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

னுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். குதிரைக் காலடியின் சத்தம் அவளுடைய உள்ளத்தில் ஏதேதோ பழைய ஞாபகங்களை எழுப்பி அவளைக் கனவு லோகத்துக்குக் கொண்டு போயிற்று. எங்கிருந்தோ இனந்தெரியாத ஒரு துக்கம் வந்து நெஞ்சை அடைத்தது. வருகிறது யாராயிருக்கக் கூடும்? யாராயிருந்தால் நமக்கு என்ன கவலை? கொஞ்ச காலமாகப் புது ஆள்கள் வருகிறதும் போகிறதும் அதிகமாய்த்தானிருக்கிறது. இராஜாங்க காரியமாக வருகிறார்களாம்; போகிறார்களாம். நேற்றைக்குக்கூட இரண்டுபேர் வந்திருந்தார்கள். அவர்களைப் பார்ப்பதற்கே அருவருப்பாயிருந்தது. அண்ணனைப் படகு வலிக்கச் சொல்லி ஈழத்துக்குச் சென்றார்கள். பணமும் நிறையக் கொடுத்தார்கள். அவர்களுடைய பணத்திலே இடி விழட்டும்! யாருக்குப்பணம்வேண்டும்! பணத்தை வைத்துக் கொண்டு இந்த நடுக்காட்டில் என்ன செய்வது? ஆனால் அண்ணனுக்கும் அண்ணிக்கும் பணம் என்றால் ஒரே ஆசை. எதற்கோ தெரியவில்லை! சேர்த்துச் சேர்த்துப் புதைத்து வருகிறார்கள்.

குதிரைக் காலடிச் சத்தம் இதோ அருகில் நெருங்கி வருகிறது. ஒரு குதிரை அல்ல. இரண்டு குதிரைகள் வருவது போல் தோன்றுகிறது. இதோ அவை தென்படுகின்றன. பள்ளத்திலிருந்து மெள்ள மெள்ள மேட்டில் ஏறி வருகின்றன. நெடுந்தூரம் பிரயாணம் செய்து களைத்துப் போன குதிரைகள். ஒவ்வொரு குதிரை மீதும் ஓர் ஆள் வருகிறான். முதலில் வருகிற குதிரை மேல் வருகிறவன் வாலிபப் பிராயத்தவன். பார்க்க இலட்சணமாயிருக்கிறான். வாட்டசாட்டமாகவுமிருக்கிறான். முகத்தில் கம்பீரம் இருக்கிறது. ஆனால் அவளுடைய இருதய அந்தரங்கத்தில் குடிகொண்டிருக்கும் அந்த இன்னொரு முகத்தின் அழகும் கம்பீரமும் எங்கே? இவனுடைய முகம் எங்கே? பார்க்கப் போனால், இவனு

டைய முகம் மரப் பொந்தில் இருக்கும் ஆந்தை முகம் மாதிரியல்லவா சப்பட்டையாயிருக்கிறது?

குதிரையின் மேல் வந்த இருவரில் முதலில் வந்தவன் நமது பழைய நண்பனாகிய வல்லவரையன் வந்தியத்தேவன்தான். பின்னால் வந்தவன் வைத்தியருடைய மகன். இருவரும் பழையாறையிலிருந்து இங்கே வந்து சேர்வதற்குள் இளைத்துக் களைத்துச் சோர்வுற்றுப் போயிருக்கிறார்கள். ஆயினும் வந்தியத்தேவனுடைய முகம், கோயில் மதில் மேல் காலை நீட்டிச் சாய்ந்து கொண்டிருந்த பூங்குழலியைக் கண்டதும் சிறிது மலர்ந்தது. அவள் தன்னுடைய முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்று தெரிந்ததும் அவனுக்கு இயற்கையான உற்சாகமே பிறந்து விட்டது. அவனும் குதிரையை நிறுத்தி விட்டு அவளுடைய முகத்தை ஆர்வத்துடன் உற்றுப் பார்க்கலானான். தன் முகத்தை மரப் பொந்திலுள்ள ஆந்தையின் முகத்தோடு அவள் ஒப்பிடுகிறாள் என்று மட்டும் அவன் அறிந்திருந்தால் அவ்வளவு உற்சாகப்பட்டிருக்க முடியாதுதான். ஒருவர் மனத்திலுள்ளதை இன்னொருவர் முழுதும் அறிய முடியாமலிருப்பது எவ்வளவு அநுகூலமாயிருக்கிறது?

குதிரை மேல் வந்தவன் தன்னை உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்பதைப் பூங்குழலி அறிந்தாள். கையில் தான் தேங்காய் மூடி வைத்துக் கொண்டு பல்லினால் சுரண்டித் தின்று கொண்டிருப்பதையும் நினைத்தாள். உடனே எங்கிருந்தோ ஒரு நாண உணர்ச்சி வந்து அவளைப் பற்றிக் கொண்டது. பிராகார மதில் சுவரிலிருந்து வெளியே வெண் மணலில் குதித்தாள். மதில் சுவர் ஓரமாக ஓடத் தொடங்கினாள்.

அதைப் பார்த்த உடனே வந்தியத்தேவனுக்கும் குதிரை மேலிருந்து குதிக்கத் தோன்றியது. குதித்துப் பூங்குழலியைப் பின்தொடர்ந்து பிடிப்பதற்கு ஓட வேண்டும் என்றும் தோன்றியது. அவ்வாறே அவளைத் துரத்திக் கொண்டு ஓடினான்.

இந்த அர்த்தமற்ற செயலின் காரண காரியங்களை யார் கண்டுபிடித்துச் சொல்ல முடியும்? ஆயிரம் பதினாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்த மனித குலத்தின் பரம்பரை இயற்கைதான் பூங்குழலியை ஓடச் செய்தது என்றும், அதுவே வந்தியத் தேவனைத் துரத்திப் பிடிக்கச் செய்தது என்றும் சொல்ல வேண்டியதுதான்.

(தொடரும்)



அந்தக் கட்டடத்தைக் குமாரசுவாமி ஒரு முறை அண்ணாந்து பார்த்தான். ஓர் அங்குல இடம் கூடப் பணமீட்ட இயலாததாகப் போய்விடக் கூடாது என்ற பிரக்ஞையோடு எழுப்பப் பட்ட பல புதுக் கட்டடங்கள் மத்தியில் இது மட்டும் எங்கெங்கோ தூண்களும் வெராண்டாக்களுமாகச் சுவரெல்லாம் காரை உதிர்ந்தும் பிளவுகளில் முளைத்துத் தொங்கும் செடிகொடிகளுமாக நின்றது. மரப் பலகைகளாலான மாடிப்படி ஒன்று ஒரு வெளிப்புறச் சுவரில் தொத்திக் கொண்டிருந்தது. அது கொண்டு சென்ற வெராண்டாவில் தகரத் தடுப்புகள் கொண்டு உருவாக்கிய மறைவிடத்தில் ஒரு பல் வைத்தியர் கிளினிக் வைத்திருந்தார். சென்ற ஆண்டு வரை ஒரு பல் பிடுங்குவதற்கு ரூபாய் பத்து வாங்கினார். இப்போது அது இருபது ரூபாயாகியிருக்கும்.

இருபது ரூபாய்க்கு அதிகமாகிவிடக் கூடாதேயென்று நினைத்த வண்ணம் குமாரசுவாமி அந்த மாடிப் படியில் ஏறினான். அநேகமாக ஒவ்வொரு படியும் பின்னப்பட்டிருந்தது. பல் ஆடி விழுந்து விடுவது போல இப்பலகைகளும் ஒவ்வொன்றாக விழுந்து விடும். அப்புறம் பல் வைத்தியம் செய்து கொள்ள வருபவர்கள் நூலேணி கொண்டு தான் ஏறிப் போக வேண்டும். படி தவறிக் கீழே விழுவது கூட வைத்தியத்தின் ஒரு பகுதியாகக் கூடும்.

அந்த வெராண்டாவின் முன்பாதியில் கிடந்த நாற்காலி ஒன்றில் ஒரு பெண்மணி மட்டும் காத்திருந்தாள். மறுபாதியில், திரைக்குப் பின்னால், டாக்டரிடம் யாரோ தன் உபாதை பற்றிக் கூறிக் கொண்டிருப்பது கேட்டது.

குமாரசுவாமியும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். பல் அப்போது பெரிதாக வலிக்கவில்லை. ஆனால் வலிக்



பல்லும் பந்தயமும்

கும். புத்தியையே மாற்றிவிடக் கூடிய மாதிரியான வலி. சித்திரவதைகளில் இப்படிப்பட்ட வலியைத்தான் உண்டு பண்ணுவார்களாக இருக்கும். இந்த வலியில் ரகசியங்கள் சொல்லி விடுபவர்கள் வருத்தப்படுவதில்லை. காரணம் அந்த வலி அவர்கள் தன்மையையே மாற்றி விடுகிறது. குமாரசுவாமிக்குக் கூடப் போன வருடம் வரை பந்தயம் ஓடி வாயில் நுரை கொப்பளித்துத் துடித்தபடியாக மூச்சுவிடும் குதிரைகள் கண்டு வயிறு பிசைந்து கொள்ளும். பல்வலி கண்டு, முதற் பல் பிடுங்கிப் போட்ட பிறகு குதிரைகள் தவிப்பு அவ்வளவு பாதிப்பதில்லை.

இப்போது ஒரு நாற்காலி தள்ளி உட்கார்ந்திருக்கும் அம்மாளும் வலியால் துடித்துக் கொண்டுதான் இருக்க வேண்டும். இருந்தாலும் அவளை முந்திக் கொண்டு உள்ளே போக வேண்டும் என்றுதான் அவனுக்குத் தோன்றியது. உள்ளேயிருந்த நபர் திரைக்கு வெளியே வந்தார். குமாரசுவாமி எழுந்து நின்றான். அவனுக்கு முன்னமேயே வந்து காத்திருந்த அம்மாளும் எழுந்து நின்றாள். குமாரசுவாமி அந்த அம்மாளைப் பார்த்தான். அந்த அம்மாளின் கண்கள் அவனுக்குப் பழக்கப்பட்டவை போல இருந்தன. டாக்டர் இருவரையுமே உள்ளே வரச் சொன்னார். முதலில் குமாரசுவாமி வாயைத்தான் பரிசோதித்தார். "உங்களுக்கு எல்லாப் பல்லுமே போயிடுத்து" என்று சொன்னார்.

அசோகமித்திரன்

''தயவு செய்து அதெல்லாம் ஒன்றும் செய்துவிட வேண்டாம். வலிக்கிற பல்லை மட்டும் பாருங்கோ'' என்று குமாரசுவாமி சொன்னான்.

''ஒரு பல்லைத் தட்டிவிட்டு, ''இதுவா?'' என்று டாக்டர் கேட்டார்.

''இல்லே, அதுக்குப் பக்கத்துப் பல்.''

''இதுவா?''

குமாரசுவாமிக்கு ஒருவர் பார்த்திருக்கையில் கையை வாயில் விட்டுப் பல்லைத் தொட்டுக் காட்டக் கூச்சமாயிருந்தது. ''இல்லே, இந்தப் பக்கத்திலே.''

வைத்தியர் இப்போது ஒரு பல்லைச் சற்று பலமாகவே ஆட்டினார்.

குமாரசுவாமி, ''ஐயோ!'' என்றான். வலி நொடியில் அவன் கண்களில் கண்ணீர் வர வழைத்துவிட்டது.

''அடுத்த வாரம் எடுத்துடலாமே. இப்பவே பிடுங்கிடணுமா?''

குமாரசுவாமி ஈரக் கண்ணோடு அவரைப் பார்த்தான்.

''ஒரு பத்து நிமிஷம் காத்திருங்கோ. இவங்களை அனுப்பிச்சுட்டு உங்க பல்லை எடுத்துடறேன்.''

குமாரசுவாமி வெளியே வந்து உட்கார்ந்தான். உள்ளே அந்த அம்மாள் வாய் கொப்பளிக்கும் சப்தம் கேட்டது. சில நிமிடங்களில் வாயைக் கெட்டியாக மூடிய வண்ணம் வெளியே வந்தாள்.

குமாரசுவாமியை நாற்காலியில் சாய வைத்து அந்த நாற்காலியையே வைத்தியர் சாய வைத்தார். அவனுடைய ஈறுக்கு இன்ஜெக்ஷன் கொடுத்தார். அவர் பல் பிடுங்கும் குறடைக் கையில் எடுத்தவுடனேயே குமாரசுவாமி கண்களை இறுக மூடிக் கொண்டான். ''அவ்வளவு கஷ்டப்பட்டுக் கொள்ள வேண்டியதில்லே. வலியே தெரியாது. எந்தப் பல்லைத் தொடறேன்னே தெரியாது'' என்று டாக்டர் சொன்னார். குமாரசுவாமிக்கு வெட்கமாக இருந்தது. கண்களைத் திறந்து கொண்டான்.

''இப்போ வெளியே போனாங்களே, அவங்க யாருன்னு தெரியுமா?'' என்று டாக்டர் கேட்டார்.

''அவங்களுக்கும் பல்வலின்னு மட்டும் தெரியும்.''

''ஒரு காலத்திலே அவங்க வீட்டிலே பணத்தை மரக்காலிலேதான் அளப்பாங்க. மலையாக் குவிஞ்சிருந்த பணம் வெட்டியா ஏதேதுக்கோ போச்சு. இன்னிக்கு அந்த அம்மா என்னை அஞ்சு ரூபா குறைச்சுக்கச் சொல்றாங்க.''

குமாரசுவாமி வாயைத் திறந்தபடி வைத்திருந்தான். வைத்தியர் குறடை அவனுடைய வாயினுள் நுழைத்து அதை வெளியே எடுக்கும்போது ஒரு பல்லையும் சேர்த்து எடுத்தார். குமாரசுவாமிக்கு அவர் நல்ல பல் எதையாவது எடுத்திருக்கப் போகிறாரே என்று கவலையாயிருந்தது.

குமாரசுவாமியும் பஞ்சைப் பற்கள் நடுவில் இடுக்கிக் கொண்டு வெளியே வந்தான். படியிறங்கி மின்சார இரயில் நிலையம் பிளாட்பாரம் அடைந்தான். கையை வீசி நடக்க முடியாதபடி மாலைக் கூட்டம் இரு திசை இரயில்களுக்கும் காத்திருந்தது. குமாரசுவாமி ஸ்டேஷன் மாஸ்டர் அறைப் பக்கம் போனான். பிளாட்பாரத்தில் அங்கு மட்டும் நெரிசல் சற்றுக் குறைவாகவே இருக்கும்.

ஸ்டேஷன் மாஸ்டர் ஒரு பழைய கணக்கு நோட்டுப் புத்தகத்தை மிகக் கவனமாகப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் முகமும் குமாரசுவாமிக்குப் பழக்கப்பட்டதுதான். அவர் இருபது வருடத்திற்கும் மேலாகக் குதிரைப் பந்தயத்துக்கு வந்து போய்க் கொண்டிருக்கிறார்.

ஐந்தாறு பெண்களாக உட்கார்ந்திருந்தவர்களில் ஓர் அம்மாள் குமாரசுவாமியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த மாதிரி இருந்தது. குமாரசுவாமி அவளை நேருக்கு நேர் பார்த்தான். சற்று முன்பு பல் வைத்தியரிடத்தில் பார்த்த பெண்மணிதான்.

ஆனால் அவனைவிட அவளுக்கு ஞாபக சக்தி அதிகமாயிருந்தது என்பது அவளுடைய பார்வையில் தெரிந்தது. குமாரசுவாமிக்கு அப்போதுதான் அவளை இதற்கும் முன்னால் எங்கேயோ பார்த்திருக்க வேண்டும் என்று உறுதிப்பட்டது. எங்கே? எப்போது!

குமாரசுவாமி வாயிலிருந்த பஞ்சைச் சக்கையாகக் கடித்துத் தண்டவாளத்தருகில் துப்பினான். அவன் திரும்பியபோது அந்த அம்மாள் எழுந்து நின்று அவளுடைய கன்னத்தை அழுத்திப் பிடித்தபடி இருந்தாள். குமாரசுவாமி இருவருடைய உபாதையும் ஒரேவிதமான காரணத்தினால் அவள் அருகில் சென்றான். ''இந்த டாக்டர் பல் பிடுங்கினா வலிக்காது என்கிறார். ஆனால் வலிக்கத்தான் செய்யறது'' என்றான்.

அந்த அம்மாள் இலேசாகப் புன்னகை புரிந்தாள்.

''உங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கு,'' என்று குமாரசாமி சொன்னான்.

''அப்படியா?''

''இந்த டாக்டர்கிட்டேயே இதுக்கு முன்னாலேயே வைத்தியம் செஞ்சிண்டிருக்கேள் போலிருக்கு.''

''அவர் எங்க பெரியம்மா பிள்ளை.''

''ஓகோ. அவர் பேசினதிலேர்ந்து நீங்க உறவுன்னு தெரியலே.''

''என்ன பேசினார்?''

''ஒண்ணுமில்லே.''

''என்ன சொன்னார்?''

''ஏதோ உங்களுக்குப் பெரிய நஷ்டம் வந்துடுத்துன்னார்.''

''ஓ. அதுவா?''

''ஆமாம்.''

''எங்களுக்குக் கஷ்டகாலம். நாங்க தொட்டதெல்லாம் துடைச்சுண்டு போச்சு.''

''அடப்பாவமே.''

''ஒரு சமயத்துலே உங்களாலே கூட எங்களுக்கு நஷ்டம் வந்தது.''

''என்னாலேயா?''

''ஆமாம். எங்களுக்கு வர வேண்டிய லாபம் நீங்க தலையிட்டதாலே வராமப் போயி



''வில்லனைக் கடிக்கிற கட்டெறும்பைக் குளோசப்பிலே காட்டாதீங்கன்னு. சொன்னேனே கேட்டீங்களா...?''

டைரக்டர்: ''ஏன்?''

''அதுக்கு. ரசிகர் மன்றம் ஆரம்பிச்சிருக்காங்களாம்...!''

— ஆர். வசந்தகுமார்.

டுத்து.''

''என்னுலியா?''

''ஆமாம்.''

''எப்படி? எனக்கு ஞாபகம் இல்லையே?''

அந்த அம்மாள் ஒரு நிமிடம் வானத்தை வெறித்துப் பார்த்தாள். எதிர்த்தரப்பு இரயில் வந்து ஸ்டேஷனில் சலசலப்பு அதிகரித்து ஓய்ந்தது.

''நீங்க கணேஷ் பானர்ஜி கிட்டேதானே இருக்கீங்க?''

குமாரசாமிக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவன் அந்தப் பெயருடைய குதிரைப் பந்தய 'புக்கி'யிடம்தான் உதவியாளனுக இருந்தான். அந்த அம்மாளைக் குதிரைப் பந்தயத்தோடு இணைத்து நினைக்க முடியவில்லை.

அந்த அம்மாள் ஒரு பெருமூச்சு விட்டாள். அப்போது அவர்களுடைய இரயில் வந்தது. அந்த அம்மாள் பெண்கள் பெட்டிப் பக்கம் ஓடினுள். போகும் போது குமாரசுவாமி பக்கம் திரும்பி 'நியூ ஹேவன்' என்று சொல்லிவிட்டுப் போனுள்.

நியூ ஹேவன். நியூ ஹேவன்! ஒரு மின்னல் போல அந்தக் காட்சி குமாரசாமிக்கு நினைவு வந்தது.

கணேஷ் பானர்ஜி மேஜையைக் குமாரசாமிதான் கவனித்து வந்தான். அந்த அம்மாள் அங்கு வந்தபோது களைப்புத் தெரிந்தது. குமாரசுவாமியைப் பார்த்து. அவள் கேட்டாள்: ''எனக்கு ஒரு ஒத்தாசை பண்ணுவேளா?''

அவன் அங்குமிங்கும் பார்த்தான். கழுத்திலிருந்த சங்கிலி, கையில் அணிந்திருந்த இரு ஜதை வளையல்கள் அனைத்தையும் ஒரு நொடியில் கழற்றினுள். மேஜை மீது வைத்தாள். குமாரசுவாமி குழப்பத்துடன் அவற்றைப் பார்த்தான். பல ஆண்டு காலம் அணியப்பட்டு அவை ஓர் அலாதி வழுவழுப்புப் பெற்றிருந்தன.

''எங்கிட்டே பணமாயிருந்ததெல்லாம் தீர்ந்துடுத்து. ஆனு. இதோ இந்த நகைகள் இருக்கு. எல்லாம் சேர்ந்து எட்டு. பத்து பவுன் வரும். இப்போதைக்கு அத்தனையும் 'நியூ ஹேவன்' மேலே கட்டிச் சீட்டுத் தாங்கோ.

குமாரசுவாமி நகைக் குவியலைப் பார்த்தான். எவ்வளவு சுகதுக்கங்கள், பண்டிகைகள், சமையலறைப் புகை, பாத்திரம் தேய்த்த சாம்பல், சோப்பு நீரில் கைதோய்த்த அரிப்பு; குழந்தைகள் தலை வாரி எண்ணெய்ப் பிசுக்கு பட்டது. சாணி தட்டியது. அடுப்பு மெழுகியது. கோலமிட்டது. சுக்குப் பற்று அரைத்தது. சுரம் வந்த கணவனின் தலையைக் கோதி விட்டது. குழந்தைகளை அறைந்தது...

'நியூ ஹேவன்! பந்தயத்திலேயே உதவாக்கரைக் குதிரை. முதலில் இதை 'அப்'பந்தயத்தில் சேர்த்துக் கொண்டது பெரிய விஷயம். இந்தக் குதிரை மீது இந்த அம்மாள் தன் வாழ்க்கை. தன் குடும்பம். தன் நம்பிக்கை. தன் உயிர் எல்லாவற்றையும் பணயம் வைக்கிருள்!

''அம்மா, நான் சொல்லறேன்னு தப்பா நினைச்சுக்காதேங்கோ. நான் இப்போ என் எஜமானனுக்குத் துரோகம் செய்யறதா இருக்கலாம். ஆனு எனக்கு மனசு தாங்கலே. இதெல்லாம் வருஷக் கணக்கிலே கஷ்டப்பட்டுச் சேத்துப் பண்ணின நகை. இங்கே ஓடறது நாலு கால் ஜீவனுங்க. இதுகளுக்கு எதுக்காக ஓடறோம், ஏன் ஓடறோம்னு தெரியாது. இதை இப்படித் தீனி போட்டு வளர்க்கிறுங்களே, ஒருநாள் கால் சுளுக்கிண்டுதுன்னு உடனே சுட்டுத் தள்ளிடுவாங்களேன்னு எல்லாம் தெரியாது. உங்களுது கஷ்டப்பட்டுச் சம்பாதிச்ச பணம். இந்த நகையெல்லாம் வெறும் பணம் மட்டும் இல்லே. இதுலே உங்க அப்பா, அம்மா, புருஷன், பிள்ளை, பாட்டி, சித்தப்பா, பெரியம்மான்னு எவ்வளவோ பேருடைய உறவும் ரத்தமும் சதையும் இருக்கு. இதையெல்லாம் போய் ஒரு குதிரை மேலே பணயம் வைக்காதீங்க. இந்தக் குதிரையின் பேர் கூட இந்தப் பக்கத்துலே கிடையாது. நியூ ஹேவன்னு என்னன்னு உங்களுக்குத் தெரியுமா? எனக்குத் தெரியாது. மகா உதவாக்கரைக் குதிரை. பொன்னுன பணத்தை இந்தக் கழுதை மேலே போடாதீங்க.''

அந்த அம்மாள் போய்விட்டாள். இன்று அவள் கழுத்தில் சங்கிலி, கையில் வளை ஏதும் இல்லை. அன்று குதிரைப் பந்தயத்தில் போய் விடாமல் பாதுகாக்கப்பட்டிருக்கலாம். ஆனுல் வேறு ஏதோ காரணங்களால் அவை பறிபோய் விட்டன. பல் வைத்தியரிடம் ஐந்து ரூபாய் குறைத்துக் கொள்ளச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம்...

அன்று அந்த அம்மாளுக்குப் புத்திமதி கூறி அவளுடைய நகைகளைக் காப்பாற்றியது குமாரசாமிக்கு மறந்து போனதற்குக் காரணம் அந்த நினைவு அவன் மனத்தை ஏகமாக உறுத்தக்கூடும் என்பதால் கூட இருக்கலாம். அன்று எல்லா நிபுணர்கள் மூஞ்சியிலும் கரி பூசிவிட்டு 'நியூ ஹேவன்' குதிரை முதலாவதாக வந்து ஒன்றுக்கு இருபதாகப் பணத்தை வாரிக் கொடுத்தது.


கதை: கா.சு.வேலாயுதம்
படம்: செல்லம்
ஸ்டெனோ விமலாவுக்குத் திருமணம்.
என்ன விமல்! நாளையிலேர்ந்து லீவா?
ஆமா, இந்தா இன்விட்டேஷன்!
எல்லாருக்கும் கொடுத்திட்டியா?
ஓ!
யோசிச்சுப் பாரு! பியூன் பரமசிவத்துக்கு இன்னும் தரலே போலிருக்கே?
அவனுக்கு எதுக்கு? காலே விந்தி விந்தி நடந்து, ஒரு கண் வேறா பிதுங்கின நிலையிலே, அந்தக் கரிக்கட்டை மூஞ்சி ரிஸப்ஷனுக்கு வந்தா, அசிங்கமா இருக்கும்! குழந்தைகள் பயந்து அலறும்!
விமல் - மாதவன் திருமணம் முடிந்து ரிஸப்ஷன் சமயத்தில்....
ஹௌ லவ்லி கப்பிள்!
இரண்டு பேருமே ஒருவரை ஒருவர் அடைய ரொம்பக் கொடுத்து வச்சிருக்காங்க!



அப்போது பரமசிவம் அங்கு வந்து....
கங்கிராட்ஸ், மிஸ்டர் அண்ட் மிஸஸ் மாதவன்!
இவன் எப்படி, எதுக்கு இங்கே வந்தான்....
மாதவன் பேசு விம்லாவுக்கு விளங்கியது....
விமல்! உனக்குப் பரமசிவத்தை உங்க ஆபீஸ் ப்யூன் என்ற முறையில் "தான் தெரியும். ஆனு, அவன் பள்ளிப் பருவத்தில் என் கிளாஸ்மேட்... டியரஸ்ட் ஃப்ரெண்ட்...
பரமசிவம் நகர்ந்து விட்டான்... ஆனால் மாதவன்....
...உண்மையைச் சொல்லணும்னு நம்ம ஜாதகம் பொருந்தியது தெரிந்ததும் உன்னைப் பற்றி பரமசிவத்திடம் நான் விசாரித்தேன்...
அப்படியா! என்ன சொன்னார்?
...நீ ஏற்றத்தாழ்வு பார்க்காம எல்லாரிடமும் சகஜமாய் பழகறவ... இனிய சுபாவம்... ஒரேயடியா புகழ்ந்து தள்ளிட்டான், போ!...
...விமல் உனக்கு இன்விடேஷன் தருவா; ஆனாலும் நான் பிள்ளை வீட்டாரின் அழைப்பிதழ் தரேன்; அவசியம் வா'ன்னு அவன் வீட்டுக்குப் போய் நேரில் நானே அழைச்சுட்டு வந்தேன்....
பரமசிவம்! உங்களால என்னை மன்னிக்க முடியுமா, மன்னிச்சுடுங்க!



மந்திரி பட்டா வழங்குகிறார்

"டீ வெண்டி தேர்ட் அன்னைக்கு மினிஸ்டர் விசிட் இருக்காம். ரெண்டாயிரம் வீட்டு மனைப் பட்டாக்கள் இஷ்யூ பண்ணணும்னு கலெக்டர் ஆர்டர் போட்டிருக்கார்னு ஆர்.டி.ஓ. நோட் அனுப்பியிருக்கார்..."

— எதிலும் எப்பொழுதும் கரூராக இருப்பேன் என்று தன்னைக் காட்டிக் கொள்வதால், டிபார்ட்மெண்டில் — அவரது பெயருடன் கரூர் என்று அடைமொழி கொடுத்துக் கரூர் கண்ணுசாமி என்று அழைக்கப்படும் அந்தத் தாசில்தார் — அன்றைய தபால் பார்த்துக் கொண்டிருந்தவர், இந்த ஆர்டரைக் கண்டவுடன், ஹெச். க்யூ. டி. டி. என்று அழைக்கப்படும் தலைமையிடத்துத் துணை. தாசில்தாரிடம் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்.

"ரெவின்யூ இன்ஸ்பெக்டர்... வி. ஏ. ஓஸ் எல்லாருக்கும் மீட்டிங்குக்கு வரச் சொல்லி மெமோ எழுதச் சொல்லுங்க... டபேதார் எங்கே... புடிங்க... புடிச்சு ராத்திரி... எந்நேரமானாலும் இன்னைக்குள்ள மெமோவை 'சர்வ்' பண்ணச் சொல்லுங்க..."

"சார், ரெண்டாயிரம் பேருக்குப் 'பட்டா' இஷ்யூ பண்ணச் சொல்றாங்க. இருந்த புறம்போக்கையெல்லாம் பட்டா பண்ணிக் குடுத்தாச்சு. பட்டா வேணும்னு எழுதிக்குடுத்துடலாம். ஆனால், நிலம் வேணுமே! ஓடைப் புறம்போக்குத்தான் இருக்கு. அதுக்குப் பட்டாக் குடுக்க முடியாது. போன தடவை மந்திரி வந்தப்ப, மூவாயிரம் பட்டாவுக்கு ஏற்பாடு பண்ணச் சொன்னார். அந்த விழாச் செலவுக்கே கண்ணு முழி திருகிடுச்சு. அதுக்குள்ள இது வேறயா? அரசியல்வாதிங்க வெறும் விளம்பரத்துக்காக அரசியல் பண்றாங்க... என்று துணை. த் தாசில்தார், தாசில்தார் கருத்துக்குத் துணை வராமல் கூற —

"மிஸ்டர் சீனிவாசன்... அதையெல்லாம் நாம் பேச முடியுமா? அதோ மலையில் மாடு ஒண்ணு போகுதுன்னு நமக்கு மேலேயிருக்கிறவங்க சொன்னால், ஆமாம்... ஆமாம்... கன்னுக்கு[illegible] சேர்ந்து போகுதுன்னு [illegible]

அவனுக்குப் பிடிக்கும். என்ன செய்வீங்களோ, ஏது செய்வீங்களோ எனக்குத் தெரியாது. இன்னைக்குத் தேதி பதினெட்டாச்சு. இன்னும் அஞ்சு நாள்தானிருக்கு. போய் ஆகவேண்டியதைப் பாருங்க. என் தாலுகாக்குள்ள எல்லாக் காரியமும் கரூரா நடக்கணும்..."

இனி அவர் பேச ஆரம்பித்தால் 'கரூர்' என்கிற வார்த்தையைத் தவிர வேறொன்றும் வராது என்று நினைத்த துணை. தாசில்தார் சீட்டில் வந்து அமர்ந்து, 'ஏ ஒன்' எழுத்தரிடம், மெமோ எழுதும்படி பணித்து — எல்லா மெமோக்களும் இன்றைக்குள் 'சர்வ்' செய்யப்பட வேண்டும் எனக் கூறிச் சுற்றும் முற்றும் பார்த்தார்.

பழனி... இந்தாப்பா... நார்த் 'பிர்க்கா' ஆர். ஐ. வந்த மாதிரி இருந்ததே... கூப்பிடுய்யா அந்த ஆளை" என்று பியூனிடம் அவர் சொன்னபோது —

"சார்... இங்குதானிருக்கேன்" என்றபடி ஆர். ஐ. என்ற அந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர் பின்னாலிருந்த அறையிலிருந்து வந்தார்.

"என்னய்யா புது மாப்பிள்ளை... மந்திரி வர்றாராம். ரெண்டாயிரம் வீட்டு மனைப் பட்டாக்கள் ரெடியா இருக்கணுமாம். கலெக்டர் ஆர்டர். தாசில்தார் கூப்பிட்டுச் சொல்றார். எங்கேயும் போயிடாதீங்க. மந்திரி வந்து போகிற வரைக்கும் எல்லாருக்கும் வேலையிருக்கு. உங்க கிராமத்து வி. ஏ. ஓஸ். எல்லோரையும் 'அடங்கல்' எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு வரச் சொல்லிடுங்க."

"சார்... போன தடவை மந்திரி வந்தப்ப விழுந்த துண்டையே என் கல்யாணத்துக்கு வந்த மொய்ப் பணத்திலிருந்து போட்டுச் சரி பண்ணினேன். இந்தத் தடவைக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வர்ற மொய்யிலிருந்துதான் கட்டணும். இல்லாட்டி ஒண்ணு செய்யுங்களேன் சார்..." என்று

பாரிஜாதன்

பண்வாகக்கூறி அவர் நிறுத்திய போது —

''நீங்க கல்யாணம் பண்ணுவீங்களோ... குழந்தை பெத்துக்குவீங்களோ எனக்குத் தெரியாது; எனக்கு 'பங்ஷன்' நடக்கணும். போய் ஆக வேண்டியதைப் பாருங்க...'' என்றார் துணை தாசில்தார்.

''என்னமோ போங்க சார்.... சத்துணவுக்கும் நாங்கதான்... சாவுக்கும் நாங்கதான்... வெள்ளம் வந்தாலும் நாங்கதான்... தீப்பிடிச்சாலும் நாங்கதான்... நாங்கதான் எல்லாத்துக்கும் வசூல் பண்ணிக் குடுக்கணும்... நல்ல டிபார்ட்மெண்ட் சார்...'' அவர் ரொம்பவும் சலித்துக் கொண்டார்.

குனிந்திருந்த துணை தாசில்தார் சிறிது கோபத்துடன் அவரை முறைத்தார்.

''உங்க வி. ஏ. ஓஸ் என்ன பண்றாங்க...? அவங்ககிட்டே. கலெக்ட் பண்ண வேண்டியதுதானே?''

'பழைய கிராம முன்சீப்புங்கன்னு நினைச்சிங்களா? எல்லாருமே படிச்ச பசங்க சார்... முணுக்குன்னா அவுங்க அஸோஸியேஷனுக்குப் போயிடறாங்க.''

''சரி... அதெல்லாம் இருக்கட்டும்... மந்திரிகிட்ட பட்டா வாங்கறதுக்குக் கிராமத்துக்கு அஞ்சு பேரை வரச் சொல்லுங்க. விவரமான ஆளா... சொல்லிக் குடுத்துக் கூட்டிவரச் சொல்லுங்க. போன தடவை மந்திரி விஜயத்திலே நடந்த மாதிரி... நடந்து ஊர் சிரிக்க வைச்சிடாதீங்க'' என்று கூறிய போது அவர் சிரித்தார். கூட இவரும் சிரித்தார் நடந்த நிகழ்ச்சியை எண்ணி.

நடந்து முடிந்த 'விசிட்' நினைவுக்கு வந்தது.

அமைச்சரின் 'பட்டா' வழங்கும் விழாவில் வயதான ஒரு கிராமத்து ஆள், தனது பெயரைக் கூறியவுடன், வந்து வாங்கி, ''சாமி... இதை எதுக்குக் குடுக்கறீங்க?'' என்று அமைச்சரைப் பார்த்துக் கேட்ட போது அமைச்சர் அப்பெரியவரை நெஞ்சோடு அணைத்துப் போட்டோவுக்கு 'போஸ்' கொடுத்தபடியே, ''இது... நீங்கள் தற்பொழுது குடியிருந்து வரும் இல்லத்திற்கான வீட்டு மனைப்பட்டா பெரியவரே...'' என்றார்.

''அதுக்குத்தான் போன வருஷம் குடுத்தீங்களே சாமி... அம்பது வருஷமா அதே இடத்திலதான் குடியிருக்கேன். அதுக்கு எத்தனை தடவை பட்டா குடுப்பீங்க சாமி? ஏதோ வேட்டி, துணிமணி குடுப்பீங்கன்னு சொல்லியில்ல தலையாரி கூட்டி வந்தாங்க'' என்று பெரியவர் சொன்ன போது, கூட்டம் 'கொல்'லென்று நகைத்தது.

பக்கத்திலிருந்த தாசில்தார் பதறித் துடித்து ''அய்யாகிட்ட அப்படியெல்லாம் பேசக்கூடாது'' என்று அவரை மேடையை விட்டு அவசரம் அவசரமாகக் கீழே இறக்கி விட்டார்.

அமைச்சர் கோபம் கொண்டு மைக்கைப் பொத்தியபடி, மேடையிலேயே கலெக்டருக்கு 'டோஸ்' விட்டார். 'கூட்டம் முடிந்த பின்பு — கலெக்டர் தமக்குக் கிடைத்ததை, ஆர். டி. ஓ. வுக்குக் கொடுக்க, அவர் அதை அப்படியே மொத்தமாகத் தாசில்தாருக்குத் திருப்பிக் கொடுக்க, தாசில்தார் தமக்குக் கீழிருந்த எல்லோருக்கும் சமமாகப் பகிர்ந்தளித்துத் திரும்பிய மறுநாளே, அவர் எலெக்‌ஷன் தாசில்தாராக — அதிகாரமற்ற பதவிக்கு மாற்றப்பட்டு, தற்பொழுது வாக்காளர் பட்டியலைச் சரி பார்த்துக் கொண்டிருப்பதாகக் கேள்வி.

இப்படியாக அந்தப் பட்டா வழங்கும் விழா இனிதே நடந்து முடிந்தது!

இந்தப் பழைய விழா நினைவிலிருந்த துணைத் தாசில்தாரும், ஆர். ஐ.யும், ''சார்... சாதிச் சான்றிதழ்'' என்ற இளைஞனின் குரல் கேட்டுத் திரும்பினர்.

''இருபத்து மூன்றும் தேதிக்குப் பிறகு வாப்பா'' — எரிச்சலுற்ற துணைத் தாசில்தார் அவனை ஏறிட்டுப் பார்க்காமலேயே பதில் கூறினர்.

''சார்... சர்வீஸ் கமிஷன் கொடுத்த கடைசித் தேதிக்கு இன்னும் நாலு நாட்கள்தான் இருக்கு... கொடுத்து ஒரு வாரமாச்சுங்க...

''அதெல்லாம் தெரியாது. நான் ரொம்ப பிஸி... போய்ட்டு வா...'' — எரிந்து விழுந்தார் துணைத் தாசில்தார்.

அவன் வேறு வழியின்றி வெளியேற, அவனுக்குப் பின்னாலேயே ''ஐயா, முதியோர் பென்ஷன் சம்பந்தமாக'' என்றபடி ஒரு பெரியவர் வர, ''இப்ப முடியாது. பெரியவரே... இருபத்து மூன்றும் தேதிக்குப் பிறகு வாங்க... நிக்காதீங்க... எனக்குத் தலைக்கு மேல் வேலையிருக்கு... போங்க.''

அவர் போக, அடுத்ததாக வீட்டு மனைப் பட்டா சம்பந்தமாக, சிரிமாவோ சாஸ்திரி ஒப்பந்த சிலோன் அகதி ஒருவர் வந்து நின்றார்.

''ம்... இந்த ஆளு வேறே வந்துட்டானா?'' என்று முனகியபடி, துணைத் தாசில்தார் முகம் சுளித்தார்.

''நான் மூன்று வருஷமாப் பட்டா கேட்டு அலையறேன், சார்... கிடைக்கலே. என் பேப்பர் என்னாச்சு? கொஞ்சம் பாருங்களேன் சார்...''

துணைத் தாசில்தாருக்குக் கோபம் வந்தது. ''யோவ், நான் இந்தச் சீட்டுக்கு வந்து ஏழு மாசம்தான் ஆகுது. அதனால் உன் அலைச்சல் மூன்று வருஷத்தில், ரெண்டு வருஷம், அஞ்சு மாசத்துக்கு நான் பொறுப்பில்லே!''

''நீங்கள் 'பட்டா' கொடுத்தால்தான் சார் வீடு கட்டச் சிலோன் அகதிங்கற முறையில் லோன் போட முடியும்.''

''ஏன்யா.... ஓடைப் புறம்போக்குல வீட்டைக் கட்டிட்டு எங்க உயிரே வாங்கறே? ஓடைப் புறம்போக்குக்கு மனைப் பட்டாக் குடுக்க முடியாது. நத்தம் புறம்போக்குக்குத்தான் பட்டா கொடுக்க முடியும். உன் இடம் மேட்ல இருக்கிறதா ஆர். ஐ.யும் வி.ஏ.ஓ.வும் ரிப்போர்ட் [illegible] இருக்கிறதல்லை அதை

நத்தம் புறம்போக்குன்னு மாத்தணுமின்னு, கலெக்டருக்குத்தான் அதிகாரமிருக்கு."

"சார்....எந்த இடமாயிருந்தாலும் உடனே 'பட்டா' கொடுக்கச் சொல்லி — மந்திரி பேசியிருக்கார் சார். வர்ற இருபத்தி மூன்றும் தேதி, அவரே குடுக்கார்ன்னு பேப்பர்ல பார்த்தேன். அதனால்தான் வந்தேன்."

"அப்ப மந்திரிகிட்டப் போய்க் கேளு. எனக்கு ரூல்ஸ் இப்படித்தானிருக்கு. உங்கிட்ட இவ்வளவு பேசறதே அதிகம். எனக்கு வேலையிருக்கு. போயிட்டு வா" — துணைத் தாசில்தார் விரட்டினார்.

பிறகு, "பழனி... எங்கப்பா போய்த் தொலைஞ்ச? வந்துட்டியா...? இங்கே பாரு...... யாரு வந்தாலும் உள்ளே விடாதே. எல்லாரையும் மந்திரி விஜயத்துக்கப்புறம் வரச் சொல்லு. போய்யா... போய் வாசல்ல நில்லு."

"சரி சார்...." எனத் தலையாட்டியவன், பின் அவருடைய காதருகில் குனிந்து, "சார்... சிமெண்ட் பெர்மிட்,மைன்ஸ் காண்ட்ராக்ட்... இதையெல்லாம் கூடவா....?" என்றான்.

"யாரப்பா நீ....?" என்று பதறியவராய்... "மினிஸ்டர் விசிட்டுக்கு நிறையச் செலவிருக்கு, அந்த மாதிரி பார்ட்டி வந்தால் உள்ள அனுப்புய்யா..."

நிச்சயிக்கப்பட்ட அந்த நல்ல நாளில் மனைப்பட்டா வழங்கி, வெயிலிலிருந்தும் மழையிலிருந்தும் மக்களைக் காத்திட அமைச்சரும், அவரது குடும்பத்தாரும் பரிவாரங்களுடன் 'சர்க்கியூட் ஹவுஸ்' என்கிற அரசினர் சுற்றுலா மாளிகையின் ஏ.சி. அறையில் வந்து இறங்கினர்.

வெளியே — தலைமையிடத்துத் தாசில்தார், தலைமையிடத்துத்துணை தாசில்தார், ரிசப்ஷன் தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் மற்றும் பலரும் நின்றிருந்தார்கள்.

அமைச்சரைப் பார்த்துவிட்டுக் கலெக்டர் வெளியே வர, நின்றிருந்த அனைவரும் டிபார்ட்மெண்டுக்கே உரிய மரியாதையோடும், அசட்டுத்தனமான சிரிப்போடும் அவரை வணங்கினார்கள்.

கட்சிக்காரர்கள், இவர்களையெல்லாம் அலட்சியப்படுத்தியபடி அமைச்சரைப் பார்க்கச் சென்று கொண்டிருந்தார்கள்.

அமைச்சர் தங்கியிருந்த அறையை விட்டு வெளியே வந்த அமைச்சரின் பி.ஏ., "யாருய்யா ரிசப்ஷன் தாசில்தார்?" என்று அமைச்சரைவிடக் கூடுதல் அதிகாரத்தில் கேட்டார்.

ரிசப்ஷன் தாசில்தார், "நான்தான் சார்..." என்றபடி பணிவாக முன்னால் வந்து நின்றார்.

"என்ன மிஸ்டர், ஏற்பாடு பண்ணியிருக்கீங்க....? மந்திரி சாப்பிடறதுக்குச் செய்தீங்களா.... இல்லே, நீங்க சாப்பிட ஏற்பாடு செய்தீங்களா? டிபனெல்லாம் சரியில்லேன்னு மந்திரி சத்தம் போடறார்.... தெரியுமா?"



''பட்டா பங்ஷன் விஷயமா அவசரமா வெளியிலே போயிட்டேன். அதனால்.....''

''என்னய்யா அதனால்....? முதல்ல மந்திரிக்கு வேண்டியதை ஒழுங்கா ஏற்பாடு பண்ணுங்க... போங்க....

''கலெக்டருக்கு ரிப்போர்ட் போகாமல் ஐயா, எதுவாயிருந்தாலும் மன்னிக்கணும்...'' — மார்புக்குக் குறுக்காகக் கைகளைக் கட்டி மண்டியிடாத குறையாய் பி.ஏ. முன் பிரார்த்தனை செய்தார் அவர்.

அவருக்குத் துணையாக எல்லோரும் கைகளைக் கட்ட, ''சரி.... சரி, நான் பார்த்துக்கிறேன்.... மத்தியானச் சாப்பாட்டையாவது நல்லபடி ஏற்பாடு பண்ணுங்க....'' என்று விரட்டியபடியே ரிசப்ஷன் தாசில்தாரையும், தாசில்தாரையும் அருகில் அழைத்தார் அமைச்சரின் பி.ஏ.

''அப்புறம்.... மந்திரிக்கு ஜோஸியம் பார்க்கணுமாம்... இங்க யாரோ ஒருவர் இருக்கிறாராமே.... நல்ல ஜோஸியரா அவர்?''

'இங்கு நான்கு ஜோஸியர்கள் இருக்கிறார்கள். யாரை இவர் குறிப்பிடுகிறார் என்று இவர்கள் குழம்பியும், எந்த ஜோஸியரை அழைத்து வருவது என்று வெளியே கேட்கப் பயந்தும், நான்கு ஜோஸியர்களையும் அழைத்து வந்துவிடலாம் என்று மனத்துக்குள் தீர்மானித்தார்கள்.

''சரி சார்.... ஏற்பாடு பண்ணிடலாம்'' என்று இருவரும் நகர்ந்தபோது,

''என்னய்யா.... பொறுப்பில்லாம அதுக்குள்ள ஓடுறீங்க? அப்புறம், மந்திரிக்கு உடம்பெல்லாம் உஷ்ணமாயிருக்காம். நுங்கு வேணுமாம். நுங்குன்னு.... நுங்குக்குள்ள தண்ணீர் இருக்கும் பாருங்க அது.... ஒரு லிட்டர் போல வேணும்னு மந்திரியோட மனைவி கேட்கிறாங்க.... கொண்டு வர்றீங்களா?''

'நுங்குத்தண்ணீரா? அதுவும் ஒரு லிட்டர் — அந்த அளவுக்கு எத்தனை நுங்கு வெட்டுவது? எத்தனை மரம் ஏறி இறங்குவது' என்று மலைத்து, மலைப்பை வெளிக்காட்டப் பயந்து,

''சரி செய்திடலாம் சார்'' என்று நகரும் பொழுது, அவர் — சிரிமாவோ சாஸ்திரி ஒப்பந்த சிலோன் அகதி — கையில் விண்ணப்பத்துடன் எப்படியோ கட்டுக் காவலை மீறி, பி.ஏ. முன்னால் வந்து, மனைப் பட்டா விஷயமாக அமைச்சரைப் பார்க்க வேண்டுமென்று மன்றாடினார்.

பி.ஏ. அவருடைய மனுவை வாங்கி வைத்துக் கொண்டு, தோளில் கை போட்டு அணைத்தவண்ணம், 'அன்றைக்கே — அதே விழாவில் வழங்க ஏற்பாடு செய்வதாகக் கூறி, அமைச்சரைப் பார்க்க முடியாது என்பதையும் எடுத்துச் சொல்லி, அவரை அனுப்பி வைத்துவிட்டு, வாங்கிய அந்த மனுவைத் தாசில்தாரிடம் கொடுத்துவிட்டு உள்ளே சென்றுவிட்டார்.

தாசில்தார் அம்மனுவைத் துணைத் தாசில்தாரிடம் கொடுத்து, வைத்திருக்கும்படி கூறினார்.

ரிசப்ஷன் தாசில்தாரும், தலைமையிடத்துத் தாசில்தாரும், ஜோஸியரைத் தேடிப் போனார்கள்.

துணைத் தாசில்தாரும், வடக்கு பிர்க்கா ரெவின்யூ இன்ஸ்பெக்டரும் நுங்கு வெட்டப் போனார்கள்.

அடுத்து இரண்டு மணி நேரத்திற்கு எங்கெல்லாமோ அலைந்து, எத்தனையோ மரங்கள் ஏறி இறங்கி நுங்குக் காய்கள் வெட்டப்பட்டுக் கிடைத்த அரை லிட்டர் நுங்கு தண்ணீரில், இளநீரும் பதநீரும் ஒரு விகிதாசாரத்தில் கலந்து அதை ஒரு லிட்டராக்கி — சர்க்கரைப் பாகில் தேனடையை மிதக்கவிட்டுச் சுத்தமான கலப்பிடமில்லாத கொம்புத்தேன் என்று கூறும் தேன் வியாபாரியைப் போல் இரண்டு பிளாஸ்க்குகளுடன் — அவர்கள் இருவரும் ஜீப்பிலிருந்து இறங்கி வர, அவர்களுக்கு முந்தியே ஜோஸியர்கள் வந்து காத்திருக்க —

சென்னையிலிருந்து வந்த அவசரத் தொலைபேசி அழைப்பின்படி, அமைச்சர் இப்பொழுதே சென்னை புறப்படுகிறார் என்ற தகவல் துணைத் தாசில்தாரைத் தாக்கியது.

அமைச்சர் — ஏ.சி. அறைக் குளிரிலும் வியர்த்தவராய் வெளியே வரத் துணைவியார் கண் கலங்கியபடி பின்னால் வர, எல்லோரும் காரில் ஏறினார்கள்.

கலெக்டர் ஒருவித நமுட்டுச் சிரிப்புடன் வணங்கி விடை கொடுக்க, அமைச்சர் விடை பெற்றார். கலெக்டரும் காரில் ஏறிப் பின்னால் சென்றார்.


அங்கிருந்தவர்களுக்கு என்ன அவசரச் செய்தி என்று புரியாமல் தவித்துக் கடைசியில் டெலிபோன் ஆபரேட்டரிடம் கேட்கலாம் என்ற முடிவுடன் அங்கே சென்றார்கள்.

''அமைச்சர் பதவி விலக்கப்பட்டிருக்கிறார்' என்று செய்தி வந்ததாகச் சொன்னார் டெலிபோன் ஆபரேட்டர்.

உடனே, ''சார்... மனைப்பட்டாவையெல்லாம் என்ன செய்யறது?'' — துணைத் தாசில்தார் கேட்டார்.

''எடுத்துப் பத்திரமா வைக்கச் சொல்லுங்க.... அடுத்த மந்திரி விஜயத்துக்கு உதவும்'' என்று தாசில்தார் பதிலுரைத்தபடியே ஜீப்பில் ஏறினார்.

'நார்த் பிர்க்கா' ரெவின்யூ இன்ஸ்பெக்டர் தனது புது மனைவியை நினைத்து, வீட்டிற்குச் செல்ல, துணைத்தாசில்தார் முகத்தைப் பார்க்க, துணைத் தாசில்தார், கைக்குட்டையை நுங்கு வெட்டப் போன இடத்தில் தொலைத்துவிட்டுக் கையிலிருக்கும் நுங்குப் பிசுபிசுப்பை எதைக் கொண்டு துடைக்கலாம் என்று சுற்றுமுற்றும் பார்த்தவர், ஒன்றும் கிடைக்காமல் ஜீப்புக்குச் சென்று, அமைச்சருக்குப் பொது மக்களிடமிருந்து வந்திருந்த மனுக்களில் ஒன்றை உருவிக் கையை அழுந்தத் துடைத்தார்!



கம்ப்யூட்டர் முகத்தில் கரியைப் பூசியவர்! ஒன்பதாவது வெற்றிக்கு அழைப்புக் கொடுத்தவர்!

மார்டினா நவ்ரடிலோவா

மார்டினாவுடன் யார் மோதினாலும் ரசிகர்களுக்கு ஏற்படும் சஸ்பென்ஸ் யார் வெற்றி பெறுவார் என்பது இல்லை; மார்டினா எவ்வளவு நேரத்தில், எவ்வளவு வித்தியாசத்தில் வெற்றி பெறப் போகிறார் என்பது தான். கிரிக்கெட்டிற்கு ஒரு காவஸ்கர் போல், டென்னிசுக்கு மார்டினா. ரெக்கார்டுகளை ஏற்படுத்தும் ஒரு ரோபோவாகக் கருதப்படுகிறார். சொந்தநாடு செக்கோஸ்லோவாகியா. 1975 இல் அமெரிக்கப் பிரஜையானார். இவரது வெற்றிகளின் ரகசியம் ஒரு சத்துணவு நிபுணர் இவருக்கென்று பிரத்தியேகமாய்த் தயாரித்து அளித்துள்ள உணவு முறை தான். மாமிசம் தொடுவதில்லை; பழங்களும், பருப்பு வகைகளும் அதிகம் சாப்பிடுவார்; கொழுப்புச் சத்து கிட்டே வரக் கூடாது. மார்டினா நிறையக் கனவுகள் காண்பார். சின்ன வயதிலேயே இவர் கண்ட கனவுகளில் ஒன்று விம்பிள்டன் பரிசுடன் நிற்பது போல். இப்போது எட்டாவது முறையாக அந்தக் கனவை நனவாக்கியிருக்கிறார்.

எதியோப்பிய வறுமைக்காக உலக நாடுகள் திரட்டிய நிதிக்கு அதிகபட்ச நன்கொடை தந்தவர் மார்டினாதான். 1986 ஆம் வருடத்தில் மட்டும் இவர் சம்பாதித்தது பத்தொன்பது லட்சம் டாலர்கள்!

இம்முறை இறுதி ஆட்டத்தில் மார்டினா ஜெயித்ததும், அவரிடம் தோற்ற ஸ்டெஃபி கிராஃப் கேட்டார்: "இன்னும் எத்தனை விம்பிள்டனில் ஜெயிக்க வேண்டும் உங்களுக்கு?" என்று. அதற்குச் சிரித்தபடியே மார்டினாவின் பதில்: "என் அதிர்ஷ்ட நெம்பர் ஒன்பது!"



பேட் கேஷ்

விம்பிள்டன் சரித்திரத்திலேயே இம்மாதிரி நடந்ததில்லை என்று பெயர் வாங்கும் விதத்தில் இவ்வாண்டு வெற்றி பெற்ற பேட் கேஷ் நடந்து கொண்டார். சம்பிரதாயச் சடங்குகளையெல்லாம் புறக்கணித்து விட்டு, வெற்றி பெற்றதும் நேரே பார்வையாளர் கேலரிக்கு ஓடினார். நாற்காலிகள் மீதும் கூரைகள் மீதும் பலர் தலைகள் மீதும் கூடக் கால் வைத்து ஏறி, தமது பெற்றோர், காதலி, டென்னிஸ் குரு ஆகியோர் அமர்ந்திருந்த பகுதியை அடைந்தார். எல்லாரையும் கட்டிப் பிடித்து ஆனந்தத்தைப் பகிர்ந்து கொண்ட பிறகுதான் பரிசைப் பெறத் திரும்பினார். இந்தச் சம்பிரதாய மீறலை அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கூடத் திறந்த வாய் மூடாமல் திகைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்!

பேட் கேஷுக்கு 1985 இல் ஒரு முதுகுவலி ஏற்பட்டது. அதன் விளைவு, கம்ப்யூட்டர்களால் அவர் உலகின் ஏழாவது இடத்திலிருந்து 413 வது இடத்துக்குத் தள்ளப்பட்டார்! ஆனால் கேஷ் விடாமுயற்சியுடன் பாடுபட்டுப் பயிற்சி செய்து கம்ப்யூட்டர்கள், விமர்சகர்கள் முகத்தில் கரியைப் பூசி விட்டு வெற்றிக் கோப்பையைத் தட்டிக் கொண்டு போய் விட்டார்!

பன்னிரண்டு ஆண்டுகளாக ஆஸ்திரேலிய டென்னிஸ் ஆட்டக்காரர்களை ஏமாற்றி வந்தது விம்பிள்டன் கோப்பை. இந்த ஆண்டுதான் ஒரு மாமாங்கத்துக்குப் பிறகு, கோப்பை மீண்டும் ஓர் ஆஸ்திரேலியரை வந்து அடைந்திருக்கிறது.

தொகுப்பு: **மௌஷ்மி**

பணத்துக்குப் பணம்: பழிக்குப் பழி!

ஜெஃப்ரி ஆர்ச்சர்

அத்தியாயம் 3

டேவிட் என்ற அம்பை எய்து தங்களை ஹார்வி எவ்வாறு வீழ்த்தினான் என்பது மட்டுமின்றி, ஹார்வியின் வாழ்க்கைக் குறிப்புக்கள், அவனது சமுதாய, குடும்பப் பின்னணிகள், அவனுடைய பழக்க வழக்கங்கள், விருப்பு வெறுப்புக்கள் முதலிய பலவும் அந்த நீல நிறக் கோப்புக்களில் விவரமாக இடம் பெற்றிருந்தன.

அவற்றைக் கரைத்துக் குடித்த நால்வரும் மீண்டும் குறிப்பிட்ட தேதி — நேரத்தில் நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் சந்தித்தபோது ஹார்விவைப் பழிக்குப் பழி வாங்கும்விதமாக அவனை ஏமாற்றி எப்படிப் பணம் பிடுங்குவது என்பதற்கு ஆளுக்கு ஒரு யோசனையுடன் வந்திருந்தார்கள் — ஜேம்ஸ் ஒருவனைத் தவிர! அவன் மனத்தைத்தான் ஆன்னி முழுமையாக ஆக்கிரமித்துக்கொண்டிருந்தாளே! அவன் யோசிப்பது எங்கே?

அவனைத் தவிர, மற்ற மூவரும் தங்கள் திட்டங்களை விவரிக்க, சிற்சில மாறுதல்களுடன் அவை ஏற்கப்பட்டன. கடைசியாக மற்ற மூவரும் ஜேம்ஸைப் பார்க்க, அவன் உதட்டைப் பிதுக்கித் தோள்களைக் குலுக்கினான்.

"இந்தப் பழி வாங்கும் படலத்தில் உனக்கு நம்பிக்கை இல்லை என்றால் நீ ஆரம்பத்திலேயே விலகிக் கொண்டிருக்கலாமே?" என்று பியர்ரி சற்றுக் கோபமாகக் கேட்டான்.

"இதோ பார், உங்கள் அனைவரையும்விட எனக்குத்தான் நஷ்டம் அதிகம். நீங்கள் மூவரும் உங்கள் சேமிப்பை அல்லது பிதிர்ராஜித சொத்தை மட்டும் இழந்தீர்கள். ஆனால் நான் கோட்டை விட்ட பணம், கடன் வாங்கிய பணம். பிரபு என்று பட்டம்தான் பிரமாதப்படுகிறதே தவிர இன்று லண்டனில் என்னைவிட ஏழை யாரும் கிடையாது!"

"புரிகிறது" என்றான் ஸ்டீஃபன். "உன் கவலை உன்னைச் சிந்திக்க விடாமல் செய்கிறது. கவலையை ஒதுக்கு; தியானத்தில் இறங்கு; பிறகு சிந்தனை செய். நாம் அடுத்த கூட்டம் நடத்தும்போது, அவசியம் சிறந்த ஒரு யோசனையுடன் நீ வர வேண்டும். அதற்கிடையில் மற்ற மூன்று திட்டங்களும் நிறைவேற்றப்படும். முதலில் அமுலாவது பியர்ரியின் யோசனை!

அதற்கு நாள் குறிக்கப்பட்டது.

ஸ்டீஃபனை மறுத்துப் பேசவில்லை ஜேம்ஸ். ஸ்டீஃபன் எண்ணியது போலத்தான் ஏழையாகப் போய்விட்ட கவலையால் உருகவில்லை என்றும், 'ஆன்னியைக் கவர்வது எப்படி' என்று திட்டமிட்டுக் கொண்டிருந்ததால்தான் ஹார்வியைப் பழி வாங்குவது பற்றித் தன்னால் சிந்திக்கவே முடியவில்லை என்றும் எதற்காக அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்? அவளை மீண்டும் சந்திக்க ஓர் அருமையான உபாயம் செய்தான் ஜேம்ஸ்.

தனக்குத் தெரிந்த ஒரு மாடலிங் ஏஜென்ஸியை அழைத்தான். தான் புதிதாக ஒரு கடை திறக்கப் போவதாகவும் அதற்கு ஏக பப்ளிசிடிக்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும் திறப்பு விழாவின்போது ரிப்பன் கத்திரிக்க ஓர் அழகிய மாடல் தேவை என்றும் சொன்னான். ரயிலில் தான் பார்த்த ஃபேஷன் பத்திரிகையைக் குறிப்பிட்டு, 'அந்த அட்டைப் பட மாடலையே அனுப்பி வைக்க முடியுமா?' என்றும் கேட்டான்.

"நீங்கள் குறிப்பிடும் தினத்தில் ஆன்னிக்கு வேறு அலுவல் இல்லாமலிருந்தால் நிச்சயம் அனுப்புகிறோம்" என்று பதிலளித்த ஏஜென்ஸி, கட்டணத்தைக் குறிப்பிட்டு அதற்குச் சம்மதத்தையும் பெற்றுக் கொண்டது. ஜேம்ஸ் தனது புதிய கடையின் விலாசம் தந்தான்.

அன்று, அங்கே ஒதுக்குப்புறமாகக் காத்திருந்தான். குறித்த நேரத்தில் 'டாண்' ணென்று அவள் வந்து சேர்ந்தாள். இங்குமங்கும் தலையைத் திருப்பிப் பார்த்து எதையோ தேடினாள். நடை பாதையோடு சென்ற அவன், எதிர்பாராதவிதமாக அவளைச் சந்திப்பது போல் பாவனை செய்து, "அட நீயா? எங்கே இப்படி......?" என்று வினவினான்.

"இங்கே ஏதோ ஒரு புதிய கடை திறப்பதாகச் சொன்னார்கள்....

"அப்படியா?" ஜேம்ஸும் சுற்றுமுற்றும் பார்த்தான். "ஒன்றையும் காணோமே?

யாருடைய கடை?''

''உனக்கு ஜேம்ஸ் பிரபுவைத் தெரியுமா?''

''தெரியுமே, நான்தான் அவன்!''

அவள் முகத்தில் தோன்றிய புதிர் பாவம், சீக்கிரமே தெளிவு பிறந்ததன் காரணமாகப் புன்னகையாக மலர்ந்து, சிரிப்பாக வெடித்துச் சிதறியது.

''பொல்லாத போக்கிரி!'' என்றாள்.

இருவரும் சிரிப்பு மாறாமலேயே ஓர் உணவு விடுதியை அடைந்தார்கள்.

இம்முறை அவளை வாசலில் விட்டு விட்டுச் செல்லவில்லை ஜேம்ஸ். அவள் ஃப்ளாட்டுக்குள் நுழைந்தான். சோபாவில் அவன் அருகில் அவள் ஒண்டிக் கொண்டாள். இருவர் கரங்களிலும் பானங்கள் கண்ணாடிக் கோப்பைகளில் இருந்தன. ஆனால் அதைப் பருகாமல் ஜேம்ஸ் ஏதோ சிந்தனையாக இருப்பது அவளுக்குப் புரிந்தது.

''என்ன?'' என்று விசாரித்தாள்.

ஜேம்ஸ் கூறினான்: தானும் தன்னைப் போலவே வேறு பலரும் ஏமாற்றப்பட்டது; அவர்களுள் நால்வர் மட்டும் ஒரு குழுவாக அமைந்து, தங்களை ஏமாற்றிய ஹார்வியைப் பழி வாங்கத் தீர்மானித்து, ஆளுக்கொரு உபாயத்துடன் வருவதாக ஒப்புக் கொண்டது; ஆனால் தனக்கு மட்டும் இன்னும் ஒரு யோசனைகூட உதயமாகாமலிருப்பது.....


அவள் தலையை உயர்த்தித் தன் அதரங்களை அவன் கன்னத்தில் உரசினாள். ''கவலைப் படாதே! உனக்காக நானும் யோசிக்கிறேன்.''

நன்றிப் பெருக்கில் அவன் கரம் அவளைச் சுற்றி இறுகியது.

ஒவ்வொரு வருஷமும் விம்பிள்டன் நடக்கும் சமயத்தில் அமெரிக்காவிலிருந்து லண்டனுக்கு விடுமுறையில் வருவது ஹார்வியின் வழக்கம். அப்போது சில ஓவியக் கூடங்களுக்கும் அவன் விஜயம் செய்வான். ஓவியங்களில் இருந்த ஈடுபாடு தவிர, ஹார்விக்கு லண்டன் அஸ்காட்டிலும் நாட்டம் உண்டு. அவனுடைய சொந்தக் குதிரை ஒரு தடவையாவது அஸ்காட்டில் முதலாவதாக வர வேண்டும் என்ற தணியாத தாகமும் இருந்தது.

இதையெல்லாம் நன்கு அறிந்திருந்த நான்கு நண்பர்களும் நாலுவித மாறு வேடங்களைப் புனைந்து கொண்டு, ஹார்வி லண்டனுக்கு வந்ததும் அவன் வழக்கமாகத் தங்கும் ஹோட்டலை முற்றுகையிட்டனர்.

அன்று காலை ஹார்வி ஹோட்டலிலிருந்து புறப்பட்டுக் கால் நடையாகச் செல்ல ஆரம்பித்ததும் அவன் ஏதேனும் ஓர் ஓவியக் கூடத்துக்குத்தான் போவான் என்று தீர்மானித்து ஒருவருக்கொருவர் வாக்கி டாக்கி ரேடியோ மூலம் தொடர்பு கொண்டனர். ''கிளம்பி விட்டான்! அவன் நடக்கும் திசையைப் பார்த்





''இனிமே ஆபீசுக்குப் போய்ச் சம்பா திக்க முடியாது. அதனால துண்டு விழற தொகையை நீங்களே சமாளிச்சுக்குங் கன்னு சொல்லிட்டா என் மனைவி.''

''அடப்பாவமே, ஏன் அப்படி?''

''விகவோட ஐடியாஸும் என்னோட ஐடியாஸும் ஒரேமாதிரி இருக்குன்னு தெரியாத்தனமாச் சொல்லித் தொலைச் சுட்டேன். அதனோட விளைவு.''

— ஜோதிர்லதாகிரிஜா

தால் ஸாத்திபைக்குப் போகலாம் என்று அனுமானிக்க முடிகிறது'' என்று ஸ்மைலீபன் கூற, ஸாத்திபை அருகே நின்ற ராபின் உஷா ரானான்.

லண்டனில் பியர்ரி ஓர் ஓவியக் கூடம் நடத்தி வந்தான். பழங்கால ஓவியர்கள் முதல் மாடர்ன் ஆர்ட் வரை அங்கே காட்சியில் வைக்கப்பட்டிருக்கும். விற்பனையும் உண்டு. லமான்ஸ் என்று பெயர் கொண்ட இந்தக் கூடத்துக்கு இரண்டு வீதிகள் தள்ளி ஸாத்திபை என்ற ஓர் ஏல விற்பனைக் கூடம் இருந்தது. அங்கே அன்று ஏலத்துக்கு வந்திருந்த ஓவியங்களை ஹார்வி எடை போட்டுக்கொண்டிருந்தபோது, ராபின் ஒரு பத்திரிகை நிருபன் போல நடித்து, அங்கு வந்திருந்த ஓர் ஓவிய நிபுணரிடம் பேச்சுக் கொடுத்தான். அந்த உரையாடல் ஹார்வி காதில் விழுகிற மாதிரியும் கவனித்துக் கொண்டான்!

''லமான்ஸ் ஓவியக் கூடத்தில் ஒரு வேன்காக் வந்திருக்கிறதாமே?''

''அப்படியா! ஓவியர் வேன்காகின் படைப்புக்கள் ஒவ்வொன்றும் விலை மதிக்க முடியாத பொக்கிஷங்கள் ஆயிற்றே! அந்தப் பழங்கால ஓவியரின் படைப்பு விலைக்கு வருவதே அபூர்வமாச்சே! யாருக்கு என்ன பெரிய கஷ்ட நஷ்டம் நேர்ந்ததோ, வேன்காக்கை விற்பனைக்குக் கொண்டு வந்துவிட்டார்கள்!''

''விற்பவனின் துரதிர்ஷ்டம் கிடக்கட்டும்; வாங்கப் போகிறவனின் அதிர்ஷ்டத்தை எண்ணிப் பாருங்களேன்!''

''அது மோசடியாக இல்லாமலிருந்தால் நிச்சயம் வாங்குகிறவனுக்கு அதிர்ஷ்டம் தான்!''

இதைக் கேட்டுக் கொண்டிருந்த ஹார்விக்கு ஆசை விழுந்துவிட்டது. சமீபத்தில்தான் தான் அடித்திருந்த கொள்ளை லாபம் காரணமாகக் குஷியடைந்திருந்த ஹார்வி, வழக்கத்தைவிடவும் தாராளமாகச் செலவு செய்யும் மனநிலையில் இருந்தான். எப்படியாவது வின்ஸெண்ட் வேன் காகின் அந்த ஓவியப் பொக்கிஷத்தைத் தன் வசமாக்கிக் கொள்ளத் தீர்மானித்தான்.

ஸாத்திபையிலிருந்து அமைதியாக வெளியேறி, லமான்ஸ் ஓவியக் கூடம் அருகில் தான் இருப்பதை ஒரு போன் புத்தகத்தைப் பார்த்துத் தெரிந்து கொண்டு, டாக்ஸி பிடிக்காமல் நடக்கத் தொடங்கினான். இந்த விவரம் உடனே வாக்கி டாக்கி மூலம் பியர்ரிக்கு ராபினால் தெரிவிக்கப்பட்டது.

அங்கே பியர்ரியுடன் சேர்ந்து ஒரு நாடக மாட ஸ்மைலீபனும் ஜேம்ஸும் தயாராக இருந்தார்கள். ஹார்வி உள்ளே நுழைந்த சமயம் அந்த வேஷதாரிகள் இப்படிப் பேசிக் கொண்டார்கள்:

''விலையைப் பற்றிப் பிரச்னை இல்லை'' என்றான் ஸ்மைலீபன். ''ஆனால் இது நிஜமான வேன்காக்தானா?''

''நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்'' என்று ஆரம்பித்தான் பியர்ரி. ''இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பித்த சமயம் பெர்லின் கலைக்கூடத்தில் மூன்று வேன்காக் ஓவியங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. யுத்தம் ஆரம்பித்ததும் மூன்றும் நாஜிகளால் பறிமுதல் செய்யப்பட்டன. ஹிட்லரே இதற்கு அனுமதி வழங்கினான். ஓவியங்களை ரசித்துக் கொண்டிருப்பது வீண் வேலை என்றும் பணக்காரர்களின் பொழுது போக்கு என்றும் பழி சுமத்திப் பறிமுதலை நியாயப்படுத்தினான். அந்த ஓவியங்கள் என்ன ஆயின என்பது யாருக்கும் தெரியாது. ஆட்சியிலிருந்த நாஜிகள் அயல்தேசப் பணக்காரர்களுக்கு அவற்றை விற்றுப் பணத்தைப் பங்கு பிரித்துப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டதாக அனுமானிக்கப்படுகிறது. இதெல்லாம் சரித்திர ஏடுகளில் பதிவாகியிருக்கும் விவரங்கள்.

''அந்த ஓவியங்களுள் ஒன்றுதான் இது! இதோ, பின்னால் பாருங்கள்! பெர்லின் ஆர்ட் காலரி என்ற முத்திரை கூட இருக்கிறது! ஆனால் இதை இன்று விற்பவர் யார் என்று மட்டும் கேட்காதீர்கள்! அந்த விவரத்தை நான் பரம ரகசியமாகக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்பதை நீங்களே ஊகிக்கலாம்.''

''ஒரு லட்சத்து எழுபதாயிரம் பவுண்டு''

என்று விலை பேசி முடித்தான் ஸ்டீஃபன்.

ஜேம்ஸ் எட்ட நின்றும் கிட்ட நெருங்கியும் அந்த ஓவியத்தைப் பார்த்துப் பார்த்து, ரசித்து ரசித்து அதை வாங்கப் போகும் தன் நண்பனின் அதிர்ஷ்டத்தை மெச்சிக் கொண்டான்.

''மாலை நாலு மணிக்கு 'செக்' கொண்டு வருகிறேன்; அதுவரை எனக்காக இதை ரிசர்வ் செய்து வையுங்கள்'' என்று கூறி, தான் தங்கியிருக்கும் ஹோட்டல் பெயர் அறை எண் எல்லாவற்றையும் சொல்லி எழுதிக் கொள்ளச் செய்துவிட்டுப் புறப்பட்டான், ஸ்டீஃபன் தன் நண்பரோடு.

ஸ்டீஃபன் தன் அறைக்குத் திரும்பிய பத்துப் பதினைந்து நிமிஷங்களில் அவன் எதிர்பார்த்தபடியே ஹார்வி வந்து சேர்ந்தான்.

''நீங்கள் அந்த ஓவியத்தை வாங்கிய போது நான் அருகில் இருந்தேன்; கவனித்திருப்பீர்கள்'' என்றான், அறைக் கதவு திறக்கப்பட்டதும்.

தலையாட்டியபடியே ஹார்வியை உள்ளே அழைத்து அமரச் செய்தான் ஸ்டீஃபன்.

''எனக்கு அந்த ஓவியம் வேண்டும்; கண்டிப்பாக வேண்டும்! நீங்கள் என்ன விலை கேட்டாலும் சரி!''

ஸ்டீஃபன் தயங்கித் தொண்டையைக் கனைத்தான்.

''மறுக்கக் கூடாது; எந்தவிதமான காரணமும் கூற வேண்டாம்! பதினைந்தாயிரம் டாலர் தருகிறேன்'' என்றான் ஹார்வி.

''இருபதாயிரம் என்றால் முடிக்கலாம்'' என்றான் ஸ்டீஃபன். ஹார்வி உடனே 'கேஷ் செக்' எழுதிக் கொடுத்தான். ''கணக்கில் கட்ட அவசியமில்லை. பணமாக வாங்கிக் கொள்ளலாம்'' என்றான்.

ஸ்டீஃபன் பியர்ரிக்கு போன் போட்டான். ''சற்றுமுன் ஒரு வேன் காக் ஓவியத்தை வாங்குவதாகச் சொன்னேன் அல்லவா? அதை ஹார்வி என்பவர் — என் நண்பர் — வந்து அதே விலை கொடுத்து வாங்கிக் கொள்வார். அதை நீங்கள் அவருக்குத் தந்து விடலாம்'' என்றான்.

ஹார்வி அடக்கமுடியாத சந்தோஷத்தோடு ஸ்டீஃபனின் கையைப் பற்றிக் குலுக்கிவிட்டு விடை பெற்றான். வேன் காக் ஓவியத்தைத் தன் உடைமையாக்கிக் கொண்டான்.

அது ஒரு போலி ஓவியம் என்றும் பியர்ரியின் கலை ஆற்றல் மிக்க நண்பன் ஒருவன் அசலைப் போலவே இம்மியும் பிசகாமல் காப்பி அடித்துத் தீட்டியது (பெர்லின் கலைக் கூட முத்திரை உட்பட) என்றும் ஹார்விக்கு இன்னும் நீண்ட காலத்துக்குத் தெரிய வரப் போவதே இல்லை!

பழிக்குப் பழி வாங்கி, பணம் பிடுங்கும் முதல் திட்டம் அபார வெற்றி அடைந்து விட்டது!

(தொடரும்)

* கா. அப்துல்மஜீத், திருமயம்.

? வானொலியில் செய்தி கேட்டீரா? உணவுப் பொருள்களை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு சென்ற போது, 'இந்தியா வாழ்க! ராஜீவ் காந்தி வாழ்க! எம். ஜி. ஆர். வாழ்க!' என்று மக்கள் வாழ்த்துக் கோஷமிட்டதாக வானொலி அறிவித்திருந்ததே! அப்படியிருக்க நீர் சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகிவிட்டது போங்கள்!' என்று கூறியிருப்பது விஷமத்தனம்தானே?

! அது விஷமத்தனமல்ல; மேற்படி வானொலி அறிவிப்பையும் பத்திரிகைச் செய்தியையும் படிக்காமல் கோட்டை விட்ட குற்றம். இதை என் கவனத்துக்குக் கொண்டு வந்த உங்களுக்கும் வேறு சில வாசகர்களுக்கும் நன்றி.

* டி. மகி, வீரராக்கியம்.

? நம் நாட்டில் ஜாதியைப் பயன்படுத்தாத இடம் எது என்பதைத் தங்களால் கூற முடியுமா?

கராசே, விஷமத்தனம் வேண்டாம்!

! முன்பே கலைவாணர் பாடிய மாதிரி 'ரயிலே ரயிலே' தான்; பஸ்கள், விமானங்கள், கப்பல்கள்தான். அப்புறம் ரத்த தானம் பெறும் போதும் யாரும் ஜாதியைப் பார்ப்பதில்லை. சுருக்கமாகச் சொன்னால், சுயலாபம் அதிகமாக இருக்கும்போது யாரும் அங்கே ஜாதியைப் பயன்படுத்துவதில்லை; அல்லது பயன்படுத்தத் தயங்குவதுமில்லை.

* எம். கிருஷ்ணன், மதுரை — 3.

? ராம் ஜெத்மலானியைக் 'குரைக்கின்ற நாய்' என்று ராஜீவ் கூறியதால்தான், அவர் இப்போது தினசரி பத்துக் கேள்விகள் என்று பல விஷயங்களை அம்பலமாக்குகிறார். ஆக, தன்னை அவமானப்படுத்தியதால் ஒருவரைக் காட்டிக் கொடுக்கிற சராசரி மனிதர்தானே ஜெத்மலானி?

! தலையை விட்டுவிட்டு வாலை மட்டும் பிடித்துக் கொண்டீர்கள் என்று நினைக்கிறேன். அநேகமாக எல்லாரும் போஃபோர்ஸ் ஊழல், நீர்மூழ்கி ஊழல என்று மட்டுமே கூறிக் கொண்டிருந்தபோது — அதற்கு மேல் பேசப் பயந்து கொண்டிருந்தபோது — துணிந்து ராஜீவ் மீது பகிரங்கமாகக் குற்றம் சாட்டியதுடன், 'இதற்காக என் மீது மான நஷ்ட வழக்குப் போடுங்கள்' என்று சவால் விட்டவர் ஜெத்மலானி. 'அப்படி வழக்குத் தொடுக்கப்படுமானால் நான் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யும் போது பல தகிடுதத்தங்கள் அம்பலமாகும்' என்றார். இதற்கு நேரடியாகப் பதில் கூறாமல் 'குரைக்கும் நாய்' என்று வர்ணித்துவிட்டு, ராஜீவ் நழுவிய பிறகுதான் பத்துக் கேள்விகள் அடங்கிய பட்டியல்கள் தொடங்கித் தொடர்கின்றன. ஜெத்மலானி இன்று காட்டும் வீரம், பாரதப் போரில் அபிமன்யுவின் வீரத்துக்கு நிகரானது. இது காட்டிக் கொடுக்கிற வேலையல்ல; தட்டிக் கேட்கிற சமாசாரம்.

* அ. அப்துல்சமத், மூலக்கடை.

? அ. இ. மு. க. வின் பத்தாண்டு சாதனை பற்றி?

! தினசரிப் பத்திரிகைகளுக்கு நல்ல விளம்பர வருமானம்.

* வெ. நீலா, மன்னை.

? இராஜாஜியின் மூளை மியூசியத்தில் பத்திரமாக உள்ளதா? பத்திரப்படுத்தப் போவதாக அரசாங்கம் சொன்னதே?

! இராஜாஜியின் மூளை அவரது புத்தகங்களின் வடிவில் பத்திரமாக உள்ளது. அது அப்படி ரொம்பவும் பத்திரமாக இல்லாமல் அனைவரின் — குறிப்பாக அரசியல்வாதிகளின் — உபயோகத்தில் இருக்க வேண்டும் என்பதுதான் நமது ஆசை.

* சி. தங்கப் பழம், மேலக்கிருஷ்ணன்புதூர்.

? மக்கள் ஆட்சியில் அரசவைக் கவிஞர் அவசியமா?

! உண்மையில், அது மன்னராதிக்கத்தின் வெளிப்பாடுதான் என்றாலும் தமிழகத்தில் லஞ்சம் வாங்க முடியாத ஒரே பதவி அதுதான். அதனால் இருந்துவிட்டுப் போகட்டும், விடுங்கள்!

* அயன்புரம், எஸ். ராஜா.

? தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுள் தங்களுக்குப் பிடித்தது எது?

! 'தாகம்!' குப்பையில் மாணிக்கமாக ஒளிர்கிறது இந்த நிகழ்ச்சி. வாரம் ஒரு கதையை எடுத்துக் கொண்டு விறுவிறுப்பாகக் கொண்டு போகிறார்கள். இயல்பான, அளவான வசனங்களுடன், மிகைப்படுத்தல் இல்லாத நடிப்புடன், தத்ரூபமான காட்சி அமைப்புக்களுடன் — கைதிகளின் வெள்ளை உடையில் படிந்த செம்மண் புழுதி

யைக் கூடக் கவனமாகப் படம் பிடிக்கும் காமெராக் கண்ணுடன் தயாரித்துள்ளார்கள். எல்லோருமே நன்றாக நடித்தாலும் ஜெயிலர் ராஜேஷின் மிடுக்கும், உணர்ச்சி மாற்றங்களை முகபாவங்களால் அனாயாசமாக உணர்த்தும் திறனும் அசர வைக்கின்றன. சரியான நடிகரைத் தேர்ந்தெடுத்த தயாரிப்பாளரைப் பாராட்டும் அதே நேரத்தில், தமிழ்த்திரையுலகுக்கு அவரது திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியவில்லையே என்று வருத்தமாகவும் இருக்கிறது.

* க. தியாகராசன், நெய்வேலி.

? 'சேவல் முட்டையிட்டாலும் இடலாம்; காளை கன்று போட்டாலும் போடலாம். ஆனால், கருணாநிதி கோட்டையைப் பிடிக்க முடியாது' என்று பேசியிருக்கிறாரே முன்னாள் அமைச்சர் காளிமுத்து?

* ரசிலே ரசிலே...





* மூளை, புத்தகங்களில்...



* வாழ்த்தும் வருத்தமும்



* நப்பாசை?

! இப்படியெல்லாம் பேசினாலாவது, தாம் மறுபடியும் கோட்டைக்குப் போகும் வாய்ப்புக் கிடைக்காதா என்ற நப்பாசையில் பேசுகிறார் போலும்!

* என். பாலசுப்பிரமணியன்,
சென்னை — 101.

? வி. பி. சிங்கின் புகாருக்கு டாடா நிறுவனம் விடுத்துள்ள மறுப்பைப் படித்தீர்களா?

! டாடாவின் மறுப்பையும் படித்தேன். அந்த மறுப்புக்கு வி. பி. சிங்கின் மறுப்பையும் சேர்த்தே படித்தேன்.

* பாரதி பா. மு. தாசன், போடிநாயக்கனூர்.

? 'சட்டசபையில் பொய் சொல்லக் கூடாது. ஆனால் பொய்யைப் பரப்புவது பற்றி நான் ஏதும் தீர்ப்புச் சொல்ல இயலாது' என்று கேரள சபாநாயகர் கூறியிருப்பது சரிதானா?

! அவர் எந்தச் சந்தர்ப்பத்தில் எந்தச் சூழ்நிலையில் இப்படிக் கூறினார் என்பது எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை வேதனை கலந்த அங்கத பாணியில் கூடப் பேசியிருக்கலாம். பொய்யைப் பரப்புவது என்பது பிரசாரம் என்ற பெயரில் இன்று அங்கீகரிக்கப்பட்ட ஒரு போர் முறையாகி விட்டதென்பது உண்மையே. மத்திய, மாநில அரசுகள் மட்டுமின்றி எதிர்க்கட்சிகளும் பொய்யைப் பரப்புகின்றன. பனிப் போரில் அமெரிக்காவும் ருஷ்யாவும் மாறி மாறிப் பொய் பரப்புகின்றன. இவற்றை ஊடுருவிப் பார்த்து உண்மைகளை உணர நமக்கு அசாதாரண அறிவாற்றல் தேவைப்படுகிறது.

* மு. சிவஞான முருகன், ஸ்ரீவைகுண்டம்.

? பொது வாழ்வில் ஈடுபடுகிறவர்களின் சொந்த வாழ்க்கை — பத்திரிகைகள், பொது மக்கள் ஆகியோரின் பார்வைக்கு அப்பாற்பட்டதா?

! அவர்களது சொந்த வாழ்க்கையால் நாட்டு நலனுக்குத் தீங்கில்லாத வரை அது நமது பார்வைக்கு அப்பாற்பட்டதே. ஆனால், ஒருவரது பலவீனம் தேசத்துக்குத் தீங்கு செய்யுமானால் 'அது எனது அந்தரங்க வாழ்க்கை' என்று கூறி அவர் தப்ப முடியாது. உதாரணமாக, சமீபத்தில் அமெரிக்க ஜனாதிபதி போட்டியிலிருந்து ஹார்ட் விலகிக் கொள்ள நேர்ந்ததற்குக் காரணம், அவர் ஒரு சின்ன வீடு வைத்திருந்தார் என்பது மட்டுமல்ல; 'அப்படி ஒன்றும் தமக்குக் கிடையாது' என்று அவர் பொய் சொன்னதுதான் குற்றமாகி விட்டது. பச்சைப் பொய் சொல்கிறவர் ஜனாதிபதியாவதை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என்பது உணரப்பட்டது.

* ரூ. 15 பரிசு பெறுபவர்:

பாரதி பா. மு. தாசன்,
10/1, ரெங்கசாமி செட்டியார் சந்து,
போடிநாயக்கனூர்,
— 626 513.

விழிகளைத் தொடாத இமைகள்

''மிஸ்டர் தனசேகர்! உங்க மனைவி அர்ப்பணாவுக்கு ஊசி போட்டு, பெஞ்சு மேல ஓர் அஞ்சு நிமிஷம் படுக்கச் சொல்லிட்டு வந்திருக்கேன். ஏன் தெரியுமா? உங்ககிட்டே தனியா ஓர் அஞ்சு நிமிஷம் பேச. நான் சொல்லப் போறதை நல்லாக் கவனியுங்க மிஸ்டர் தனசேகர். உங்க மனைவி இப்ப ஏழாவது மாசமா இருக்காங்க. ஆனா, உங்க வாரிசை அவங்க சுகமாப் பெத்துக் கொடுக்கற ஸ்டேஜ்ல அவங்க உடம்பு இல்லே. உடம்பு பலவீனமா இருக்கு. இதுக்கு நான் மருந்தும் டானிக்கும் எழுதித் தர்றேன். ஆனா அது மட்டும் போதாது. உங்களுடைய அன்பும் அரவணைப்பும் ரொம்பத் தேவை. அதாவது... அவங்க விரும்பறதை நீங்க மறுக்காம வாங்கித் தரணும். அவங்க ஆசைக்கு நடுவே நீங்க எந்தச் சுவரும் எழுப்பக் கூடாது. இதுதான் மிகவும் முக்கியம். உங்க மனைவியோட ஆரோக்கியத்துக்கு இது ரொம்ப அவசியம்.

''சரி டாக்டர்.''

''இப்ப... உங்க மனைவியை நீங்க கூட்டிக்கிட்டுப் போகலாம்...''

''தாங்க்யூ வெரிமச், டாக்டர்...'' நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளி, எழுந்தான் தனசேகர்.

அர்ப்பணா கண்களில் ஆச்சரியம் காட்டி, அதை வார்த்தைகளில் வெளிப்படுத்தினாள்.

''நிஜமாவா சொல்றீங்க?''

''ஆமாம் அர்ப்பணா. இன்னைக்குச் சாயங்காலம் நீயும் நானும் வேடசெந்தூர் முருகன் கோயிலுக்குப் போகப் போறோம்...''

''உங்களுக்குத்தான் சாமி... தெய்வம்னா கொஞ்சங்கூடப் பிடிக்காதே...''

''இப்பப் பிடிக்கும்... எல்லாம் உனக்காக...''

''எனக்காகவா? என்ன சொல்றீங்க?''

''உன்னோட வயித்துல இருக்கிற நம்ம குழந்தை நல்லவிதமாப் பிறக்கணுமே? அதுக்காக...''

''இது சுயநலமான வழிபாடு...''

''அப்படியே வெச்சுக்கோ.. சாயங்காலம் அஞ்சு மணிக்கு ஆபீஸிலிருந்து வந்துடுவேன்... புறப்பட்டுத் தயாரா இரு... வரட்டுமா?'' — தனசேகர் படியிறங்கி, வாசலில் நின்றிருந்த ஸ்கூட்டரை உதைத்து, அதில் அமர்ந்த போது, வாசல் படிக்கு வந்து கை ஆட்டினாள் அர்ப்பணா.

தனசேகர் சிரித்து ஸ்கூட்டரைக் கிளப்பிய போது, அர்ப்பணா செல்லமாக வயிற்றைத் தடவிச் சொன்னாள். 'டேய்! குட்டிப் பையா. அப்பா ஆபீஸ் போறாரு... அப்பாவுக்கு டாடா சொல்லுடா!'

அரச மரத்தடி விநாயகரைச் சுற்றித் தரிசித்துவிட்டு, முருகன் கோயிலுக்குள் நுழைந்தார்கள் அர்ப்பணாவும் தனசேகரும். அர்ச்சகர் அர்ப்பணா அருகே வந்தபோது— முகம் வெளிறினாள்.

அர்ச்சகர் அவளை இமைக்காமல் பார்த்தார்.

அர்ப்பணா திரும்பித் தனசேகரை முறைத்



விஜயாலயன்

தான். அவளுக்கு அழுகை வர ஆரம்பித்தது.

''யார் பேருக்கு அர்ச்சனை பண்ணணும்?'' அர்ச்சகர் கேட்டார்.

''தனசேகருக்கு...'' என்றபடியே, அர்ச்சனைத் தட்டை நடுங்கும் கரங்களால் அர்ப்பணா நீட்ட, அர்ச்சகர் வாங்கிக் கொண்டு போனார்.

கோயிலை விட்டு எப்போது வெளியே போவோம் என்று அர்ப்பணா தவித்தாள்.

அர்ச்சகர் பூஜையை முடித்துப் பிரசாதத்தைத் தட்டில் வைத்து நீட்டினார். திமிறி வரும் அழுகையோடு தட்டை வாங்கிக் கொண்டு வேகமாக வெளியே நடந்தாள் அர்ப்பணா. அவள் பின்னாலேயே வேகமாக நடந்தான் தனசேகர்.

''அர்ப்பணா...! என் மேலே கோபமா?''

திரும்பிக் கோபமாக முறைத்தாள். முறைத்த விழிகளின் மேல் நீர் மிதந்தது.

''நான் கொஞ்சம் சந்தோஷமாய் இருக்கிறது உங்களுக்குப் பிடிக்கலையா...?'' என்று அவள் சொன்ன போது, பட்டென்று அதிர்ந்தான்.

''அர்ப்பணா...! நீ என்ன சொல்றே?''

''எங்கப்பா... இந்த முருகன் கோயில்லே அர்ச்சகரா இருக்கறது உங்களுக்கு நல்லாவே தெரியும். பின்னே எதுக்காக என்னை இங்கே கூட்டிக்கிட்டு வந்தீங்க?''

''அர்ப்பணா! நீயும் நானும் காதலிச்சோம். ரெண்டு பேரும் ரிஜிஸ்தர் ஆபீஸ்லே கல்யாணம் பண்ணிக்கிட்டோம். மாலையும் கழுத்துமா உங்க வீட்டு வாசல்லே நின்னப்போ... உங்கப்பா... 'நீ எனக்கு மகளுமில்லே. நான் உனக்கு அப்பனுமில்லே. அந்த உறவு இந்த நிமிஷத்துலே இருந்து சுத்தமா அறுந்து போச்சு. ஊர் பேர் தெரியாத ஒருத்தனைக் கட்டிக்கிட்டியே. காலம் முழுவதும் அவனையே கட்டிக்கிட்டு அழு. இனிமே இந்த வீட்டு வாசப்படியை மிதிக்காதே. எங்க முகத்திலேயே விழிக்காதே. மரியாதையாப் போயிடு...'ன்னு கத்தினாரு. அதுக்குப் பிறகு நாம ரெண்டு பேரும் தனியா வந்துட்டோம். இந்த ஒரு வருஷமா நீ உங்க அம்மா, அப்பா முகத்தையே பார்க்கலே. வாயும் வயிறுமா இருக்கற எந்தப் பொண்ணும் தன்னோட அம்மா, அப்பாவைப் பார்க்க ஆசைப்படுவா. அந்தக் குறை உனக்கு வரக் கூடாது... இந்தச் சூழ்நிலையிலே உங்கப்பாவைப் பார்த்தால் நீ சந்தோஷப்படுவேன்னுதான் இங்கே கூட்டிக்கிட்டு வந்தேன்...''

''உங்க கையிலிருந்து என் கழுத்துக்கு எப்போ தாலி வாங்கிக்கிட்டேனோ, அந்த நிமிஷத்திலே இருந்து எனக்கு நீங்கதான் எல்லாமே. என்னோட குடும்பத்தையே மறந்துட்டேன். பெத்த கடனுக்காக அவங்ககிட்டே ஆசீர்வாதம் வாங்கப் போனோம். ஆனால்... அவங்க உங்களை எப்படி அவமானப்படுத்தினாங்க? அதை மறந்துட்டீங்களா? நீங்க மருமகனா நினைச்சு அதை மறக்கலாம். எனக்கு அவர் அப்பாவா இருக்கிறதால நீங்க மன்னிக்கலாம். ஆனா அவங்க



நீங்க எனக்குக் கணவர்ங்கிறதை மறந்துட்டாங்க. என் கணவரை அவமானப்படுத்தினவங்களை நான் மன்னிக்க மாட்டேன். நான் அவங்களை அன்னைக்கே மறந்துட்டேன். ப்ளீஸ்... இனிமே இப்படியெல்லாம் கூட்டிக்கிட்டு வராதீங்க...'' திடீரென்று அவன் மார்பில் புதைந்து அழுகையில் குலுங்கினாள் அர்ப்பணா.

தனசேகர் அர்ப்பணாவின் தலையை அன்புடன் கோதி விட்டான்.

''ஸாரி... அர்ப்பணா... என்னை மன்னிச்சுக்கோ... உன்னோட மனசை முழுமையாப் புரிஞ்சுக்காதது என்னோட தப்பு... ஐயாம் வெரி ஸாரி...''

கோயிலின் வாசலுக்கு வந்து, இருவரையும் பார்த்துவிட்டுத் திரும்பவும் கோயிலுக்குள் நுழைந்து முருகனின் பாதங்களின் அடியில் அமர்ந்தார் அர்ச்சகர் சுப்பிரமணிய சாஸ்திரி.

''முருகா! என்னோட மூத்த பொண்ணு அர்ப்பணாவையும் சேர்த்து எனக்கு நாலு பொண்ணுகள். மூத்த பொண்ணு காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்தப்போ... முதல்லே நான் அதிர்ந்து போனது உண்மை தாம்பா. அவங்களை அன்னைக்கு என்னோட வீட்டுக்குள்ளே விடலே. ஏன் தெரியுமா? என்னோட மத்த மூணு பொண்ணுகளோட வாழ்க்கையை நினைச்சுத்தான். அவங்க ரெண்டு பேரையும் வீட்டுக்குள்ளே அனுமதிச்சிருந்தா... மத்த மூணு பொண்ணுகளையும் பெண் கேட்டு என் வீட்டு வாசலுக்கு யார் வருவா? அதனாலதான்... வேணுமின்னே அவங்களை அவமானப்படுத்தி அனுப்பி வெச்சேன். இப்போ என் மக வாயும் வயிறுமா இருக்கறதைப் பார்க்கறப்போ ரொம்பச் சந்தோஷமா இருக்கு முருகா... அவங்க எங்க இருந்தாலும் சந்தோஷமா இருக்கணும். அதுக்கு உன்னோட ஆசீர்வாதம் எப்பவும் இருந்துக்கிட்டே இருக்கணும் முருகா...'' முருகனிடம் சொல்லி வாய்விட்டு அழ ஆரம்பித்தார் சுப்பிரமணிய சாஸ்திரி.



• வி. ஆர். லட்சுமி நாராயணன்

கிருஷ்ணய்யருக்குக் கிண்டலும் தெரியும்!

ஜனாதிபதி தேர்தலில் வி. ஆர். கிருஷ்ணய்யர் வெற்றி பெறுகிறாரோ இல்லையோ, அவர் வாழ்க்கை ரொம்ப ரொம்ப ரசமானது என்பதை அவரது சகோதரரும் முன்னாள் தமிழக டி. ஜி. பி.யுமான வி. ஆர். லட்சுமிநாராயணன் கூறும் நிகழ்ச்சிகளிலிருந்து அறிகிறோம்:

** கிருஷ்ணய்யருக்கு, ஜாதிமத பேதம் இல்லை; இதற்கு மூல காரணம் அப்பாதான். மத நம்பிக்கை மிகுந்தவர் அவர். ஆனாலும், ஆண்டுதோறும் ருத்ர ஏகாதசி சமயத்தில், கடைசி நாள் விருந்தின் போது, முஸ்லிம்கள் உள்பட, பல ஜாதியினரையும், மதத்தினரையும் அழைத்து, விருந்தளிப்பார்.

** சிறு வயதிலிருந்தே கிருஷ்ணய்யருக்கு பெரிய வக்கீலாக வேண்டும் என்று ஆசை. அதற்காக தம்மை இப்போதிலிருந்தே தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்தில், ஒத்திகை பார்ப்பது போல் இளம் வயதிலேயே நிறையப் பேசிப் பேசிப் பழக்கிக் கொண்டார்!

** சகோதரிக்குச் சின்ன வயதிலேயே அக்கால முறைப்படி திருமணம் நடந்து விட்டது. அப்போது கிருஷ்ணனுக்குப் பதின்மூன்று வயதிருக்கும். தலைச்சேரியில் சம்பிரதாயப்படி ஜானவாசத்தன்று யானைமேல் மாப்பிள்ளையை உட்கார வைத்து ஊர்வலம் நடந்தது. மாப்பிள்ளை போகும் யானையைத் தொடர்ந்து, பின்னால் இன்னும் சில யானைகளும் வருவது வழக்கம். கிருஷ்ணன் தானும் ஒரு யானைமேல் உட்கார்ந்து கொண்டு வருவேன் என்று அடம் பிடித்து அமர்ந்தான். எதிர்பாராத விதமாய், அந்த யானை, பாகனுக்கு அடங்காமல் தறிகெட்டு ஓட ஆரம்பித்தது. எல்லோரும் பயந்து நடுங்க, கிருஷ்ணனோ கெட்டியாய்ப் பிடித்தபடி யானை மேலேயே உட்கார்ந்திருந்துவிட்டு யானை ஓர் ஆற்றின் குறுக்கே ஓடும்போது சாமர்த்தியமாய்த் தண்ணீரில் குதித்து, நீந்திக் கரையேறி வந்துவிட்டான்!

** கிருஷ்ணய்யருக்குப் பிராணிகள் துன்பப்படுவதைப் பார்த்தால் மனம் தாங்காது. கேரளாவில் அமைச்சராய் இருந்த போது, ஒரு விழாவில் கலந்து கொள்ள அவசரமாய்ப் போய்க் கொண்டிருந்தார். வழியில், அடிபட்டுத் துடித்துக் கொண்டிருந்த ஓர் ஆட்டைப் பார்த்தார். அதை லாரியோ, காரோ மோதித் தள்ளிவிட்டுப் போயிருக்க வேண்டும். அவ்வளவுதான். கூட வந்தவரிடம், 'விழாவுக்கு வர லேட்டாகும்' என்று தகவல் சொல்லி அனுப்பிவிட்டுக் காரில் அடிபட்ட ஆட்டை ஏற்றிக் கொண்டு, மருத்துவமனைக்குப் போய்விட்டார்.


** நேருவும், கிருஷ்ணய்யரும் நெருங்கிய நண்பர்கள். பக்கம்பக்கமாகக் கடிதம் எழுதிக் கொள்வார்கள். ஒருசமயம் கிருஷ்ணய்யர் எழுதிய கடிதத்தைப் படித்துவிட்டு, தில்லிக்கு வரும்படியும், நேரில் பேச விரும்புவதாயும் தெரிவித்திருந்தார் நேரு. ஆனால் அந்தக் கடிதம் இவர் கைக்குக் கிடைக்கும் முன்பே இவர் நேருவைக் காண தில்லி போக வேண்டியதாகிவிட்டது. ஆம்! நேரு இறந்து விட்டார்! அவர் இறந்து இரண்டு நாட்கள் கழித்துத்தான் அவரது கடிதம் கிருஷ்ணய்யருக்குக் கிடைத்தது.

** ஒருமுறை பம்பாயிலிருந்து தில்லிக்குக் கிருஷ்ணய்யர் விமானத்தில் பயணம் செய்த போது சகபயணியாக ராஜ்கபூர் இருந்தார். கிருஷ்ணய்யர், "நான் கேரள ஹாக்கி சங்கத்தின் தலைவர். கலைநிகழ்ச்சிகள் மூலம் ஹாக்கி சங்கத்துக்கு நிதி திரட்டித் தாருங்கள்" என்று கூறிவிட்டு, "உங்கள் முகவரியைச் சொன்னால், நான் இதுபற்றி விரிவாய்க் கடிதம் எழுதுகிறேன்" என்றார். ராஜ்கபூருக்குத் தன்னுடைய முகவரியை ஒருவர் கேட்டது பெரிய 'இன்சல்ட்'டாய்த் தோன்ற, "ராஜ்கபூர், பம்பாய் என்று போடுங்கள் போதும்" என்றார். தொடர்ந்து, "உங்கள் முகவரி கொடுங்கள். எனக்கு வசதியான தேதி குறிப்பிட்டுக் கடிதம் எழுதுகிறேன்" என்றார் ராஜ்கபூர். அதற்குக் கிருஷ்ணய்யர், "கிருஷ்ணய்யர், கேரளா என்று போடுங்கள், போதும். ஊரின் பெயர் கூட எழுத அவசியமில்லை!" என்றார்!

** அன்றைய சென்னை ராஜதானியில் சட்டசபையில் எதிர்க்கட்சி உறுப்பினராய்க் கிருஷ்ணய்யர் இருந்த சமயம், முதல்வராய் இருந்த ராஜாஜி, "உம்மைப் போன்ற அறிவாளிகள் மந்திரியாய் இருந்தால் மக்களுக்கு உபயோகமாய் இருக்குமே" என்ற போது, கிருஷ்ணய்யர்,

"எனக்கு உங்கள் கண்ணில் பட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்று ஆசை. அது நான் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தால்தான் சாத்தியம். உங்கள் பக்கத்தில் உட்கார்ந்தால் நான் இருப்பதையே நீங்கள் மறந்து போய்விடுவீர்கள்!" என்றார்.

தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி**



திரையுலகில் ஒரு சிறிய புரட்சி!
பாடல்களே இல்லாமல் ஒரு படம்!
K.பாலசந்தர்
வழங்கும்
வண்ணக் கனவுகள் A
அமீர்ஜான்
வசனம்:
வைரமுத்து

* ராஜீவ் — கார்பசிசேவ்: முதல்நாள் கதாநாயகர்கள்.



ருஷ்ய அரங்கேறிய

இடுக்கி விழுந்தால் ஒரு மாபெரும் கலைஞரின் காலில்தான் விழ வேண்டும் என்பதுபோல்பக்கத்துஇருக்கையில்பர்வீன் சுல்தானு, எதிரே லால்குடி ஜெயராமன்; இந்தப் பக்கம் திரும்பினால் தியானத்தில் ஆழ்ந்தவராக பிஸ்மில்லா கான், பின்னால் பார்த்தால் எம். எஸ். என்று இந்தியாவின் தலைசிறந்த கலைஞர்கள் அந்த விமானத்தில் ரஷ்யாவை நோக்கிப் பயணத்தைத் தொடங்கினார்கள். நூற்று இருபத்தைந்து கலைஞர்களுடன் ஏராளமான பத்திரிகையாளர்களும் உடன் செல்ல, எல்லா புகைப் படக்காரர்களும் விமான விதிகளை மீறிக் காமெராக்களை கிளிக் செய்ய, புது தில்லியிலிருந்து மாஸ்கோ போய்ச் சேர்வதற்கு ஆன ஏழு மணி நேரங்கள் ஏழு நிமிடங்களைப் போல் பறந்துவிட்டன!


மாஸ்கோ விமான நிலையம் பிரமிக்க வைக்கும் பிரும்மாண்ட அளவில் இருந்தது. கலைஞர்கள், அவர்களை வரவேற்க வந்த ரஷ்ய வாழ் இந்தியர்கள், மொழி பெயர்ப்பாளர்கள் என்று திரும்பிய பக்கமெல்லாம் இந்தியர்களாகவே இருந்தார்கள். ஹோட்டல் ரஷ்யாவில் (ரஸியா என்று உச்சரிக்கிறார்கள்.) நாங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த ஹோட்டலில் ஆறாயிரம் அறைகள்! அப்பழுக்கின்றி ஒவ்வொன்றும் கச்சிதமாக இருக்கிறது. ரஷ்யர்கள் கலகலப்பாக இல்லாவிட்டாலும் பண்புள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்தியா போல் இங்கும் கலைஞர்களிடம் ஆட்டோகிராஃப் கேட்டுச் சூழ்ந்து கொள்கிறார்கள்.

ஜூலை மூன்றாம் தேதி நடந்த துவக்க விழாவின்போது பலத்தகாற்றுவீசிக்கொண்டிருந்தது. அச்சுறுத்திய மழை மேகங்களை ரஷ்ய விஞ்ஞான தொழில் நுட்ப அறிஞர்கள் 'சுட்டுத் தள்ளி' விரட்டி விட்டதால் பனிச் சென்று வெயிலும் காய்ந்தது! யாருமே எளிதில் நுழைந்துவிட முடியாத கிரெம்ளின் சதுக்கத்தில் நாங்கள் கடும் பரிசோதனைக்குப் பிறகு நுழைந்தபோது ஒருவித மெய் சிலிர்ப்பு உண்டாயிற்று. அங்குள்ள பழைமை வாய்ந்த மூன்று சர்ச்சுகளின் உச்சியில் தங்கக் கலசங்கள் மின்னின. அந்தக் கோயில்களில் இப்போது வழிபாடு நடைபெறுவதில்லை!

சதுக்கத்தில் நான்கு மேடைகள் இந்தியப் பாணி அலங்காரங்களுடன் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் இரண்டில் கேரளத்துப் பஞ்சமுக வாத்தியங்கள் வைக்கப்பட்டிருந்தன. நடு நாயகமான மேடை இரு நாட்டுத் தலைவர்களுக்காகவும் சில முக்கிய அதிகாரிகளுக்காகவும் உருவாக்கப்பட்டிருந்தது. நான்காவது மேடையில், எம். எஸ். சுப்புலட்சுமி பிரார்த்தனை கீதம் பாடத் தமது குழுவினருடன் தயாராயிருந்தார்.

அன்றைய தினத்தின் கதாநாயகர்கள் — கார்பச்சேவும் ராஜீவ் காந்தியும் இணைந்து நடந்துவந்தார்கள். திருவீழிமிழலை சகோதரர்கள் நாதஸ்வரம் இசைத்து அவர்களை வரவேற்க, விழா துவங்கிற்று.

தொடக்க விழா நிகழ்ச்சிகளை இந்திய டி.வி.யில் பார்த்திருப்பீர்கள். அதைத் தொடர்ந்து லெனின் ஸ்டேடியத்தில் நடந்த கிராமியக் கலைநிகழ்ச்சிகளைப் பார்த்து ரஷ்யர்கள் மயங்கிப் போனார்கள். நூற்றுக் கணக்கான இந்திய கிராமியக் கலைஞர்கள் பல்வேறு மேடைகளில் தோன்றி வண்ணமும், ஒளியும், ஒலியும் இழைத்த அற்புத நிகழ்ச்சிகளை அளித்த காட்சி கண்கொள்ளாததாக இருந்தது. அதன்பிறகு, நாங்கள் சந்தித்த ஒவ்வொரு ருஷ்யரும் தமது பாராட்டைப் புரியாத சொற்களாலும் புரியக் கூடிய அபிநயச் செய்கைகளாலும் உணர்த்திக்



* ரஷ்யப் பெண்ணுக்கு இந்திய முறைப்படித் திலகமிட்டு வரவேற்கும் இந்தியப் பெண்.


கொண்டே இருந்தார்.

ஜூலை நான்காம் தேதியன்று நடந்த பிஸ்மில்லா கானின் ஷெனாய் கச்சேரிக்கும், எம். எஸ்.ஸின் இசைக் கச்சேரிக்கும், மணிபுரி குழுவினரின் நடனத்துக்கும் அமோகமான வரவேற்பு இருந்தது. இந்த மூன்று நிகழ்ச்சிகளும் கிரெம்ளினில் உள்ள பாலஸ் ஆஃப் காங்கிரஸில் நடந்தபோது, ஆறாயிரம் பேர் அமரக் கூடிய அவ்வரங்கமே நிரம்பி வழிந்தது. மறுநாள் ருஷ்யத்

மனங்களில் இந்திய விழா!

தொலைக்காட்சி எம். எஸ்.ஸின் இசை நிகழ்ச்சியை ஒளிபரப்பியதுதான் தாமதம், அவர் சோவியத் யூனியன் முழுவதிலுமே ஒரு நட்சத்திர அந்தஸ்தைப் பெற்று ஒளிர ஆரம்பித்துவிட்டார்.

ஆனால், எல்லாவற்றுக்கும் சிகரமாக அமைந்தது ஆறாம் தேதியன்று Rachmoninoff அரங்கில் நடந்த எம். எஸ்.ஸின் கச்சேரிதான். அந்த நிகழ்ச்சி வாழ்நாளிலேயே மறக்க முடியாத ஓர் அனுபவம். அன்று கச்சேரி கேட்க வந்தவர்கள் அனைவருமே இசையில் ஆழ்ந்த ஈடுபாடுள்ள ரசிகர்கள். அவர்கள் மெய்மறந்து போய்க் கண்களை மூடிக் கொண்டு, மகுடிக்குக் கட்டுண்ட சர்ப்பங்களைப் போல மெள்ள உடலை அசைத்தும் தலையை ஆட்டியும் கச்சேரியை அனுபவித்தார்கள். அவர்களுள் இருவர் 'குறையொன்றும் இல்லை' என்ற ராஜாஜியின் பாட்டையும், ஹே நாதன் என்ற வங்காளப் பாடலையும் எம். எஸ்.ஸுடன் சேர்ந்து மெள்ளப் பாடினார்களாம்! கச்சேரி முடிந்த



* லெனின் ஸ்டேடியம்: கிராமிய நிகழ்ச்சிகளால் களை கட்டியது.

* எம். எஸ்: கைதட்டல் ஓயவே இல்லை!



பிறகு ஓர் ஏழடி உயர ருஷ்யர் எங்களிடம் இதைச் சொல்லிவிட்டு, லாட்வியாவிலிருக்கும் அவர்கள் ஏற்கெனவே இப்பாடல்களை டேப்பில் கேட்டு ரசித்ததுண்டு என்றும் தெரிவித்தார். லாட்வியா எங்கே? இந்தியா எங்கே? பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இருக்கும் மனிதர்களை எல்லா வித்தியாசங்களையும் மறக்கச் செய்து இணைய வைக்கும் இசையின் வல்லமையை எண்ணி மெய் சிலிர்த்தோம். ஒரு ரசிகர், தன் தொண்டையைச் சுட்டிக் காட்டிக் குரல் வளம் அற்புதம் என்றும் கண்களைச் சுட்டிக்காட்டி, இசை தன் கண்ணில் நீர் வரவழைத்தது என்றும் அபிநயம் பிடித்துக் கூறியது மறக்க முடியாத நிகழ்ச்சி. அன்றைய கச்சேரி முடிந்த பிறகு ரசிகர்களின் கைதட்டல் ஓயவே இல்லை. எம். எஸ். அரங்கை விட்டு வெளியேறிக் காரில் ஏறிப் போகும்வரை ரசிகர்கள் கை தட்டிக் கொண்டே, பின்தொடர்ந்து வந்தது ஆச்சர்யமாக இருந்தது. அப்போது இரவு மணி ஒன்பது. அந்நேரத்திலும் மாலை வெளிச்சம் பளீரென்று இருந்தது. மற்றுமோர் ஆச்சரியம். ருஷ்யாவில் சூரியாஸ்தமனம் இரவு பத்தரைக்குத்தான். மூன்றாவதாக ஓர் ஆச்சர்யம் யாருக்கும் அரங்கில் இட ஒதுக்கீடு கிடையாது! பெரிய பெரிய மந்திரிகள்கூட இருபத்தி நாலாவது வரிசையில் உட்காருகிறார்கள்!

ருஷ்யாவில் இந்தியா நடத்திய கல்யாணம் என்றுதான் இவ்விழாவை வர்ணிக்கத் தோன்றுகிறது. ஐ.சி.சி.ஆர்., இந்தியக் கலைவிழா டைரக்டரேட் மற்றும் தசரத் பட்டேல் குழு போன்ற பல பேரின் கூட்டு முயற்சியால்தான் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், ஏற்பாட்டில் எவ்வளவு குழப்பங்கள்! இதில் 'சம்பந்தி' ருஷ்யாவைத் துளி கூடக் குற்றம் சொல்ல முடியாது. அவர்களுடைய கண்டிப்பு கறார் அனைவரும் அறிந்ததே. இந்திய நிர்வாகக் குழுக்களிடையே வழக்கம் போல் ஒற்றுமையின்மை, நான்

[illegible] போட்டி. இந்தச் சொந்தச் சண்டைகளின் மும்முரத்தில் கலைஞர்களை அவர்கள் மறந்தே போனார்கள். ருஷ்யாவின் கடுமையான கட்டுப்பாட்டை மீறிக் கலைஞர்கள் சுதந்திரமாக ஒரு கப் காப்பி கூட வாங்கிச் சாப்பிட முடியாத நிலை. இரண்டுக்கும் இடையே மாட்டிக் கொண்டு அவஸ்தைப்பட்டது கலைஞர்கள்தான். 'காலையில் ஒரு கப் டீ கூடச் சாப்பிடாமல் நான் எப்படிச் சாதகம் செய்வது?' என்று பர்வின் சுல்தானா கேட்ட போது, பரிதாபமாக இருந்தது. ருஷ்யாவிலுள்ள இந்தியத் தூதரகத்திடமிருந்தும் எந்தஉதவியையும்எதிர்பார்க்கமுடியவில்லை. அங்கு ஏற்கெனவே ஆள் பற்றாக்குறை. அதோடு வழக்கமான 'பாலிடிக்ஸ்' வேறு!

இந்தியாவில்வறட்சியும், ஏழைமையும், பஞ்சமும், பயங்கரவாதமும்தலைவிரித்தாடும் போது, இப்படி கோடி கோடியாகச் செலவழித்து ஒரு கலைவிழா நடத்த வேண்டுமா? என்ற கேள்வி அடிக்கடி கேட்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதிலும் துவக்க விழா நிகழ்ச்சியில் அபத்தமாக 'ராஜீவ நயன தியாகராஜ' என்று ஆரம்ப நாளன்றே மங்களம் பாடி அதற்கேற்ப ஒரு நடன நிகழ்ச்சியும் வழங்கியதை எல்லோரும் ஒட்டு மொத்தமாகக் கண்டித்தார்கள். ஒருவேளை அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது போல,' ராஜீவ காந்தியை நினைத்துக் கொண்டு இந்தப் பாடலைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். 'ராஜீவ நயன ராஜீவ நயன' என்று நிரவல் செய்து காக்காய்ப் பிடித்ததுடன் அதற்கு உப்பு சப்பற்ற ஒரு நடனம் வேறு! இந்த நிகழ்ச்சி ஐ. சி. சி. ஆரால் நிராகரிக்கப்பட்டு, பிறகு வேறு சிபாரிசினால் சேர்த்துக் கொள்ளப்பட்டது என்று சொல்கிறார்கள்.

நமது நாட்டைப் பற்றியும் அரசியல் அவலங்களைப் பற்றியும் எவ்வளவுதான் சொன்னாலும், 'இந்தியர்களான நமக்கு இருக்கும் சுதந்திரம் ருஷ்யர்களுக்கு இல்லை. எங்கு பார்த்தாலும் திடகாத்திரமான போலீஸ்காரர்கள் நம்மை அமைதியாகக் கண்காணித்துக் கொண்டே இருக்கிறார்கள். ருஷ்யாவை ஒரு சுத்தமான, ஓரளவு வசதியுள்ள ஜெயில் என்றுதான் வர்ணிக்கத் தோன்றுகிறது. எங்களுடைய மொழி பெயர்ப்பாளராக இயங்கிய நாடியாவிடம், ''சுதந்திரம் இழந்து ஒரு கம்யூனிஸ்ட் தேசத்தில் வாழ்வது எப்படி இருக்கிறது?'' என்று கேட்டபோது, ''ஓ, பிரமாதமாக இருக்கிறது!'' என்றுதான் பதில் சொன்னார். ஆனால் என் கையைப் பற்றிக் கொண்டிருந்த அவரது கையின் நடுக்கத்தை அப்போது உணர முடிந்தது.

— கௌரி ராமநாராயணன்

அடுத்த இதழ்...

வடாற்காடு மாவட்டத்தில் கல்கி—II



வளமான வடாற்காடு விஷமாகிறது!

— கவர் ஸ்டோரி

வேலூரைச் சுற்றி.....

— ஒரு ரவுண்ட்—அப்



''நீங்கள் காணும் பேட்டி டி. டி. சி. மீட்டிங் மாதிரி...''

— வடாற்காடு கலெக்டர் மாலதி பேட்டி

ஆக்கம் சரி; நோக்கம் என்ன?

* நாங்கள் எல்லோரும் மனத்துக்குள்ளாகவே கேட்டுக் கொண்டிருந்த கேள்வியை நீங்கள் அட்டையில் போட்டு, பலருடைய கருத்துக்களையும் பிரசுரித்து, எங்கள் சார்பாக எழுதிவிட்டீர்கள். இப்போது மட்டும் என்ன சார் செய்கிறீர்கள்? பால் விலையையும் ஏற்கெனவே ஏற்றியது போதவில்லை என்று மேலும் லிட்டருக்கு இருபது காசு ஏற்றப் போகிறார்கள். இதற்கு என்ன சொல்கிறீர்கள்?

சென்னை—33. எஸ். ராதாகிருஷ்ணன்.

* வாரா வாரம் நமது பிரதமர் அவர்கள் மீது தாங்கள் சாட்டி வரும் குற்றச்சாட்டுகள் அனைத்தும் ஒருதலைப்பட்சமாக இருப்பது குறித்து வேதனைப்படுகின்றேன். 5.7.87 தலையங்கத்தில் தாங்கள் குறிப்பிடும் "ஆரோக்கியமான அரசியல் மாற்றம்" என்பது என்ன? ஒரு நிலையான, நேர்மையான, நீதியான ஆட்சியை மாற்றம் செய்து கொள்கைப் பிடிப்பு இல்லா, தங்களுக்குள் ஆயிரம் கொள்கை மாறுபாடுகள் கொண்ட ஒரு கும்பலிடம் ஆட்சியை ஒப்படைப்பதா?

எஸ். கனகராஜன்

காட்டுமன்னார்கோயில்.

(கல்கி, பாரபட்சமின்றியே எந்தப் பிரச்னையையும் அணுகுகிறது என்பதற்கு ராஜீவ் காந்தியைப் பாராட்டி ஏற்கெனவே எழுதப்பட்டுள்ள பல தலையங்கங்களே சான்று. இன்று அவரைக் குறை கூறி விமர்சிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை அவர்தான் நமக்கு ஏற்படுத்தியிருக்கிறார். மேலும், புதிய ஜனாதிபதி, ஆட்சியிலே ஓர் ஆரோக்கியமான மாற்றத்தைக் கொண்டுவரக் கூடியவராக இருக்க வேண்டும் என்றுதான் தலையங்கம் குறிப்பிடுகிறதே தவிர, ஆட்சி மாற்றத்தையே அவர் ஏற்படுத்த வேண்டும் என்று கூறவில்லை. — ஆசிரியர்)

* ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறப் போவது இராமனா கிருஷ்ணனா என்பது முக்கியமல்ல! ஆளும் அரசுக்கு ஒப்புதல் அளிக்கும் ஜால்ராவாக இருப்பாரா அல்லது தீயவைகளைத் தட்டிக் கேட்டு நல்லவைகளுக்குப் பாடுபடும் போர் வாளாக இருப்பாரா? என்பதே முக்கியம் என்பதைப் பசுமரத்தாணி போலப் பதிய வைக்கும் தங்கள் தலையங்கம் கனப்பொருத்தம்தான்!

மதுரை—1. வி. சந்திரசேகரன்

* 'வேண்டாம் பெருந்தன்மை' படக்கதையின் ஆக்கம் நன்றாக இருந்தாலும் நோக்கம் பாழாய்ப் போனதாக இருக்கிறது. 'அப்பா, உங்க பெருந்தன்மையின் தலையில் இடி விழ' என்ற அந்தக் கடைசி வரிகள் பெருந்தன்மையுடன் செயல்படும் நல்ல மனிதர்களைச் சபிப்பது போல் உள்ளது. கதையின் நோக்கம் நீதியாக இருந்திருக்குமேயானால், அந்த மகன், தனக்கு வேலை கிடைக்காமல் போனாலும் பரவாயில்லை; தந்தையின் மரியாதையைக் காப்பாற்ற முடிந்ததே என்று எண்ணிப் பெருமையல்லவா பட்டிருக்க வேண்டும்?

சென்னை—18. இங்லி.

* கல்கி 5.7.87 இதழில் இடம் பெற்ற ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருள்வாக்கில் 'மர்க்கட கிசோர நியாயம், மார்ஜார கிசோர நியாயம்' என்ற தொடர்கள், 'மர்க்கட இசோர நியாயம்; மார்ஜார இசோர நியாயம்' என்று தவறுதலாக அச்சேறியிருந்தன. சமஸ்கிருதத்தில் 'கிசோர' என்ற சொல்லே 'குட்டி' என்று பொருள்படும்.

சென்னை—40. பி.ஆர். ஸ்ரீநிவாசன்.

* தமிழுக்கு வளம் சேர்க்கப் பேசியதோடு நில்லாமல், செயலிலும் தம் சொந்த வாழ்க்கையை நினைத்துப் பாராது, தம் வேலையை ராஜினாமாச் செய்துவிட்டுத் தமிழில் எதையும் கூற முடியும் — எழுத முடியும் என்று நிரூபிப்பதையே தம் இலட்சியமாக ஏற்றுக் கொண்டு, உலக அரங்கில் நான்காவது இடத்தில் தமிழ் கூரியர் புகழ் அடையக் காரணமா(யிருக்கும்)ன 'மணவை முஸ்தபா' பாராட்டப்பட வேண்டியவர்!

கோடிக்கரை. எஸ். மாணிக்கவாசகம்.

* கல்கி 5.7.87 இதழில் தராசு பதில்கள் பகுதியில் சிதம்பரத்தில் நடந்த சேக்கிழார் விழா பற்றிக் குறிப்பிட்ட தாங்கள், நான் பேசும்போது அங்கு வந்திருந்த 'அமைச்சர் பெருமானும் சேக்கிழார்தான்' என்று கூறியதாகச் சுட்டிக்காட்டி, அது பற்றித் தங்களது கருத்துக்களை வெளியிட்டிருக்கிறீர்கள். 'தாடி வைத்தவரெல்லாம் தாகூர்' என்பதுபோல் சிலர், பாராட்டு விழாக்களில் பேசுவதை ஒரு வழக்கமாகக் கொண்டிருப்பதைத் தாங்கள் கண்டித்திருப்பது வரவேற்கத்தக்கதுதான். ஆனால், நான் இதில் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம் அன்று நான் இம்மாதிரி உபமான உபமேயங்களைப் பயன்படுத்தவேயில்லை என்பதுதான். அமைச்சர் அவர்கள் மீது பெருமதிப்புக் கொண்டவன் நான். இருப்பினும் அவரை அன்று நான் 'சேக்கிழாரடிகளாக' ஆக்கவே இல்லை.

பாண்டிச்சேரி. கி. வேங்கடசுப்ரமணியன்

(நீங்கள் கேட்டவை பகுதியில் மேற்படி பதில் இந்தியன் எக்ஸ்பிரஸ்ஸில் வெளியான செய்தியின் அடிப்படையில் எழுதப்பட்டது. — ஆசிரியர்)

"உங்கள் மாவட்டத்தைப் பிரித்துத் திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்டு அமையப் போகும் மாவட்டத்திற்குச் சம்புவராயர் மாவட்டம் என்று பெயர் வைப்பதை வரவேற்கிறீர்களா?'' என்று திருவண்ணாமலை நகர சபைத் தலைவர் எஸ். முருகய்யனிடம் (தி. மு. க.) கேட்டோம்.

''முதலில் குழந்தை பிறக்கட்டும், அப்புறம் பெயர் வைப்பதைப் பற்றி யோசிக்கலாம். கடந்த 74 இல் 'ரீ — ஆர்கனைசேஷன் கமிட்டி' ஒன்று அமைத்துப் பெரிய மாவட்டங்களைப் பிரிக்க வேண்டும் என்று அரசு தீர்மானித்தபோது, அந்த லிஸ்டில் முதலாவதாக இருந்தது, வட ஆற்காடு மாவட்டம் தான். 'பிரிப்பதற்கு ஐந்து கோடி ரூபாய் செலவாகும். அது கிடைத்ததும் பிரிக்கப்படும்' என்று அப்போது அமைச்சராக இருந்த ப. உ. சண்முகம் கூறினார். அவர் இப்போதும் அமைச்சர்தான். அதற்குப் பின்னால் பல மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு விட்டன. வடாற்காடு மட்டும்தான் பிரிக்கப்படவில்லை.''

"திருத்தலமான திருவண்ணாமலையில் டூரிஸ்டுகள் வருகை அதிகம். சுகாதார நிலைமை படுமோசமாக இருக்கிறதே?''

''எங்கள் நகரசபைக்கென ஒரு சுகாதார அதிகாரி இருக்கிறார். எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும் எங்கள் பேச்சைக் கேட்க மாட்டேன் என்கிறார். நகரை ஒரு ரவுண்ட் அடித்தால்தானே எங்கே சரியில்லை என்பது தெரியவரும்? அவர் அலுவலக அறையை விட்டே வெளியில்வரமாட்டார். எங்கள் நகர சபைக்குக் குறைந்தபட்சம் இருநூறு துப்புரவாளர்களாவது தேவை. ஆனால், இருப்பதோ நூற்று நாற்பது பேர்தான். அவர்களையும் சரியாக வேலை வாங்கத் தெரியாத அதிகாரிகள். எங்கள் நகர சபையில் பல மாதங்களாகக் கமிஷனரே இல்லை. யாரும் வந்து வேலையில் ஜாயின் பண்ணவே தயங்குகிறார்கள். காரணம், அரசியல் தலையீடுகள் தான். இந்த ஊரில்தான் அதிகாரிகள், மந்திரி மருமகனுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவல நிலை.''

''சாலைகளெல்லாம் படுமோசமாக இருக்கின்றனவே? அதுவும் பஸ்கள் செல்லும் கட்டபொம்மன் சாலை படுமோசம்!''

''ஒன்பது சாலைகளைச் செப்பனிட டெண்டர் விட்டிருந்தோம். டெண்டர் எடுத்தவர்கள் எவரும் வேலை செய்யவில்லை. இப்போதுதான் ஒருவர் மட்டும் வேலை செய்து கொண்டிருக்கிறார். கட்டபொம்மன் சாலையை எடுத்தவர் வேலை செய்யாமல் ஓடிவிட்டார். நாங்கள் என்ன செய்ய முடியும்? காண்ட்ராக்டர்களுக்கு நகரசபை வேலை என்றாலே கொஞ்சம் உதறல்தான். காரணம் பணம் கிடைக்கத் தாமதமாகும்! உரிய காலத்தில் அரசிடமிருந்து கிடைக்க வேண்டிய மான்யத் தொகை எங்களுக்குக் கிடைப்பதில்லை. உதாரணமாக 84 — க்கான மான்யம் 86 — இல்தான் வந்தது என்றால், நாங்கள் என்னதான் செய்ய முடியும்?'' என்று அங்கலாய்த்தார் முருகய்யன்.




பிறகு எங்கே பயப்படுகிறார்கள்!

— கௌசல்யா

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கெ. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 431543 434157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 473389.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ 78/—; வெளி நாடு கப்பல் தபால் ரூ 250/—; விமானத் தபால் ரூ 650/—. (ஆறு மாதச் சந்தா ஏற்கப்படும்.)

நியூட்ரமுல் சக்தி





க்ரீம் வளம்கொழிக்கும் அமுல் பால், நலம் தரும் மால்ட், இன்சுவைமிக்க கோக்கோ, கும்மாகும்! இவற்றின் நற்பயனுக்குத் தான் வலியூட்டுகிறது நியூட்ரமுல். எதனுடனும் மிஞ்சமுடியாத சுவையிலேயே கிடைக்கிறது.

	1000 gms.	500 gms.	Refil.
நியூட்ரமுல்	37.21	19.29	–
மால்டோவா	43.75	24.65	22.79
பூஸ்ட்	–	24.89	23.06
போர்ன்விடா	47.48	24.67	22.81

Prices as on 1st January, 1987. Local taxes extra.



அமுல் தயாரிப்பு

நியூட்ரமுல்

விளங்குங்கள் நியூட்ரமுல் வஸ்தாத்தாக

விற்பனை விநியோகம்:
குஜராத் கோ-ஆபரேட்டிவ் மில்க் மார்க்கெட்டிங் பெட., லிட்.,
ஆனந்-388 001.

daCunha/GCM/135/86 TAM

